



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:212 | 16-02-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

16.02.2026 மாசி 4
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.34

திதி:
இன்று மாலை 6.26 வரை சதுர்த்தசி பின்பு அமாவாசை.

நட்சத்திரம்:
இன்று இரவு 9.41 வரை திருவோணம் பின்பு அவிட்டம்.

யோகம் :
இன்று அதிகாலை 4.24 வரை வ்யாதீபாதம் பின்பு வரீயான்.

கரணம் :
இன்று காலை 6.08 வரை பத்திரை பின்பு மாலை 6.26 வரை சகுனி பின்பு சதுஷ்பாதம்

அமிர்தாதி யோகம் :
இன்று இரவு 9.41 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 9.41 வரை திருவாதிரை பின்பு புனர்பூசம்.

நல்ல நேரம்
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
காலை 7.30 –9.00.

எமகண்டம்
காலை 10.30 – 12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று சுபமுகூர்த்த நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

### இந்து சமய அறநிலையத் துறை சார்பில் அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 7 அறிவிப்புகள்






**சென்னை, பிப்.16:** சென்னையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற "அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026"-யை தொடங்கி வைத்து, அவர் ஆற்றிய உரையில், கடந்த ஆண்டு 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட அனைத்துலக முத்தமிழ் முருகர் மாநாட்டை நடத்தி எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்தோம். இன்றைக்கு அனைத்துலக வள்ளலார் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம். வள்ளலாரை ஏன் நாம் உயர்த்திப் பிடிக்கிறோம் என்றால், "வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று சொல்லி, உலகுக்கே 'தனிப்பெரும் கருணை' என்ற அன்பு வழியை போதித்தவர் வள்ளலார் அவர்கள்! அவரது வழியில்தான், நமது திராவிட மாடல் அரசும், ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஏழை மக்களின் பசியை 'பிணி' என்று சொன்னார் வள்ளலார்! அந்தப் பிணியை ஒழிக்கும் மருந்துதான் நமது திராவிட மாடலின் திட்டங்கள்! அதனால்தான், பள்ளிகளில், காலை உணவுத் திட்டம் முதல் முதியோர்களுக்கான தாயுமானவர் திட்டம் வரை, அனைத்து வயதினரையும், கருணையோடு அரவணைக்கின்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

வள்ளலார் தமிழ்ச்சமூகத்தில் உதித்த புரட்சியாளர்; மாண்பாளர்! அவரைப் போற்ற வேண்டியது, தமிழ்நாட்டின் கடமை! என்னுடைய பேச்சுகளிலும், சமூக வலைத்தளப் பதிவுகளிலும் வள்ளலாரை நிறைய நான் மேற்கோள் காட்டியிருக்கிறேன். வள்ளலாரின் கோட்பாடுகளை மேற்கோள் காட்டுவது மட்டுமல்ல, அவற்றை செயல் வடிவத்தில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவற்றையெல்லாம் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், சென்னையில் வள்ளலார் வாழ்ந்த பகுதிக்கு, 'வள்ளலார் நகர்' என்று பெயர் வைத்தார். அந்த வள்ளலார் நகர் பேருந்து நிலையத்தை 10 கோடி ரூபாய் செலவில் புனரமைத்திருக்கிறோம். கிருஷ்ணராஜ் வானவராயர் சொன்னார், நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதும் வள்ளலார் பிறந்தநாளை, 'தனிப்பெருங்கருணை நாளாக' அறிவித்தோம்.

வள்ளலாரின் 200-ஆவது பிறந்தநாள் - தருமசாலை நிறுவப்பட்ட 156-ஆவது ஆண்டு தொடக்கம் - ஜோதி தரிசனம் காட்டுவித்த 152-ஆவது ஆண்டு ஆகியவற்றை இணைத்து, 2022 அக்டோபரில் இருந்து 2023 அக்டோபர் வரை தொடர்ச்சியாக ஓராண்டு காலம் முப்பெரும் விழாக்களை கொண்டாடினோம். அதுமட்டுமல்ல, 'வள்ளலார் 200' என்ற பெயரில் இலச்சினை, அஞ்சல் உறை, சிறப்பு மலர் வெளியிட்டு அன்னதானம், மாணவர்களுக்கு இலக்கியப் போட்டிகள் என்று பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம். வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லத்தை புனரமைத்தோம். தைப்பூசத்தை முன்னிட்டு, வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில், மூன்று நாட்கள் அங்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இன்றைக்கு திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு "வள்ளலார் நெடுஞ்சாலை" என்று பெயர் சூட்டி திறந்து வைத்திருக்கிறோம். இந்தச் சாதனைகளின் தொடர்ச்சியாகதான், வள்ளலார் பற்றாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில், அவரின் உயரிய கருத்துகளை, வாழ்க்கை நெறிகளை, உலகெங்கும் போற்றிடும் நோக்கத்துடன் இன்று, அனைத்துலக வள்ளலார் மாநாடு நடத்தப்படுகிறது.

இந்த மாநாட்டிற்கு வந்துவிட்டு புதிய அறிவிப்புகளை வெளியிடாமல் சென்றால், சேகர்பாபுவுக்கும் நிம்மதி இருக்காது எனக்கும் திருப்தி இருக்காது. அதனால், ஏழு அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன். முதல் அறிவிப்பு இந்த அனைத்துலக வள்ளலார் மாநாடு நடைபெற்றதை குறிக்கின்ற விதமாக இந்த பள்ளி வளாகத்தில், நினைவுத் தூண் அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு வடலூரில், சன்மார்க்க பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தப்படும். அந்தப் பள்ளியில் திருவருட்பா இசைப்பயிற்சியும் அளிக்கப்படும். மூன்றாவது அறிவிப்பு வடலூரில், வள்ளலார் பெயரில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும். நான்காவது அறிவிப்பு ஸ்பிரிச்சுவல் அல்-கெமி என்ற வள்ளலார் புத்தகம் அறநிலையத் துறை பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்படும். ஐந்தாவது அறிவிப்பு வள்ளலார் பிறந்தநாளையொட்டி ஆண்டுதோறும் மூன்று நாட்கள் விழா நடத்தப்படும். ஆறாவது அறிவிப்பு மேட்டுக்குப்பம், மருதூர், கருங்குழி ஆகிய இடங்களில், 'வள்ளலார் அன்னதான கூடங்கள்' திறக்கப்படும். ஏழாவது அறிவிப்பு கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் அமைந்து வரும் பூங்காவுக்கு 'வள்ளலார் பூங்கா' என பெயர் சூட்டப்படும்.

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தானே! அதேபோல். இங்கு கிருஷ்ணராஜ் வானவராயர் சொன்ன கோரிக்கைகள் உண்டு. தலைநகர் சென்னையில், வள்ளலார் ஆய்வு மையம் அமைக்கப்படும் என்பது. அந்த ஆய்வு மையம் இந்து சமய அறநிலையத் துறையின் வளாகத்தில் அமைக்கப்படும். மற்ற கோரிக்கைகளும் நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

இங்கே கூடியிருக்கும் அன்பர்கள் எல்லோரிடத்திலும் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, வள்ளலாரைப் போற்றுவதோடு, நம்முடைய பணி நின்றுவிடக் கூடாது; அவருடைய நோக்கங்களை மக்கள் முழுமையாக உணர்ந்து, கடைப்பிடிக்க பாடுபட வேண்டும்! அதற்கு இந்த மாநாடு வழி வகுக்கவேண்டும்.

ஏனென்றால், நம்முடைய பண்பாட்டு அடையாளங்களுக்கு வேறு வர்ணம் பூச நினைக்கிறார்கள், வள்ளலாரின் நோக்கங்களை சிதைத்திட நாம் அனுமதிக்க கூடாது! பிரிவினைச் சக்திகளுக்கு ஒருபோதும் இடம் கொடுக்காமல், அன்பும் - பண்பும் - அறனும் - கருணையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க உழைப்போம்! சமத்துவம் போற்றும் அன்பு வழியாம் வள்ளலார் நெறி எங்கெங்கும் பரவட்டும்! என்றென்றும் நிலைக்கட்டும்! அவர் ஏற்றி வைத்த ஜோதியைப் போல சுடர்விட்டும் - அணையாத அடுப்பைப் போல அனைவரின் தேவைகளை நிறைவேற்றி, இடர் போக்கும் இனிய அரசாகவும், நம்முடைய திராவிட மாடல் அரசு என்றென்றும் திகழும் என்று கூறி, விடை பெறுகிறேன்.

# பிப்.23இல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு



**சென்னை, பிப். 16:** தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 23ஆம் தேதி வெளியிடப்படும் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய உச்சநீதிமன்றத்தால் WP(C) எண் 1072/ 2025 மற்றும் 1145/ 2025 ஆகிய வழக்குகளில் 29.01.2026 அன்று வழங்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையமானது, 30.01.2026 அன்று வெளியிட்ட கடித எண் 23/ SIR/ 2026/ ERS -ல், "முரண்பாடுகள்" (Logical Discrepancies) என்ற பிரிவில் இடம்பெற்றுள்ள நபர்களின் பெயர் பட்டியலை கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்கள், பொது இடங்கள் மற்றும் தாலுக்கா/ துணை பிரிவு அலுவலகங்கள், நகரப் பகுதிகளில் உள்ள வார்டு அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில் வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்தியது.

மேலும், இம்முரண்பாடுகள் பிரிவில் பாதிக்கப்படக்கூடிய நபர்கள், முரண்பாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள், உரிய விளக்கத்துடன் தங்களது ஆவணங்களை / மறுப்புரைகளை நேரில் அல்லது தங்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி (வாக்குச்சாவடி முகவர்கள் உட்பட) மூலமாக சமர்ப்பிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் அறிவுறுத்தியது.

இதற்கமைவாக, இந்திய உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி முரண்பாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டு, அடுத்த 10 நாட்களுக்குள் தொடர்புடைய நபர்கள் தங்களது ஆவணங்களை / மறுப்புரைகளை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது, 01.01.2026-ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision - SIR) தொடர்பான இறுதி வாக்காளர் பட்டியல் 23.02.2026 அன்று வெளியிடப்படும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். முன்னதாக தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 17ஆம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது பிப்.23ஆம் தேதிக்கு தள்ளிப்போய் உள்ளது.

## நாளை தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் தாக்கல்

**சென்னை, பிப்.16:** தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் வரும் 17 ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சபாநாயகர் அப்பாவு அளித்த பேட்டியில் கூறியதாவது:

பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 17 ஆம் தேதி கூடுகிறது. அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு இடைக்கால பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்வார். 2026-27 க்கான முன்பண மானிய கோரிக்கை, கூடுதல் செலவு மானிய கோரிக்கை 20 ஆம் தேதி வாசிக்கப்படும்.

சட்டப்பேரவை கூட்டத்தொடர் எத்தனை நாட்கள் நடத்தப்படும் என அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும். சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும்" என்றார். சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக கடைசிகூட்டத்தொடர் என்பதால் சில முக்கிய அறிவிப்புகள் இந்த கூட்டத்தொடரில் அறிவிக்கப்படும் என்ற எதிர்பாப்பு எழுந்துள்ளது. விவசாய கடன்கள் தள்ளுபடி, மகளிர் உரிமைத்தொகை உயர்வு உள்ளிட்டவை பற்றிய அறிவிக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

# பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி




**கொழும்பு, பிப்.16:** ஐசிசி டி20 உலகக் கோப்பைத் தொடரில் கொழும்புவில் நடைபெற்ற இன்றையப் போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் விளையாடின.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, இந்திய அணி முதலில் பேட் செய்தது.

இஷான் கிஷன் அதிரடி; பாகிஸ்தானுக்கு 176 ரன்கள் இலக்கு!

முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 175 ரன்கள் எடுத்தது.

இந்திய அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக அபிஷேக் சர்மா மற்றும் இஷான் கிஷன் களமிறங்கினர். அமெரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியில் அபிஷேக் சர்மா கோல்டன் டக் அவுட்டான நிலையில், இன்றையப் போட்டியில் அதிரடியாக விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இன்றையப் போட்டியிலும் டக் அவுட்டாகி அவர் ஏமாற்றமளித்தார்.

அதன் பின், இஷான் கிஷனுடன் திலக் வர்மா ஜோடி சேர்ந்தார். இஷான் கிஷன் அதிரடியில் மிரட்ட, திலக் வர்மா நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அதிரடியாக விளையாடிய இஷான் கிஷன் 27 பந்துகளில் அரைசதம் விளாசி அசத்தினார். அதிரடியாக விளையாடிய அவர் 40 பந்துகளில் 77 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 10 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் அடங்கும்.

இதனையடுத்து, திலக் வர்மா மற்றும் கேப்டன் சூர்யகுமார் யாதவ் ஜோடி சேர்ந்தனர். இந்த இணை நிதானமாக விளையாடி ரன்கள் சேர்த்தது. பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்கள் நெருக்கடி அளிக்கும் விதமாக பந்துவீசினர். திலக் வர்மா 24 பந்துகளில் 25 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஹார்திக் பாண்டியா முதல் பந்திலேயே ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார்.

கேப்டன் சூர்யகுமார் யாதவ் 29 பந்துகளில் 32 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஆட்டத்தின் இறுதியில் ஷிவம் துபே 17 பந்துகளில் 27 ரன்களும், ரிங்கு சிங் 4 பந்துகளில் 11 ரன்களும் எடுத்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய சைம் ஆயுப் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார். கேப்டன் சல்மான் அகா, உஸ்மான் தாரிக் மற்றும் ஷாகின் ஷா அஃப்ரிடி தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இந்தியா அபார வெற்றி! சூப்பர் 8 சுற்றுக்குத் தகுதி!


176 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 18 ஓவர்களில் 114 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

பாகிஸ்தான் அணியில் டாப் ஆர்டர் பேட்டர்கள் மிகவும் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டமிழந்தனர். ஷாகிப்ஸதா ஃபர்ஹான் 0 ரன், சைம் ஆயுப் 6 ரன்கள், கேப்டன் சல்மான் அகா 4 ரன்கள், பாபர் அசாம் 5 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

நிதானமாக விளையாடிய உஸ்மான் கான் 34 பந்துகளில் 44 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதில் 6 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கும். ஷாகின் ஷா அஃப்ரிடி 23 ரன்களும், ஷதாப் கான் 14 ரன்களும் எடுத்தனர்.







# திருக்குறள் குறள்-532

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு



நாள் தோறும் விடாமல்
வரும் வறுமை அறிவைக்
கொல்வது போல,
ஒருவனுடைய புகழை
அவனுடைய மறதிக்
கொன்று விடும்.

## சிந்திக்க ஒரு நொடி



அமைதி கூட சில
நேரம்......
மற்றவர்களின்
பார்வைக்கு
திமிராகவே
தெரியும்.....

**உஷா முத்துராமன்**

# உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் சிவராத்திரி வைபவம் முன்னிட்டு ஸ்ரீ சந்திரமவுலீஸ்வரருக்கு சிறப்பு பூஜை

**செய்யாறு, பிப்.16:**

செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் சிவராத்திரி வைபவம் முன்னிட்டு ஸ்ரீ சந்திரமவுலீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை வழிபாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீ சந்திரமவுலீஸ்வரர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். முன்னதாக மூலவரான ஸ்ரீகாமாட்சி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனையை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார். நிகழ்வில் லோகேஸ்வர சரஸ்வதி சுவாமிகள் கலந்து கொண்டார். பின்னர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.





சிவராத்திரி வைபவம் முன்னிட்டு திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# பருவதமலைக்கு செல்லும் பக்தர்கள் பாதுகாப்பு துறை அதிகாரிகள் ஆய்வு மற்றும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குதல்



**திருவண்ணாமலை, பிப்,16:**

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பருவதமலைக்கு பக்தர்கள் அதிக அளவு வருவதை முன்னிட்டு முன்னேற்பாடுகள் குறித்து துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டார்கள். பர்வதமலைக்கு வரும் பக்தர்களுக்கு கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ. சு. தி. சரவணன் அவர்கள் அன்னதானம் வழங்கினார்.

உடன் கலசப்பாக்கம் ஒன்றிய செயலாளர் A. சிவக்குமார் அவர்கள், வழக்கறிஞர் சுப்பிரமணியன் அவர்கள், அன்பரசி இராஜசேகரன் அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் அன்னதான நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# 75 மாணவர்களுக்கு சிந்தனை சிற்பி விருது..!



**வந்தவாசி, பிப் 16:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் முப்பெரும் விழா ( சிந்தனை சிற்பி விருது வழங்கும் விழா, ஆண்டு விழா, கலை இலக்கிய விழா) ரோட்டரி கிளப் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு ஓய்வு பெற்ற மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் எஸ். குமார் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் க.வாசு, ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி மா.கதிரொளி ஆசிரியர் முன்னிலை வகித்தனர். கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, மாவட்ட ரெட் கிராஸ் சங்க தலைவர் பா.இந்திரராஜன் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். மேலும் கல்வியே வாழ்க்கையின் திறவுகோல் என்று வலியுறுத்தினார். மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற 75 மாணவர்களுக்கு சிந்தனை சிற்பி விருது வழங்கப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில் கவிஞர் பூங்குயில் சிவக்குமார், தலைமை ஆசிரியை இரா. தேன்மொழி, ரெட் கிராஸ் சங்க உறுப்பினர் ஜி.விநாயகமூர்த்தி, பட்டதாரி ஆசிரியர்கள் ம.ரகுபாரதி, த.சாந்தி, சமூக ஆர்வலர்கள் வி. விஜயகுமார், வெங்கடாசலம், மலர் சாதிக், கேப்டன் பிரபாகரன், நூலகர் தமீம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக கலைச் சுடர்மணி பார்த்திபன் தமிழிசை பாடல்களை பாடினார். மாணவ மாணவியர் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வை கணினி ஆசிரியர் பா.சுரேஷ் தொகுத்து வழங்கினார். இறுதியில் முதுகலை ஆசிரியர் க.பூபாலன் நன்றி கூறினார்.

# பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு



மதுரை கோ.புதூர் புனித லூர்து அன்னை ஆலய விழா நிறைவு நாளில் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு செய்தனர்.

# சனி பிரதோஷ விழா



வாழப்பட்டு விருத்தகிரிஸ்வரர் திருக்கோயிலின் சனி பிரதோஷ விழா நடந்தது.

# ஹயக்ரீவர் சரஸ்வதி சிறப்பு யாகம்



பொதுத்தேர்வு எழுதும் பள்ளி மாணவ,மாணவிகளுக்காக சேலம் செவ்வாய்ப்பேட்டை பாண்டுரங்கநாதர் கோயிலில், ஹயக்ரீவர் சரஸ்வதி சிறப்பு யாகம் நேற்று நடந்தது.

# 12 அடி உயர சிவலிங்கத்துக்கு கரும்புகளால் அலங்கரித்து சிறப்பு பூஜைகள்



சேலம் பொன்னம்மாபேட்டை கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் உள்ள 12 அடி உயர சிவலிங்கத்துக்கு கரும்புகளால் அலங்கரித்து சிறப்பு பூஜைகள் நடந்தது.

# திருமூர்த்திமலை அமணலிங்கேஸ்வரர் கோவிலில், பாரம்பரியமிக்க திருச்சப்பர ஊர்வலம்



உடுமலை அடுத்துள்ள திருமூர்த்திமலை அமணலிங்கேஸ்வரர் கோவிலில், மகா சிவராத்திரி விழாவையொட்டி பாரம்பரியமிக்க திருச்சப்பர ஊர்வலம் நடந்தது.

# ராமேசுவரம் கோயிலில் வடமாநில பக்தர்கள் கங்கைநீரால் அபிஷேகம்



மாசி மகா சிவராத்திரியான நேற்று ராமேசுவரம் கோயிலில் வடமாநில பக்தர்கள் கங்கைநீரால் அபிஷேகம் செய்து வழிபட்டனர்.

# புதிய வணிக வளாக கடை திறப்பு



திருப்பெரும்புதூர் நகராட்சி சிவன் தாங்கல் பகுதியில் ரூ.281 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வணிக






விழுப்புரம் மாவட்டம் அவலூர்பேட்டை அறம் வளர்த்த நாயகி சமேத ஸ்ரீஅகத்தீஸ்வரர் திருக்கோயிலில் மகாசிவராத்திரியை முன்னிட்டு அவலூர்பேட்டை சிவன் கோவிலில் பெண் குழந்தைகள் பரதநாட்டியம் சித்தகிரி பரதநாட்டிய குழுவினரால் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# "மாபெரும் ஒற்றை மலர்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா

**சேலம், பிப்.16:**

சேலம் கோகுல நாதா இந்து மகாஜன மேல்நிலைப் பள்ளியில் 15. 2. 2026 அன்று கவிஞர் அ. கார்த்திகேயன் எழுதிய "மாபெரும் ஒற்றை மலர்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா நடந்தது




மா. பாலசுப்பிரமணியன் தலைமையில், மருத்துவர்.ராம செல்வரங்கம் முன்னிலையில் நடந்த இந்த விழாவில்- எழுத்தாளர் மற்றும் அனைத்து இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சேலம் மாவட்ட தலைவர் வெ. தமிழழகன் துவக்க உரையாற்றினார். அ. முனவர்கான் நூலை வெளியிட, தாரை குமரவேலு நூலை பெற்றுக் கொண்டார்.

ரா.சிலம்பரசன் நூல் அறிமுகம் செய்தார். விழாவில் கவிஞர்கள் பா.தமிழ்ச்செல்வன், புகழேந்தி,கே. சி. செந்தில்குமார், சிவப்பிரசாத்,சுக பாலா, சிவனேசன், கண்ணன், செ.சி. இளந்திரையன், ஜெகன், குகை சிவா, செல்வராஜா, சிபி பிரசாத், முனைவர்வேலாயுதம்,வின்சென்ட் செண்பகராஜ், மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு



தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் நடந்த சமுதாய வளைகாப்பு விழாவில், 300 கர்ப்பிணிகளுக்கு தென்காசி கலெக்டர் கமல் கிஷோர் சீதன பொருட்களை வழங்கினார்.

# மயிலாடுதுறையில் 3-ஆம் நாள் மயூர நாட்டியாஞ்சலி வெளிநாட்டு கலைஞர்கள் பங்கேற்பு




மயிலாடுதுறை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் மகாசிவராத்திரியை முன்னிட்டு 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா அருள்மிகு மயூரநாதர் ஆலயத்தில் பிப்ரவரி 12 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

## 5 கோடி டன் சரக்கு கையாண்டு சென்னை துறைமுகம் சாதனை: தலைவர் விஸ்வநாதன் தகவல்

**சென்னை, பிப்.16:**

சென்னை துறைமுகம் நடப்பு நிதி ஆண்டில் 5 கோடி டன் சரக்குகளை கையாண்டு சாதனை புரிந்துள்ளது. இதன் மூலம் நாட்டின் 3வது பெரிய இடத்தில் உள்ளது.படிப்படியாக 24 கப்பல்களை நிறுத்தும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. நடப்பு நிதியாண்டில் சரக்குகளை கையாளுதலில் புதிய சாதனை படைத்துள்ளது. இது குறித்து நிறுவனம் ஒரு அறிக்கையில், 'இந்நிறுவனம் நடப்பு நிதியாண்டில் நேற்று வரை 5 கோடி டன் சரக்குகளை கையாண்டுள்ளது. முந்தைய ஆண்டைவிட, 18 நாட்கள் முன்பே இந்த மைல் கல்லை எட்டியுள்ளது. இந்த சாதனை துறைமுகத்தின் மேம்பட்ட செயல்பாட்டுத் திறன், நிலையான வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை காட்டுகிறது. கண்டெய்னர்கள், கச்சா எண்ணெய், உரம் ஆகியவை அதிகம் கையாளப்படுகின்றன" என்று கூறியுள்ளது. இந்நிறுவனம் மொத்தம் 10.67 லட்சம் கண்டெய்னர்களை கையாண்டுள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டைவிட ஒப்பிடுகையில், 7.05% அதிகமாகும். இந்த சாதனைக்கு ஆதரவாக இருக்கும் துறைமுக பங்குதாரர்கள், ஊழியர்களுக்கு நிறுவனத்தின் தலைவர் விஸ்வநாதன் நன்றி கூறினார்.

## தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் சோழர் அருங்காட்சியகம்: ஸ்டாலின் அடிக்கல்

**சென்னை, பிப். 16:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (13ந் தேதி) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் அருங்காட்சியகத் துறையால் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 50 ஏக்கரில் 56 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மாபெரும் சோழர் அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டினார். சோழர்களின் மகத்தான பங்களிப்புகளை நினைவுகூரும் வகையில், சோழர் காலக் கலைப்பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பாதுகாத்து எதிர்காலத் தலைமுறைகளுக்காக காட்சிப்படுத்தும் நோக்கில், 202324 ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

இம்மாபெரும் சோழர் அருங்காட்சியகத்தில், பண்பாடு மற்றும் வரலாற்றுச் சிறப்பு, சங்ககாலச் சோழர்கள், சமயங்களுக்கு அளிக்கப்பட்ட ஆதரவு, நிருவாகமும் ஆட்சிமுறையும், கட்டடக்கலைச் சிறப்பு, நகரமைப்பு, நீர்மேலாண்மை, நில மேலாண்மை, கலை மற்றும் பண்பாடு (சோழர் கால செப்புப் படிமங்கள் மற்றும் கற்சிற்பங்கள்), சமூக வாழ்வு, பொருளாதாரம், இலக்கியம், கடல்கடந்த வாணிபம், வெளிநாட்டுப் படையெடுப்புகள், கடற்படை வலிமை மற்றும் இராணுவத் திறன் ஆகிய தலைப்புகளில் தனித்தனி காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட உள்ளன.

மாபெரும் சோழர் அருங்காட்சியகம், சோழர் கால பண்பாட்டு முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துச் சொல்லும் பண்பாட்டு மையமாகவும், கல்வி, ஆய்வு மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான முன்னோடி மையமாகவும் அமைக்கப்பட வுள்ளது. இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன், அருங்காட்சியகத் துறை இயக்குநர் கவிதா ராமு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தவெகவில் விருப்ப மனு சமர்ப்பிக்க கால அவகாசம் 20ந் தேதி வரை நீட்டிப்பு

**சென்னை, பிப். 16:**

தவெக பொதுச்செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள் தங்களுக்கான விருப்ப மனுவைப் பெறுவதற்கும் அதனைச் சமர்ப்பிப்பதற்குமான கடைசித் தேதி இன்று (14.02.2026) என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக, வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பெரும்பாலான கழகத் தோழர்களால் விருப்ப மனுவைச் சமர்ப்பிக்க முடியாமல் போனதாகத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே தோழர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, விருப்ப மனுவைப் பூர்த்தி செய்து அளிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

## சூர்யா, தனுஷ், விஜய்சேதுபதி, ஜோதிகா, சாய் பல்லவி உள்பட 433 பேருக்கு தமிழக அரசின் திரைப்பட விருது




**சென்னை, பிப்.16:**

சூர்யா, தனுஷ், விஜய்சேதுபதி, ஜோதிகா, சாய்பல்லவி, பார்த்திபன் உள்பட 433 பேருக்கு தமிழக அரசின் திரைப்பட விருதுகளை துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். விருதாளர்களுக்கு தலா 1சவரன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது.

'அசுரன்' படத்தயாரிப்பாளர் 'கலைப்புலி' எஸ்.தாணுவுக்கும், 'கோமாளி' படத் தயாரிப்பாளர் ஐசரி கணேஷ்க்கு விருது வழங்கப்பட்டது. கே.ஆர்.விஜயா, வெண்ணிற ஆடை நிர்மலா, லதா, எஸ்.வி.சேகருக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கப்பட்டது. வெள்ளித்திரைக்கலைஞர்கள் 223 பேருக்கும், சின்னத்திரைக் கலைஞர்கள் 180 பேருக்கும், திரைப்படக் கல்லூரி மாணவர்கள் 30 பேருக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் நட்சத்திரக் குவியலுக்கு இடையில் மிகச் சிறப்பாக நடந்தது.

கடந்த 2016 முதல் 2022 வரை 7 ஆண்டுகளுக்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகள், 2014 முதல் 2022 வரை 9 ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள், 2015-2022 வரை 6 கல்வியாண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விருதுகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தமிழக அரசால் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூ.2 லட்சம், இரண்டாம் பரிசு ரூ.1 லட்சம், மூன்றாம் பரிசு ரூ.75,000 மற்றும் சிறப்புப் பரிசாக ரூ.75,000 வழங்கப்பட்டது.

மேலும், பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் படத்துக்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 லட்சம் வழங்கப்பட்டதுடன், சிறந்த நடிகர், நடிகை, தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 1 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

அதேபோல், சின்னத்திரை விருதுகளில் சிறந்த நெடுந்தொடர்களுக்கு முதல் பரிசாக ரூ.2 லட்சம், இரண்டாம் பரிசு ரூ.1 லட்சம், ஆண்டின் சிறந்த சாதனையாளர் பரிசு ரூ.1 லட்சம், ஆண்டின் வாழ்நாள் சாதனையாளர் பரிசு ரூ.1லட்சம் மற்றும் சிறந்த கதாநாயகன், கதாநாயகி, தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 1 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தலா ரூ.25,000 ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

விழாவில் இயக்குநர்கள் எச். வினோத், மாரி செல்வராஜ், லோகேஷ் கனகராஜ், பாண்டிராஜ், நடிகர்கள் சூர்யா, கார்த்திக், தனுஷ், விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன், நடிகைகள் சாய் பல்லவி, கீர்த்தி சுரேஷ், மஞ்சு வாரியார், ஊர்வசி, கே.ஆர்.விஜயா, வடிவுக்கரசி, இசையமைப்பாளர்கள் ஏ.ஆர். ரஹ்மான், ஆதி, சந்தோஷ் நாராயணன் உள்ளிட்ட திரைத்துறையினருக்குபல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன.

மூத்த நடிகைகள் கே.ஆர். விஜயா, வெண்ணிற ஆடை நிர்மலா, லதா, நடிகர் எஸ்.வி.சேகருக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்கப்பட்டது. 'கோமாளி' படத்தின் தயாரிப்பாளர் ஐசரி கணேஷ், சிறந்த திரைப்படத் திற்கான விருது பெற்றார்.

விருது பெற்றவர்களில் சின்னத்திரைக் கலைஞர்கள் 180 பேர், திரைப்படக் கல்லூரி மாணவர்கள் 30 பேர்.

விழாவில்உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

திரைத்துறையினுடைய வளர்ச்சிக்கும், திரைக்கலைஞர்களின் முன்னேற்றத்துக்கும் நம்முடைய அரசு என்றைக்கும் துணை நிற்கும். குறிப்பாக, கடந்த 5 வருடத்தில் மட்டும், நம்முடைய அரசு 805 உறுப்பினர்களுக்கு சுமார் 47 லட்சம் ரூபாய்க்கான கல்வி உதவித்தொகை, விபத்துக்காப்பீடு, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகைஎன்றுஏராளமான நலத்திட்டங்களை கொடுத்திருக்கிறது. தமிழ் திரைப்படங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவும், உலக திரைப்படங்களை, தமிழ் ஆடியன்ஸ்க்கு கொண்டு வந்து சேர்க்கவும், நம்முடைய அரசு உங்களுக்கு துணையாக இருக்கின்றது. கடந்த 4 வருடத்தில் மட்டும், இன்டர்நேஷனல் பிலிம் பெஸ்டிவல் நடத்த சுமார் 4 கோடியே 15 லட்சம் ரூபாயை முதலமைச்சர், மானியமாக தந்திருக்கின்றார். இப்படி கலை உலகினருக்கு கழக அரசு என்றைக்குமே உற்றதுணையாக இருந்து வருகின்றது என்றார்.

## வந்தவாசி வட்டத்தில் வீடு இடிந்து பலியான அண்ணன், தம்பி குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் நிதி: ஸ்டாலின் உத்தரவு

**சென்னை, பிப்.16:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், இளங்காடு கிராமத்தில் பழைய தொகுப்பு வீட்டினை இடிக்கும்போது கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த இரண்டு சிறுவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், இளங்காடு கிராமம், தண்டலம் சாலையில் வசித்து வரும் முனுசாமி என்பவரது மகன் முனியன் என்பவர் நேற்று (13ந் தேதி) காலை 7 மணியளவில் புதிய வீடு கட்டுவதற்காக தனது பழைய தொகுப்பு வீட்டினை இடிக்க முற்பட்டபோது எதிர்பாராதவிதமாக கட்டிட இடிபாடுகளில் சிக்கி வந்தவதாசி வட்டம், வழூர் கிராமத்தைச் சேர்ந்த மேற்படி முனியன் என்பவரின் மகள் வழி பேரன்கள் செல்வன். அபினேஷ் (வயது 16) மற்றும் செல்வன். முகேஷ் (வயது 14) ஆகிய இரண்டு சிறுவர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமானச் செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் காயமடைந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வந்தவாசி வட்டம், இளங்காடு கிராமத்தைச் சேர்ந்த சீதாராமன் என்பவரின் மகன் ஸ்ரீராம் (வயது 8) என்ற சிறுவனுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு சிறுவர்களின் பெற்றோருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவனுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புவர்கள்.


"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### சட்டென எழுந்தால் தலை சுற்றுகிறதா... உங்கள் உடல் சொல்லும் ரகசியம் இதோ!



இன்றைய காலத்தில் அலுவலக வாழ்க்கை என்பது பெரும்பாலும் நீண்ட நேரம் நாற்காலியில் அமர்ந்து கணினி முன் வேலை செய்வதோடு முடிகிறது. காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை ஒரே இடத்தில் அமர்ந்து இருப்பது உடலுக்கு பெரிய சுமையாக மாறுகிறது. முதுகுவலி, கழுத்து வலி, உடல் எடை அதிகரிப்பு, மன அழுத்தம் போன்ற பிரச்னைகள் இதன் விளைவுகளாகத் தோன்றுகின்றன.

இதற்கு ஒரு எளிய, சுவாரஸ்யமான, சமீபத்தில் பேசப்படும் தீர்வுதான் OFFICE FROGGING.

OFFICE FROGGING என்றால் என்ன?

FROGGING என்ற சொல் தவளையின் தாவுதலை நினைவூட்டுகிறது. அதைப் போலவே, OFFICE FROGGING என்பது நீண்ட நேரம் அமர்ந்து இருப்பதை தவிர்த்து, சிறிய இடைவெளியில் சிறிய உடற்பயிற்சி தாவல்கள் அல்லது ஸ்குவாட்ஸ் போன்ற அசைவுகளைச் செய்வது.

உதாரணமாக:

ஒவ்வொரு 45 நிமிடத்துக்கும் 10 முதல்15 ஸ்குவாட்ஸ் செய்வது

மேசையின் அருகே நின்று கால்களை மடக்கி நேராக நிற்பது

லிஃப்ட் பயன்படுத்தாமல் படிக்கட்டில் ஏறுவது

சிறிய FROG JUMP போல மடக்கி எழுவது

இவை அனைத்தும் உடலை சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவும்.

OFFICE FROGGING செய்வது எப்படி?

OFFICE FROGGING முறையை மெதுவாகத் தொடங்குவது சிறந்தது. தினமும் 5 முதல் 10 ஸ்குவாட்ஸ் செய்து ஆரம்பித்து, உடல் பழகிய பிறகு எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்கலாம்.

ஒவ்வொரு மணி நேரத்துக்கும் எழுந்து நின்று சிறிய அசைவுகள் செய்ய அலாரம் அல்லது மொபைல் நினைவூட்டலை அமைத்துக் கொள்வது சிறந்தது.

முழங்கால் வலி, முதுகு பிரச்னை அல்லது பிற உடல்நலக் குறைகள் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்ற பிறகே இந்த அசைவுகளை செய்ய வேண்டும்.

சுலபமாகச் செய்யக்கூடிய அளவிலான அசைவுகளைத் தேர்வு செய்து, உடைக்கு ஏற்ற பயிற்சிகளை மட்டுமே செய்ய வேண்டும். இதனுடன் போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் பழக்கத்தையும் இணைத்தால், உடல் சுறுசுறுப்பும் ஆரோக்கியமும் மேலும் மேம்படும்.

யாருக்கு இது மிகவும் உதவும்?

IT துறையில் பணிபுரிபவர்கள், நீண்ட நேரம் கணினி முன் அமர்ந்து வேலை செய்பவர்கள், WORK FROM HOME முறையில் இருப்பவர்கள் மற்றும் தினசரி உடற்பயிற்சி செய்ய நேரமில்லாதவர்கள் ஆகியோருக்கு OFFICE FROGGING மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தினசரி வேலை நேரத்திலேயே சிறிய உடல் அசைவுகளைச் சேர்ப்பதன் மூலம், சோர்வு குறைந்து, உடல் மற்றும் மன ஆரோக்கியம் மேம்படும்.

அலுவலக வாழ்க்கையில் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது சிரமமான ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் சிறிய மாற்றங்களே பெரிய பலனை தரும். OFFICE FROGGING என்பது அதற்கான ஒரு எளிய வழி.

## கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்பு தானம் செய்த 10 மாதக் குழந்தை

**பத்தனம்திட்டா, பிப்.16:**





கேரள மாநிலம் பத்தனம் திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த 10 மாத பெண் குழந்தை அலின் ஷெரின் ஆபிரஹாம். கடந்த 5-ம் தேதி குழந்தையின் தாய், தாத்தா, பாட்டி ஆகியோர் கோட்டயத்திலிருந்து திருவல்லாவுக்கு காரில் சென்றனர். அப்போது எதிரில் வந்த மற்றொரு கார் இவர்களின் கார் மீது மோதியது.

இதில் ஷெரினின் தாய், தாத்தா மற்றும் பாட்டி காயமடைந்தனர். படுகாயமடைந்த குழந்தை சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் மூளைச் சாவு அடைந்ததாக மருத்துவர்கள் அறிவித்தனர். இதையடுத்து, மருத்துவர்கள் குழந்தையிடமிருந்து கல்லீரல், 2 சிறுநீரகங்கள், இதய வால்வு, 2 கண்கள் ஆகியவற்றை தானமாக பெற்றனர். இதைத் தொடர்ந்து குழந்தையின் கல்லீரல், திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவமனையில் உள்ள 6 மாதக் குழந்தைக்குப் பொருத்தப்பட உள்ளது.

சிறுநீரகங்கள், திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் உள்ள மற்றொரு குழந்தைக்கு வழங்கப்பட்டது. இதய வால்வு மற்றும் கண்கள், சித்ரா இன்ஸ்டிடியூட் மற்றும் அமிர்தா மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்கு தானமாக வழங்கப்பட்டன.

இதன் மூலம் கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்பு தானம் செய்த பெருமை அலின் ஷெரினுக்கு கிடைத்துள்ளது. இதையடுத்து ஷெரின் தொடர்பான செய்திகள், புகைப்படங்கள், வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளன.

இதுகுறித்து கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கூறும்போது, "குழந்தை இறந்த துக்கத்தில் இருந்தபோதும், குழந்தையின் உறுப்புகளை பெற்றோர் தானமாக அளித்தது பாராட்டுக்குரியது. துயரத்தில் இருக்கும் குடும்பத்துக்கு மாநில அரசு துணை நிற்கிறது. அவர்களின் செயல் கேரளாவில் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தியுள்ளது" என்றார்.

## அரசு கொடுத்த ரூ.5 ஆயிரத்தை திருப்பி அனுப்பிய நபர்!

**சென்னை, பிப்.16:**

தமிழகத்தில் மகளிர் உரிமை த்தொகை பெற்று வரும் பெண்களுக்கு தேர்தல் காலத்தில் வரும் 3 மாத உரிமைத் தொகை மற்றும் கோடைகால ஊக்கத் தொகை ரூ.2 ஆயிரம் ஆகியவற்றை சேர்த்து ரூ.5 ஆயிரத்தை மொத்தமாக 1 கோடியே 31 லட்சம் பெண்களுக்கு வழங்கி தமிழக அரசு இன்ப அதிர்ச்சியை கொடுத்தது.

தமிழகம் முழுவதும் தமிழக அரசின் இந்த திடீர் பரிசுத்தொகை பேசு பொருளாக மாறி உள்ளது. அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் இதுபற்றி ஒவ்வொரு விதமாக பேசுகின்றன. இதையே சமூகநல ஆர்வலர் ஒருவர் வேறு விதமாக அணுகி இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

மதுரையை சேர்ந்த சங்கரபாண்டி என்ற அந்த சமூக ஆர்வலர் தனது மனைவி பெயருக்கு அரசு அனுப்பி இருந்த ரூ.5 ஆயிரம் பணத்தையும் மனைவி ஒப்புதலுடன் மணி ஆர்டர் மூலம் மீண்டும் அரசுக்கே திருப்பி அனுப்பி வைத்து உள்ளார்.

இதுபற்றி குறிப்பிட்டு உள்ள அவர் ‘கடன் சுமையுடன் இருக்கும் தமிழக அரசுக்கு என் பங்களிப்பாக இருக்கட்டும் என்று கடிதம் எழுதி உள்ளார். தன் பணத்தை திருப்பி அனுப்பியதை சமூக வலைத்தளங்களிலும் அவர் பதிவிட்டுள்ளார். இதுபார்வையாளர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

## சபரிமலையில் தரிசனத்திற்கு குவிந்த பக்தர்கள்

**சபரிமலை, பிப்.16:**

சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜை காலம் மட்டுமின்றி மாதாந்திர பூஜைகளுக்காக நடை திறக்கப்படும் காலத்திலும் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது. அதன்படி மாசி மாத பூஜைகளுக்காக கடந்த 12-ந் தேதி நடை திறக்கப்பட்டது முதல் சபரிமலையில் பக்தர்கள் அதிக அளவில் வந்து தரிசனம் பெற்று வருகின்றனர்.

13-ந்தேதி பொதுவேலை நிறுத்தம் காரணமாக கேரளாவில் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்ட போதிலும் சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் காணப்பட்டது. இந்த நிலையில் நேற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இருமுடி கட்டிய படி சபரிமலை வந்தனர்.

நேற்று சபரிமலையில் தந்திரி பிரம்மஸ்ரீ கண்டார் மகேஷ் மோகன் தலைமையில் படி பூஜையும் நடைபெற்றது. இதில் பக்தர்கள் பங்கேற்று தரிசனம் பெற்றனர். சபரிமலை வந்த பக்தர்களை பாதுகாப்பு போலீசார் ஒழுங்குபடுத்தி தரிசனம் செய்ய அனுப்பினர். சுமார் 4 மணி நேரம் வரிசையில் காத்திருந்து பக்தர்கள் ஐயப்பனை தரிசனம் செய்தனர். வருகிற 17-ந் தேதி வரை நடை திறந்திருக்கும். அன்று இரவு 10 மணிக்கு கோவில் நடை சாத்தப்படும்.

# நாடு முழுவதும் சிவாலங்களில் மகா சிவராத்திரி வழிபாடு கோலாகலம்

**சென்னை, பிப்.16:**





மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி திதியில் அம்பிகை சிவபெருமானை வணங்கியதாக கூறப்படும் நாளில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. பிரளய காலத்தில் ஜீவராசிகள் அழிந்துவிட்ட நிலையில், பரமேஸ்வரனை நினைத்து நான்கு ஜாமங்கள் உமாதேவி பூஜை செய்ததாகவும், இதேபோன்று சிவராத்திரி நாளில் பூஜிப்பவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பது ஐதீகம். சிவராத்திரியையொட்டி நாள் முழுவதும் விரதமிருந்து, சிவபுராணம் படிப்பதுடன் விடிய விடிய விழித்திருந்து சிவபெருமானை வழிபடுகின்றனர்.

மகாசிவராத்திரியை யொட்டி மயிலை கபாலீஸ்வரர், காஞ்சி ஏகாம்பரேஸ்வர், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர், சிதம்பரம் நடராஜர், மதுரை சுந்தரேஸ்வரர், நெல்லையப்பர் உள்ளிட்ட சிவாலயங்களில் சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள 12 ஜோதிர்லிங்க ஆலயங்களில் தமிழகத்தில் அமைந்துள்ள ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலும் ஒன்றாகும். காசிக்கு நிகராக கருதப்படும் இங்கு நாள்தோறும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள்.

இந்த கோவிலில் மகா சிவராத்திரி விழா விமரிசையாக கொண்டாடப்படும். அங்கு இந்த ஆண்டுக்கான மாசி மகா சிவராத்திரி திருவிழா கடந்த 8-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 7-ம்நாளான நேற்று காலை சுவாமி-அம்பாள் தங்க கேடயத்தில் எழுந்தருளி வீதி உலா வந்தனர். மாலை 5 மணிக்கு சுவாமி, அம்பாள் தங்கப்பல்லக்கில் முத்தங்கி சேவை அலங்கா ரத்தில் காட்சி தந்தனர்.

8-ம் நாளான மகா சிவராத்திரியான இன்று (ஞாயிற்றுக்கிழமை) சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. காலை 9 மணிக்கு நடராஜர் கேடயத்தில் எழுந்தருளலும், இரவு 9 மணிக்கு வெள்ளி தேரோட்டமும் நடைபெறுகிறது. அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்ட கோவில் நடையானது பகல் 1 மணி மற்றும் இரவு 8 மணிக்கு சாத் தப்படாமல் பகல் மற்றும் இரவு முழுவதும் திறந்து இருக்கும். ராமநாதசு வாமிக்கு சிவராத்திரி சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடக்கின்றன.

திருவிழாவில் 9-ம் நாளான நேற்று (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு மேல் சுவாமி-அம்பாள் தேரோட்டம் நடைபெறுகிறது. மாலை 5 மணிக்கு தங்கக்குதிரை வாகனத்தில் பஞ்ச மூர்த்திகளுடன் மேலத்தெரு மண்டகப் படிக்கு எழுந்தருளல் நடக்கிறது.

மகா சிவராத்திரியை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கோவிலில் குவிந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

# திருச்செந்தூர் கோவிலில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்: 4 மணி நேரத்துக்கும் மேல் காத்திருந்து சாமி தரிசனம்

**தூத்துக்குடி, பிப்.16:**



அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகாரத் தலமாகவும், ஆன்மீக சுற்றுலா தலமாகவும் விளங்கி வருகிறது.

இங்கு நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கின்றனர். திருவிழா மற்றும் சில முக்கிய தினங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை மற்றும் மகா சிவராத்திரியை முன்னிட்டு பக்தர்கள் வருகை அதிகமாக காணப்படுகிறது. அதிகாலை முதலே கோவிலில் குவிந்த பக்தர்கள், கடல் மற்றும் நாழிக்கிணறு தீர்த்தத்தில் புனித நீராடி சுமார் 4 மணி நேரத்துக்கும் மேல் வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

# மகா சிவராத்திரியையொட்டி ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவிலில் பக்தர்கள் தரிசனம்

**இராமேசுவரம், பிப்.16:**



ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் பிரசித்தி பெற்ற ராமநாத சுவாமி கோவில் உள்ளது. நாள்தோறும் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வெளி மாநிலத்தில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள்.

12 ஜோதி லிங்க ஸ்தலங்களில் ஒன்றான இக்கோவிலில் மகாசிவராத்திரி திருவிழா விமரிசையாக நடைபெறும். அதன்படி இந்த ஆண்டுக்கான விழா கடந்த 8-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் சுவாமி-அம்பாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

சிவராத்திரியான நேற்று கோவில் நடை அதிகாலை திறக்கப்பட்டு ராமநாத சுவாமிக்கும்-பர்வதவர்த்தினி அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து ஸ்படிக லிங்க பூஜை நடைபெற்றன.

கோவிலுக்கு வந்த ஏராளமான பக்தர்கள் ராமேசுவரம் அக்னி தீர்த்த கடற்கரையில், புனித நீராடிவிட்டு கடற்கரை மண்ணில் சிவலிங்கம் போன்று வடிவமைத்து வழிபட்டு வருகின்றனர். பின்னர் கோவிலுக்கு உள்ளே உள்ள சாமி மற்றும் அம்பாளை நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். வட மாநில பக்தர்கள் காசியில் இருந்து கொண்டு வந்த கங்கை நீரை அபிஷேகத்திற்கு வழங்குவதற்காக தலையில் சுமந்து கொண்டு வந்தனர். நேற்று அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் ராமேசுவரத்தில் குவிந்தனர். சிகர நிகழ்ச்சியான மகா சிவராத்திரி தேரோட்டம் இன்று நடக்கிறது. மகாசிவராத்திரியை முன்னிட்டு ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவில் நேற்று இரவு முதல் விடிய விடிய சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.



வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## அமெரிக்க கே.எல்.ஏ. இந்தியா ரூ.3,510 கோடி முதலீடு: ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்




**சென்னை, பிப்.16:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த கே.எல்.ஏ. கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனமான கே.எல்.ஏ. இந்தியா லிமிடெட் 3,510 கோடி ரூபாய் முதலீட்டு பொறுப்புறுதியுடன், சென்னையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்க நாட்டைத் தலைமையிடமாகக் கொண்ட கே.எல்.ஏ. கார்ப்பரேஷன், செமிகண்டக்டர் துறைக்கான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் உலகளாவிய முன்னணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், சிப் உற்பத்தியில் பயன்படும் ஆய்வு, அளவீடு மற்றும் தரவு பகுப்பாய்வு அமைப்புகளை உருவாக்குகிறது. இதன் தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் தயாரிப்புகளின் தரம், செயல்திறன் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்த உதவுகின்றன. உலகம் முழுவதும் உள்ள முன்னணி சிப் உற்பத்தியாளர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை வழங்கி, புதிய தலைமுறை செமிகண்டக்டர் வளர்ச்சியில் இந்நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.


கே.எல்.ஏ. கார்ப்பரேஷனின் துணை நிறுவனமான கே.எல்.ஏ. இந்தியா நிறுவனம், 3,600 கோடி ரூபாய் முதலீட்டு பொறுப்புறுதியுடன் சென்னையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க வளாகத்தை அமைக்க முதலமைச்சர் முன்னிலையில் இன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 12 ஏக்கர் நிலப்பரப்பளவிலான இந்த வளாகத்தில், உயர் செயல்திறன், கணினி தொழில்நுட்பம், செயல்முறை கட்டுப்பாடு, பொறியியல் மென்பொருள் போன்ற துறைகளில், மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. இதன்மூலம், அடுத்த 10 ஆண்டுகளில், சுமார் 4,000 உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தாரேஸ் அகமது, கே.எல்.ஏ. நிறுவனத்தின் தலைமை திட்ட அலுவலர் பாபி பெல், மூத்த இயக்குநர் சேக்ஹௌள இயோ, அரசு விவகாரங்கள் தலைவர் நூரி ஷ்ஃபேய், கே.எல்.ஏ. இந்தியா தலைவர் டொமினிக் டேவிட் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இரவில் நடமாட புதிய கண்கள் தயார்: இருட்டுக்கு இனி வேலையே இல்லை...

மனிதர்களுக்குப் பகலில் மட்டுமே பார்வைத் திறன் நன்றாக இருக்கும். சூரியன் மறைந்து இருள் சூழ்ந்துவிட்டால், நாம் செயற்கைவிளக்குகளையோ அல்லதுடார்ச்லைட்டையோ தேடி ஓடுகிறோம். இருட்டு என்றாலே மனித இனத்திற்கு ஒரு விதமான பயம் வருவது இயல்பு. இரவு நேரத்தில் நடமாடுவதற்குப் பூனைகள் அல்லது ஆந்தைகளுக்கு இருப்பது போன்ற சக்தி வாய்ந்த கண்கள் நமக்கு இல்லையே என்று நாம் எப்போதாவது ஏங்கியிருப்போம்.

ஆனால் இனிமேல் அந்தக் கவலை தேவையில்லை என்கிறார்கள் சீனாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள். நாம் தூங்கும்போது கண்களை மூடினாலும், எதிரே நடப்பதைத் துல்லியமாகப் பார்க்கும் ஒரு புதிய தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்துப் புரட்சி செய்துள்ளனர். இது ஏதோ மந்திரம் என்று நினைக்க வேண்டாம், இது முழுக்க முழுக்க அறிவியலின் அதிசயம்.

**நானோ துகள்கள்!**



சாதாரணமாக நாம் பார்வைக் குறைபாட்டைச் சரிசெய்ய அல்லது அழகிற்காகக் காண்டாக்ட் லென்ஸ்களைப் பயன்படுத்துவோம். அந்த லென்ஸ்களில் பயன்படும் பாலிமர் மூலக்கூறுகளுடன், மிக நுண்ணிய நானோ துகள்களை இணைத்து இந்தச் சாதனையை விஞ்ஞானிகள் நிகழ்த்தியுள்ளனர். இந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படைச் செயல்பாடு மிகவும் சுவாரஸ்யமானது.

நம் கண்களால் பார்க்க முடியாத அகச்சிவப்பு ஒளியை இந்த லென்ஸ்கள் ஈர்த்துக்கொள்கின்றன. பின்னர் அந்தப் புலப்படாத ஒளியை, மனிதக் கண்களுக்குப் புரியும் சாதாரணப் பச்சை நிற ஒளியாக இவை மாற்றிக் கொடுக்கின்றன. அதாவது ஒருமொழிபெயர்ப்பாளரைப் போல இந்த லென்ஸ் செயல்படுகிறது. இதனால் கும்மிருட்டிலும் நம்மால் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

**பேட்டரி வேண்டாம்!**

வழக்கமாக ராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் இரவு நேரத்தில் எதிரிகளைக் கண்காணிக்கப் பெரிய ‘நைட் விஷன்’ கண்ணாடிகளைத் தலையில் மாட்டியிருப்பார்கள். அவை மிகவும் கனமானவை என்பது மட்டுமல்லாமல், அவை இயங்குவதற்குப் பெரிய பேட்டரிகளும் மின்சாரமும் தேவைப்படும்.

ஆனால் சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள இந்த நானோ லென்ஸுகளுக்கு சார்ஜ் போட வேண்டிய அவசியமோ அல்லது பேட்டரியோ தேவையில்லை என்பது இதன் சிறப்பம்சமாகும். இதை அணிந்துகொண்டால் போதும், நம் கண்கள் தானாகவே இருளை ஊடுருவிப் பார்க்கும் சக்தியைப் பெற்றுவிடுகின்றன.

**மூடிய இமைகளுக்குள் ஊடுருவும்!**

இதில் மிகவும் ஆச்சரியப்பட வைக்கும் விஷயம் என்னவென்றால், இமைகளை மூடினாலும் காட்சிதெரியும் என்பதுதான். அகச்சிவப்பு கதிர்களுக்கு ஊடுருவும் தன்மை அதிகம்.

நம் கைவிரலை டார்ச் லைட்டில் வைத்தால் ரத்தம் சிவப்பாகத் தெரிவதைப் போல, அகச்சிவப்பு ஒளி நமது மெல்லிய கண் இமைகளைத் தாண்டிச் செல்லும் வல்லமை கொண்டது. எனவே இந்த லென்ஸை அணிந்திருப்பவர் கண்ணை மூடி இருந்தாலும், எதிரே ஏதேனும் அசைவு இருந்தாலோ அல்லது ஒளி இருந்தாலோ அதை உணர முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் தியான் சூ என்பவரின் தலைமையில் இந்த ஆய்வு மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்டமாக எலிகளின் கண்களில் இந்த லென்ஸைப் பொருத்திச் சோதனை செய்தபோது, அவை இருட்டில் மிகத் தெளிவாகவும் துடிப்பாகவும் இயங்கின. அதன் பிறகு மனிதர்களிடமும் சோதனை செய்யப்பட்டு, கண்களை மூடிய நிலையிலும் ஒளியை உணரும் திறன் அதிகரித்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

# சிறகடித்த தருணம்

இப்படி ஒரு காலம் திரும்புமா மீண்டும் வசந்தம் வீசுமா கவலை இல்லா மனம் கிடைக்குமா அனுபவி ராஜா அனுபவி என்ற நிலை வருமா என்பது போல இனித்தது .

நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாமில் கலந்து கொண்ட ஒரு மாணவன் தந்த நெகிழ்சியான கருத்து இந்த சிறுகதையாக வெளியாகிறது .

" நாட்டு நலப்பணி திட்டத்தின் சிறப்பு முகாம் ஒரு வாரம் நந்திமங்கலத்தில் நடைபெற்றது . இதில் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் வெவ்வேறு துறை சார்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர் .

ஒவ்வொரு நாளும் காலையில் தூய்மைப் பணி பிறகு தேநீர் நேரம் பிறகு கருத்தரங்கம் பிறகு மதிய உணவு பிறகு களப்பணி மீண்டும் தேநீர் நேரம் பிறகு கலந்தாய்வு கூட்டம் .

இப்படி ஏழு நாட்களும் கிராமத்தில் எழில் பசுமை ஆலய தரிசனம் என்று இனம் மதம் சாதி மொழி தாண்டி இன்பச் சுற்றுலா போன்று அழகாக நகர்ந்தது .

மாணவர்கள் ஒன்றாக கூடி பேசி சிரித்து விளையாடி ஆட்டம் போட்டு கிண்டலடித்து காலம் நகர்ந்தது மன மகிழ்ச்சியோடு .

வீட்டு கவலைகள் குடும்பப் பிரச்சனைகள் ஏழ்மை நிலை மறந்து மனதில் தூய்மை உடலில் புத்துணர்ச்சி வாழ்வில் புது வசந்தம் என்று பொங்கி எழுந்தது .

சேவையில் கிடைத்த மன நிறைவும் உத்வேகமும் கடல் கடந்து வெளிநாடு சென்று உழைத்தாலும் கிடைக்காது .

மூவர் அணி நால்வர் அணி ஐவர் அணி என்று களம் புகுந்து வியர்வை சிந்த உழைத்து விட்டு மரநிழலில் உணவை அனைவருமாக பகிர்ந்து உண்டு சிறிது சாய்ந்து ஓய்வெடுத்து மீண்டும் பணி செய்த போது சொர்க்கம் அருகில் தான் தெரிந்தது ..."

நிறைவு விழா நாளில் பல பெரிய மனிதர்கள் கையால் நினைவுப்பரிசு வாங்கிய தருணம் . மாணவர்கள் தங்கள் அனுபவங்களை தனித்தனியாக பகிரும் போது வெளிப்பட்ட ஆனந்தக் கண்ணீர் விலை மதிப்பில்லாதது .

பிரியா விடை ஊர் மக்கள் தந்த போதும் அனைவரிடமும் விடை பெற்று திரும்பும் போதும் எதையோ அந்த ஊரில் விட்டுச் சென்ற ஒரு ஆதங்கம் மனதில் தெரிந்தது .

வாய்ப்பு அளித்த கல்லூரி முதல்வருக்கும் ஒரு வாரம் வழி நடத்தி சென்ற ஆசிரியர்களுக்கும் கிராமத்தில் உதவி செய்த நல்ல உள்ளங்களுக்கும் , ஒவ்வொரு நாளும் புதுப்புது தலைப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்திய அனைத்து சிறப்பு விருந்தினர்களுக்கும் நன்றி சொல்லி விட்டு ... "

பஸ்ஸில் ஏறி ஊருக்கு பயணிக்க அமர்ந்த போது உடலும் மனமும் கனத்தது .





சேவை என்பது வெறும் வார்த்தையல்ல அது ஒரு உணர்வின் மறு உருவம் என்பது ஆழ்மனம் தொட்டு புரியத் தொடங்கியது .

நாட்டு நலப் பணி திட்டத்தின் உயரிய நோக்கம் வழி காட்டுதல் தேசத்தை முன் எடுத்து செல்லும் என்பது மட்டும் எங்களுக்கு நன்றாக புரிந்தது.

இது தான் தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக என்பதோ என்று சிந்திக்க வைத்தது ..."

- சீர்காழி.
ஆர். சீதாராமன்.

# நாங்க தனியா...




“ஒரு நிமிஷம்!” ஆபீஸ் கிளம்ப ஸ்கூட்டரை உசுப்பிய ராஜேஷை நிறுத்திய பிருந்தா. “இப்படி தள்ளிப் போட்டுட்டே இருந்தா எப்படி? கல்யாணம் முடிஞ்சதுமே நாம் தனியாப் போயிடலாம்னு சொன்னீங்க. இப்ப ரெண்டு மாசம் ஆச்சு...” என்று கேட்க ராஜேஷுக்கு என்ன பதில் சொல்லவென்று தெரியவில்லை.

“எப்படி அதை நேரடியா பேசறதுன்னு... அதுவும் இவ்வளவு சீக்கிரம்... கொஞ்சம் வெயிட் பண்ணலாமேன்னு...”

“எத்தனை நாள் தான் வெயிட் பண்றது? நம்ம வயசைப் பத்தி கொஞ்சம் யோசிக்கணுமில்ல? காலாகாலத்தில்தானே சுதந்திரத்தை பூரணமா அனுபவிக்க முடியும்?”

“நீ சொல்றது சரிதான். ஆனால் போன மாசம்கூட எல்லாரும் சேர்ந்து இருப்பதிலே உள்ள சந்தோஷத்தைப் பத்தி எல்லாம் பட்டி மன்ற ஷோவில சொன்னதை அவங்களோட உட்கார்ந்து தன்னை மறந்து கைதட்டி ரசிச்சிட்டு... இப்ப திடீர்னு இப்படிப் பேச முடியுமா?”



“அதுக்காக? இப்படியே இருந்துட முடியுமா? தனியாப் போறதுதான் நல்லது, சரின்னு ஒன்ஸ் தீர்மானிச்சப்புறம் யோசிச்சிட்டிருக்க என்ன இருக்கு?”

பிருந்தாவுக்கு சலிப்பு தோன்றியது. இந்த ராஜேஷ் இப்படித்தான்.. சட்டுபுட்டுன்னு எதையும் செய்வது கிடையாது.. எதற்கெடுத்தாலும் யோசனை தான்..

“அவங்களுக்கும் கொஞ்சம் தோன்ற வேண்டுமில்லையா? நாமே சொல்லிட்டு இருந்தா எப்படி? சொல்லப் போனா அவங்க தான் இதை பத்தி முதல்ல பேச்சை ஆரம்பிப்பாங்கன்னு நான் எதிர்பார்த்தேன்...”

“கல்யாண சமயத்தில் நடந்ததெல்லாம் ஞாபகம் இல்லையா? ஏற்கனவே இந்த வீட்டில் எல்லாம் இருந்தும் கட்டில் டிவி பீரோன்னு ஒரு செட் வாங்கினதே அதுக்காகத்தானே? நான் எவ்வளவு கனவு வெச்சிருந்திருப்பேன்? கம்பெனி முடிஞ்சு நீங்க வந்ததும் உங்களோடு சேர்ந்து ஏ. ஐ. கத்துக்கணும்.. சேர்ந்து சமைக்கணும்.. நமக்கு மட்டும் பிடிச்ச டிஷ் ஒண்ணொண்ணா நமக்குன்னு பண்ணி சாப்பிடணும்...”

“எனக்கு மட்டும் ஆசை இல்லையா, நினைச்சப்பல்லாம் உன் மடியில படுத்துக் கதை பேசணும்னு...”

“என்னதான் அப்பாவும் பிள்ளையும் ஒரே ஊர்ல வேலை பார்த்தாலும் ஒரொரு வீட்டிலும் ஒரே மாசத்துல தனியாப் போயிடறாங்க. இங்கே என்னடான்னா... சே! இன்னைக்கு ரெண்டில் ஒண்ணு கேட்டுட வேண்டியதுதான்! நீங்க கேட்கறீங்களா இல்ல நானே கேட்கவா?”

“வேண்டாம், நீ கேட்டால் நல்லா இருக்காது. நான்தான் பேசணும். எப்படி தொடங்கலாம்...?”

“இதில யோசிக்க என்ன இருக்கு? எங்கேயும் நடக்காதது என்ன சொல்லிடப் போறோம்?”

“எல்லா இடத்திலும் நடக்கிறது தான். ஆனால் யார் முதலில் சொல்வார்கள்? அவர்கள் தானே சொல்லணும்?”

“அதெல்லாம் அந்தக் காலம்! இப்ப நாமே பேச்சை ஆரம்பிக்கலாம். ஒண்ணும் தப்பு இல்லை.”

சாயந்திரம் தாமோதரனும் வசந்தாவும் கம்பெனியில் இருந்து வந்ததும் ராஜேஷ், “ஒரு நிமிஷம்! முக்கியமான விஷயம் பேசணும், உட்காருங்க,” என்று சொல்ல அங்கே ஒரு கனத்த மவுனம். இருவர் முகத்திலுமே கேள்விக்குறி.

“நாங்க தனியா போயிடலாம்னு நினைக்கிறோம்பா. என் ஆபீஸ் பக்கத்திலேயே ஒரு வீடு பார்த்துட்டேன். நாங்க அங்க அங்க ஷிப்ட் பண்ணலாம்னு இருக்கோம். நீங்க இங்கே இருந்துக்கலாம்.”

“எதுக்கு தனியா? இங்கேயே எல்லாரும் சேர்ந்து நல்ல சந்தோஷமாதானே இருக்கறோம்?”

“இல்லேப்பா, நாங்க கொஞ்சம் ஃப்ரீயா இருக்கலாம்னு... ஒரு ஸ்பேஸ் வேணும்னு நினைக்கிறோம்”

“சரி டாடி!” என்றான் தாமோதரன்.

பிருந்தாவை பார்த்து புன்னகைத்தார் ராஜேஷ்.



-கே.பி. ஜனார்த்தனன்

# திருவிளையாடல் புராணம் 22



▪சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி.

## யானை எய்த படலம்

இப்படலம், சமணர்கள் செய்த தீய செயல்களால் தூண்டப்பட்ட யானை ஒன்று, பாண்டிய நாட்டிற்குள் புகுந்து மக்களைத் துன்புறுத்தியதையும், அதைக் கண்டு சிவபெருமான் இரங்கி, யானையை அடக்கி ஆட்கொண்டதையும் விவரிக்கிறது. மதுரையில் இன்றைக்கு இருக்கும் யானை மலை, நரசிங்கர் கோயில் ஆகியவை உண்டான விதம் ஆகியவை இப்படலத்தில் விளக்கப்பட்டுள்ளன.

காஞ்சி மன்னின் சூழ்ச்சி

அபிடேகப்பாண்டியனின் மகனான விக்கிரமபாண்டியன் பாண்டிய நாட்டினை நல்வழியில் ஆட்சி செய்து வந்தான். அவனுடைய ஆட்சியில் சைவம் செழித்தோங்கி இருந்தது.

அவன் சோமசுந்தரர் சந்நிதிக்கு வடக்கே சித்தமூர்த்திகளின் திருவுருவத்தை நிறுத்தி நள்தோறும் வழிபட்டு வந்தான். இன்றைக்கும் மீனாட்சி அம்மன் கோவிலில் சொக்கநாதருக்கு அருகே எல்லாம் வல்ல சித்தரை நாம் தரிசிக்கலாம்.

விக்கிரமபாண்டியனிடம் காஞ்சியை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சோழ அரசன் ஒருவன் நீண்ட நாள் பகைமை கொண்டிருந்தான்.

சமண சமயத்தை தழுவிய அவ்வரசன் விக்ரமபாண்டியனை நேரடியாக போரிட்டு வெல்ல இயலாததால் விக்கிரமபாண்டியனை சூழ்ச்சியால் வெல்ல எண்ணினான்.

அதன்படி அவன் எட்டு மலைகளில் வாழ்ந்த சமணர்களின் தலைவர்களுக்கு தனித்தனியே ஓலை எழுதி அனுப்பினான். சோழனின் ஓலையின்படி சமணத்தலைவர்கள் அனைவரும் காஞ்சியில் ஒன்று கூடினர். மயில்தோகையால் விக்கிரமசோழனை அவர்கள் ஆசீர்வதித்தனர்.

சோழ அரசன் அவர்களிடம் “விக்கிரமபாண்டினை நேரில் வெல்ல இயலாததால் நீங்கள் அபிசார வேள்வியை (மரண வேள்வி) உண்டாக்கி அவனை கொன்று விடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் நான் என்னுடைய நாட்டில் பாதியை உங்களுக்குத் தருவேன்.” என்று கூறினான்.

சோழனின் உடன்படிக்கு ஒத்துக் கொண்ட சமணர்கள் பாலியாற்றங்கரையில் பெரிய யாக குண்டத்தை அமைத்தனர்.


அதில் எட்டி உள்ளிட்ட தீய மரத்தின் விறகுகளையும், நச்சு உயிரிகளின் ஊன், மிளகுப்பொடி கலந்த எண்ணெயையும் ஊற்றி அபிசார வேள்வியைத் தொடங்கினர்.

அவ்வேள்வித் தீயினால் உண்டான நச்சானது அருகில் இருந்த காடுகள், சோலைகள், நந்தவனம் ஆகியவற்றை கருக்கி விட்டன.

சமணர்களின் அபிசார வேள்வித் தீயிலிருந்து ஒரு கொடிய யானை ஒன்று தோன்றியது.

சமணர்கள் கொடிய யானையிடம் “நீ விரைந்து சென்று விக்கிரம பாண்டியனையும், மதுரையையும் அழித்து விட்டு வா” என்று கட்டளையிட்டனர்.

யானையின் உடலானது பெருத்து அதனுடைய கால்கள் மண்ணில் பதிந்தும், உடலானது விண்ணைத் தொட்டும் இருந்தது. அது தன்னுடைய பெரிய காதுகளினால் சூறாவளியை உருவாக்கியும், கண்களில்



நெருப்புப் பொறி சிந்தவும், உலகத்தினை உலுக்கும் இடிபோல் பிளிறிக் கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டது.

சமணர்களும், சோழனுடைய படைகளும் யானையைப் பின்தொடர்ந்து சென்றனர். பின்னர் மதுரையின் எல்லையை அடைந்த கொடிய யானை அங்கிருந்த காடுகள், வயல்வெளிகள், உயிரினங்கள் உள்ளிட்ட கண்ணில் பட்டவற்றை எல்லாம் அடித்து நாமாக்கியது. யானையின் செயலை மதுரை மக்கள் விக்கிர பாண்டியனுக்குத் தெரிவித்தனர்.

கொடிய யானையின் செயல்களை அறிந்த விக்கிரம பாண்டியன் “சொக்கநாதரைத் தவிர்த்து இவ்வாபத்தில் இருந்து நம்மை யாரும் காப்பாற்ற மாட்டார்கள். ஆதலால் வாருங்கள் நாம் அனைவரும் சென்று அவரை வழிபாடு செய்வோம்” என்று கூறி மதுரை மக்களுடன் சொக்கநாதரை தரிசிக்கச் சென்றான்.

சொக்கநாதரின் சந்நிதியை அடைந்த விக்கிரபாண்டியன் “கொடிய யானை மதுரையின் எல்லையில் நின்று கண்ணில் பட்டவற்றை நாசம் செய்தவாறே மதுரையை நோக்கி வருகிறது. இறைவா, எங்களை இத்துன்பத்தில் இருந்து காப்பாற்றுங்கள்” என்று மனமுருகி வழிபட்டான்.

அப்போது வானத்தில் இருந்து “பாண்டியனே, கவலைப்பட வேண்டாம். யாம், வேடுவர் வேடம் பூண்டு வில் ஏந்திய சேவகனாய் மதுரையை அழிக்க வந்த கொடிய யானையை அழிப்போம். நீ அதற்கு முன்பு மதுரைக்கு கிழக்கே ஓர் அட்டாலை மண்டபத்தை உண்டாக்கு” என்ற திருவாக்கு கேட்டது.

இறைவனின் திருவாக்கினைக் கேட்ட விக்கிரமபாண்டியன் மனதில் மகிழ்ச்சி கொண்டு மதுரையின் கீழ்திசை நோக்கி ஓடினான். கற்களையும், சாந்தினையும் கொண்டு பதினாறு கால் தூண்களுடன் கூடிய பெரிய அட்டாலை மண்டபத்தை உண்டாக்கினான்.

இறைவனான சொக்கநாதர் அரையில் சிவப்பு ஆடையைக் கட்டி தலையில் மயில்தோகை அணிந்து, அம்புக்கூட்டினை முகிலே கட்டி, பச்சைநிற மேனியராய் தோன்றினார். அட்டாலை மண்டபத்தில் ஏறி கொடிய யனையின் வரவிற்காக காத்திருந்தார்.சிறிது நேரத்தில் கொடிய யானையானது அவ்விடத்திற்கு வந்தது. தமது வில்லை எடுத்து நாணினைப் பூட்டி வளைத்தார். பின் வில்லில் நரசிங்கக் கணையை வைத்து நாணினை இழுத்து விட்டார்.

அக்கணையானது யானையின் மத்தகத்தைக் கிழித்தது. கொடிய யானை நரசிங்க கணையின் தாக்குதலை சமாளிக்க இயலாமல் நிலத்தில் வீழ்ந்து மடிந்தது. யானை மடிந்ததைக் கண்ட சமணர்கள் மிகுந்த மனவருத்தம் கொண்டனர்.

யானை மடிந்ததைக் கண்ட விக்கிரமபாண்டியன் பெரும் மகிழ்ச்சி அடைந்தான். யானையின் பின்னால் வந்த சமணர்களையும், சோழனின் படைகளையும் பாண்டியனின் படைகள் அடித்து துரத்தினர். வேடுவ வடிவம் கொண்டு வந்த சொக்கநாதரின் திருவடிகளில் வீழ்ந்த விக்கிரமபாண்டியன் “எங்களைக் காத்த இறைவரே, தாங்கள் இத்திருக்கோலத்திலேயே இங்கேயே தங்கி இருக்க வேண்டும்” என்று விண்ணபித்தான். இறைவனாரும் அவனுடைய வேண்டுகோளை ஏற்று அருளினார்.

பின்னர் விக்கிரமபாண்டியன் இராஜசேகரன் என்னும் புதல்வனைப் பெற்று பாண்டிய நாட்டில் நல்லாட்சி நடத்தினான். மதுரையை அழிக்க வந்த யானையானது சோமசுந்தரரின் பாணம் பட்டு தரையில் வீழ்ந்த இடத்தில் மலையாக மாறியது. இதுவே யானை மலை ஆகும்.

இது பார்ப்பதற்கு யானை படுத்திருப்பதைப் போன்று தோற்றமளிக்கும். இது மதுரையிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பார்த்தாலே தெரியும்.

சோமசுந்தரர் யானையின் மீது விடுத்த நரசிங்கக்கணையானது உக்கிர நரசிங்கமாக யானை மலையின் அடிவாரத்தில் தோன்றியது.

இவ்நரசிங்கமூர்த்தியை உரோமசமுனிவர் வழிபாடு நடத்தி தன் பெயரில் ஒரு தீர்த்தத்தை உருவாக்கினார். பிரகலாதனும் இவ்விடத்திற்கு வந்து தவம் செய்து அழியாவரம் பெற்றான்.

வஞ்சகர்களின் சூழ்ச்சி இறுதியில் வீழ்த்தப்படும் என்பதே யானை எய்த படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# மோதிரம் அணிவதில் இத்தனை ரகசியம் இருக்கா?

## நட்சத்திர சூட்சமமும் ஆன்மிக அர்த்தமும்

ஒரு சிறுவன் தனது தாத்தாவிடம் கேட்டான்:
"தாத்தா… ஏன் எல்லாரும் விரலில் மோதிரம் அணிவாங்க?"

தாத்தா சிரித்தார்.
"அது அலங்காரம் மட்டும் இல்லப்பா… அதுக்கு பின்னாடி ஒரு பெரிய ரகசியம் இருக்கு!" என்றார்.
அந்த ரகசியமே இந்த பதிவு…

**விரல்கள் நட்சத்திரங்களுடன் இணைந்தவை**

நமது பாரம்பரியத்தில் 27 நட்சத்திரங்கள் உள்ளன.
அவற்றில் நமது கை, கால் விரல்களை குறிக்கும் நட்சத்திரம் திருவோணம் (ஸ்ரவணம்) என்று ஜோதிட மரபில் கூறப்படுகிறது.

**ஏன் திருவோணம்?**

"திருவோணம்" என்பது "முழக்கோல்" என்ற அளவீட்டுடன் தொடர்புடையது.

**ஒரு முழம் = இரண்டு சாண்**

**"சாண்" என்பது பெருவிரல் நுனி முதல் சுட்டுவிரல் நுனி வரை உள்ள நீளம்**

அதாவது —
அளவீட்டின் அடிப்படை itself விரல்கள்தான்!

இதனால், விரல்கள் என்பது சாமான்ய உடல் பகுதி அல்ல.
அவை பிரபஞ்ச ஒழுங்குடன் இணைந்த அளவீட்டு குறியீடுகள்.

**108 எண்ணும் விரல் ரகசியம்**

மந்திர ஜபம் செய்யும்போது 108 முறை எண்ணிக்கையை எப்படி கணக்கிடுகிறோம்?

**விரல் கோடுகளின் துணையால்!**

மாலையில்லாத நேரங்களில் கூட, விரல்கள் தான் ஜப எண்ணிக்கையை சாட்சியமாகக் கணக்கிடுகின்றன.
இதனால்:
விரல்கள் = ஆன்மிக கணக்கீட்டின் கருவி

**மோதிரம் குறிக்கும் நட்சத்திரம் ஆயில்யம்**

விரல்கள் திருவோணம் எனில்,
அவற்றில் அணியும் மோதிரம் குறிக்கும் நட்சத்திரம் — ஆயில்யம் (ஆஸ்லேஷா) என்று கூறப்படுகிறது.

**ஆயில்ய நட்சத்திரத்தின் அதிதேவதை ஆதிசேஷன்**

**திருவோண நட்சத்திரத்தின் அதிதேவதை மகாவிஷ்ணு**

**ஆதிசேஷன் திருமாலின் ஆசனம்**

திருமால் எங்கு இருக்கிறாரோ,
அங்கே ஆதிசேஷனும் இருப்பான்.

ஏனெனில்:
ஆதிசேஷன் தான் திருமாலின் படுக்கை
ஆதிசேஷன் தான் உலகைத் தாங்கும் சக்தி
காலச் சக்கரத்தில் பிரபஞ்சத்தைச் சுமப்பவன்
ஆகவே,





திருவோணம் (விரல்) மீது ஆயில்யம் (நாகம்) அமரும்போது —
அது பிரபஞ்ச ஒழுங்குடன் இணையும் குறியீடாகிறது.

இதுவே மோதிரம் அணிவதின் சூட்சும அர்த்தம்.

**தர்பை அணியும் அந்தணர்கள் மறைந்த ரகசியம்**

ஆலய விசேஷங்கள், பிதுர் தர்ப்பணம் போன்ற சமயங்களில்:
அந்தணர்கள் தங்கள் விரலில்
நாக வடிவில் தர்பை புல்லை சுற்றி அணிவார்கள்.
அது வெறும் சடங்கு அல்ல.

**விரல் (திருவோணம்) நாகம் (ஆயில்யம் / ஆதிசேஷன்)**

இந்த இணைப்பின் மூலம் சடங்கு பிரபஞ்ச சக்தியுடன் ஒத்திசைவடைகிறது.

**மோதிரத்தின் உலோக ரகசியம்**

மோதிரம் எந்த உலோகத்தில் அணிகிறோம் என்பதற்கும் ஒரு அடையாளம் உண்டு.

**தங்க மோதிரம்**

செழிப்பு
வளர்ச்சி
சூரிய சக்தி
அதிகாரம்

**வெள்ளி மோதிரம்**

மன அமைதி
சந்திர சக்தி
உணர்ச்சி சமநிலை
நேர்மறை ஆற்றல்

**செம்பு மோதிரம்**

மங்களம்
உடல் ஆரோக்கியம்
இரத்த ஓட்ட ஒழுங்கு (பாரம்பரிய நம்பிக்கை)

**ராசிக்கல் மோதிரங்கள்**

பலர் ஜோதிட ஆலோசனையின் பேரில்:
நவரத்தினம்
நீலம்
மரகதம்
வைரம்
புஷ்பராகம்

போன்ற ராசிக்கற்களை அணிகின்றனர்.
இவை அனைத்தும்:

**கிரக சக்தியை சமநிலைப்படுத்த**
**நன்மை பெற**
**மன வலிமை பெற**

என்று நம்பப்படுகிறது.

**ஆன்மிக பார்வையில் மோதிரம்**

மோதிரம் என்பது:
அலங்காரம் மட்டும் அல்ல
அதிகாரத்தின் குறியீடு மட்டும் அல்ல
திருமணத்தின் அடையாளம் மட்டும் அல்ல
அது:
விரல் வழியாக பிரபஞ்ச சக்தியை நினைவூட்டும் வட்ட வடிவச் சின்னம்.
வட்டம் = முடிவில்லாத சுழற்சி
பிரபஞ்சம் = முடிவில்லாத இயக்கம்
அந்த இயக்கத்தோடு நம் விதி ஒத்திசைவதற்கான நினைவுச் சின்னம் — மோதிரம்.

**-எம்.அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

# தினம் ஒரு தலைவர்கள் அம்புஜத்தம்மாள் வரலாறு

அம்புஜத்தம்மாள் சனவரி 9, 1899-1983) என்பவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்நாட்டுப் பெண் ஆவார். இவரது தந்தை எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் மற்றும் தாய்வழி பாட்டனார் வி. பாஷ்யம் ஐய்யங்கார் ஆகியோர் புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் ஆவார்.

இளமைப்பருவம்
அம்புஜத்தம்மாள் 1899 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் எட்டாம் நாள் வசதியான குடும்பத்தில் பிறந்தார். வீட்டிலேயே கல்வி பயின்றார். தமிழ்,





ஆங்கிலம் ,இந்தி, சமஸ்கிருதம் எனப் பல மொழிகளையும் கற்றார்.

வாழ்க்கை
அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான வாழ்க்கையால் ஈர்க்கப்பட்டு இவரும் எளிமையாக வாழ்ந்தார். பிற்போக்கு சிந்தனைகளுடைய குடும்பச் சூழலிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். வை. மு. கோதைநாயகி, ருக்குமணி லட்சுமிபதி ஆகியோருடன் இணைந்து பெண்ணடிமைக்கு எதிராகப் போராடினார். பாரதியாரின் பாடல்களைப் பாடி மக்களிடையே விடுதலையுணர்வைத் தூண்டினார் ஆங்கிலேய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அந்நியத் துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதனால் வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில், தான் கற்ற மொழிகளைப் பிறருக்குக் கற்றுக் கொடுத்தார். காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்ற செல்லப் பெயர் பெற்றார். தனது தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்துச் ”சீனிவாச காந்தி நிலையம்” என்னும் தொண்டு நிறுவனத்தை அமைத்தார். 1964 ஆம் ஆண்டு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது[2].1955 ஆம் ஆண்டு, சென்னை, ஆவடியில் நடைபெற்ற சிறப்புமிக்க காங்கிரஸ் மாநாட்டின் செயலாளராக இருந்து அம்புஜம் அம்மையார் அரும்பாடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

வகித்தப் பதவிகள்
மாநிலத் துணை தலைவர் - தமிழ்நாடு காங்கிரஸ் குழு [1957 - 1962] மாநில சமூக நல வாரியம் (சேர்மன்) [1957 - 1964]
நூல் நான் கண்ட பாரதம் என்ற நூலை எழுதியுள்ளார்.

# தயாரிப்பாளர் ஆர்.எம்.வீரப்பனின் மகன் மறைவு



அவரது திடீர் மறைவு எனக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. குடும்பத்தாருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

நடிகர் ரஜினிகாந்த் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மதிப்பிற்குரிய அமரர் ஆர்.எம். வீரப்பன் அவர்களின் புதல்வர், எனது அன்புத் தம்பி தமிழழகன் அருமையான மனிதர்.

அவரது திடீர் மறைவு எனக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும். குடும்பத்தாருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள் என கூறியுள்ளார்.



மாநில அரசின் விருதுகள் நேற்று நடைபெற்றது. அதில் பாம்புசட்டை படத்திற்காக சிறந்த நடிகை விருதை கீர்த்தி சுரேஷ் பெற்று இருந்தார்.

விருதைவாங்க கீர்த்தி சுரேஷ் அழகிய சேலையில் வந்திருந்தார். அந்த உடையில் அவர் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

விருது வாங்கிய பிறகு அதனுடன் அவர் எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார். அது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

# ஜனநாயகன் படம் ஏப்ரல் 30ம் தேதி வரை ரிலீஸ் ஆக வாய்ப்பு இல்லை



ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு ஆகியோர் நடிப்பில் உருவாகி உள்ள 'ஜன நாயகன்' பொங்கலை முன்னிட்டு ஜன.9-ல் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் விஜய்யின் கடைசிப் படம் என்பதால் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்திருந்தது. ஆனால் தணிக்கை பிரச்சனையால் தற்போது வரை வெளியாகவில்லை.

தணிக்கை சான்றிதழ் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தயாரிப்பு நிறுவனம் தரப்பில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வந்தது. இதனிடையே இந்த வழக்கை வாபஸ் பெற்ற பட தயாரிப்பு நிறுவனம் ஜன நாயகன் படத்தை மறு தணிக்கைக்கு அனுப்பியுள்ளது.

இந்நிலையில், சென்சார் பிரச்னையில் சிக்கியுள்ள நடிகர் விஜய்யின் ஜனநாயகன், ஏப்ரல் 30ம் தேதி வரை ரிலீஸ் ஆக வாய்ப்பு இல்லை என கனடா விநியோகஸ்தர் York Cinemas அறிவித்துள்ளது.

முன்பதிவு செய்த அனைவரும் டிக்கெட்டுக்கான தொகையை திரும்ப வாங்கிக் கொள்ளுமாறு York Cinemas தெரிவித்துள்ளது. இதனால் விஜய் ரசிகர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

# திருமண வதந்திக்கு மிருணாள் தாக்குர் மறுப்பு



இந்தி நடிகையான மிருணாள் தாக்குர், தமிழில் நேரடி படங்களில் நடிக்கவில்லை என்றாலும் 'சீதாராமம்', 'ஹாய் நானா' ஆகிய பான் இந்தியா படங்களின் மூலம் தமிழிலும் அறியப்பட்டார். இந்தி, தெலுங்கு படங்களில் நடித்து வரும் அவர், கடந்த ஆண்டு மும்பையில் தனது பிறந்த நாளை கொண்டாடினார்.

அதற்கான விழாவில் நடிகர், நடிகைகள் கலந்து கொண்டனர். தனுஷும் கலந்துகொண்டார். இது தொடர்பான வீடியோ வைரலானதை அடுத்து இருவரும் காதலித்து வருவதாகச் செய்திகள் வெளியாயின. அது வதந்தி என்று தனுஷ் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மிருணாள் தாக்குரும் தனுஷும் பிப்.14-ல் திருமணம் செய்து கொள்வதாகச் செய்தி வெளியானது. இதற்கிடையே, நேர்காணல் ஒன்றில் பேசிய மிருணாள் தாக்குரிடம் இதுபற்றி கேட்கப்பட்டது.

அதற்கு, "எனக்கே தெரியாமல் என் திருமணம் பற்றிய செய்திகள் வருகின்றன. பிப். 14 அன்று எனக்குத் திருமணம் என்று நினைப்பவர்களுக்கு அது 'ஏப்ரல் ஃபூல்' ஜோக்காகத்தான் இருக்கும்" என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார் மிருணாள். தொடர்ந்து பேசிய அவர், "காதல் அழகான உணர்வு. அது அனைவருக்கும் ஏற்பட வேண்டும். அது உங்களை சிறந்த மனிதராக மாற்றும்" என்றார்.



நடிகை க்ரித்தி ஷெட்டி தமிழ் மற்றும் தெலுங்கில் பிஸியான நடிகையாக தற்போது வலம் வருபவர். அவர் நடிப்பில் வா வாத்தியார் படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகி இருந்தது.

அடுத்து அவர் விக்னேஷ் சிவனின் Love Insurance Kompany படத்தில் நடித்துள்ளார். அந்த படத்தின் ரிலீஸ் தொடர்ந்த தள்ளிப்போய் வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் காதலர் தினத்தை க்ரித்தி ஷெட்டி தனியாக கொண்டாடி இருக்கிறார். Some self love on Valentine's Day என குறிப்பிட்டு அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.

# 'வெற்றி' யின் உண்மையான அர்த்தம் இப்போதுதான் புரிந்தது: சவுந்தர்யா ரஜினி நெகிழ்ச்சி

டூரிஸ்ட் பேமிலி' படத்தை இயக்கிய அபிஷன் ஜீவிந்த், ஹீரோவாக நடித்த படம் 'வித் லவ்'. அனஸ்வரா ராஜன், காவ்யா, சரவணன், சச்சின் நடித்துள்ள இப்படத்துக்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். ஷ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்துள்ளார்.

அறிமுக இயக்குநர் மதன் இயக்கிய இப்படத்தை ஸயான் பிலிம்ஸ் சார்பில் சவுந்தர்யா ரஜினிகாந்த், எம்ஆர்பி என்டர்டெயின்மென்ட் சார்பில் பசிலியான் நாசரேத், மகேஷ் ராஜ் பசிலியான் தயாரித்துள்ளனர். பிப்.6-ல் வெளியான இப்படம் வரவேற்பைப் பெற்றதை அடுத்து, வெற்றி விழா சென்னையில் நடைபெற்றது.

விழாவில் சவுந்தர்யா ரஜினிகாந்த் பேசும்போது, "இப்படத்தின் ப்ரீமியர் ஷோ முடிந்து வீட்டுக்குச் சென்றபோது அப்பாஅம்மா இருவரும் என்னை கட்டிப்பிடித்துச் சிரித்தார்கள். அப்போது 'இதுதான் சக்சஸ்' என்று உணர்ந்தேன். அந்த அப்பாவின் சிரிப்பை வாழ்க்கை முழுவதும் மறக்க

மாட்டேன். 1618 ஆண்டுகளாக சினிமா பயணத்தில் இருந்தாலும், இந்த படத்தின் மூலமாகத்தான் வெற்றி என்பதன் உண்மையான அர்த்தம் புரிந்தது. இது தான் முதல் சக்சஸ் மீட். இயக்குநர் மதன் கதை சொன்ன போதே இது வெற்றி படம் என்ற நம்பிக்கை வந்தது. இரண்டாம் பாதியில் வரும் காட்சிகளும், இறுதியில் நான்கு கதாபாத்திரங்களும் ஒரே ஷாட்டில் சந்திக்கும் காட்சியும் முழுமையான டைரக்டர் டச். அவரது அடுத்த படத்துக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த படம் வெறும் 'நல்ல படம்' என்ற ஸ்டேட்டஸை தாண்டி, மக்கள் தங்கள் படமாகக் கொண்டாடுவது எங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி" என்றார். படக்குழுவினர் கலந்துகொண்டனர்.



# சிவகார்த்திகேயனுக்கு நாயகியாகும் பாக்யஸ்ரீ போஸ்?





சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள படத்தில் நாயகியாக நடிக்க பாக்யஸ்ரீபோஸிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

வெங்கட்பிரபு இயக்கத்தில் உருவாகும் படத்தில் நடிக்க முதலில் திட்டமிட்டார் சிவகார்த்திகேயன். ஆனால், அப்படம் தயாராக நீண்ட நாட்களாகும் என்பதால், அத்துடன் இணைந்து இரண்டு படங்களில் நடிக்க திட்டமிட்டு இருக்கிறார். இதில் ஒரு படத்தினை 'தாய் கிழவி' இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கவுள்ளார்.

இப்படத்துக்கான ப்ரோமோ படப்பிடிப்பு மதுரையில் முடிந்துவிட்டது. இதனை சிவகார்த்திகேயனே தயாரிக்கவுள்ளார். இதில் நாயகியாக நடிக்க பாக்யஸ்ரீபோஸிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். அவர் அறிமுகமாகும் நேரடி தமிழ் படமாக இது இருக்கும் என்று கூறப்படுகிறது. 'காந்தா' படத்தில் தனது நடிப்பின் மூலம் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியவர் பாக்யஸ்ரீபோஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

முழுக்க கிராமத்து பின்னணியில் நடைபெறும் கதை என்பதால், இப்படத்தினை ஒரே கட்டமாக படப்பிடிப்பை முடிக்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது. இதன் இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் பணிபுரியவுள்ளார். சிவகார்த்திகேயன் பிறந்த நாளான பிப்ரவரி 17-ம் தேதி இப்படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகவுள்ளது.

முனிவர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998




### இரத்த தானம்

விபத்தின் கோரப்பற்களில்
அகப்பட்டவர்களுக்குச்
சில இரத்தவகைகள்
கிடைப்பதற்கரிய
சஞ்சீவி மூலிகையாகின்றன!

சாதிக்கலவரங்களாலும்
மதக்கலவரங்களாலும்
வெட்டிக்கொண்டு
தெருவில் ஓடவிடும்
உதிரத்தை இரத்த
வங்கிகளில் சேமிப்போம்!

கிணற்றில் தண்ணீரை
இறைத்துவிட்டால்
கிணறு ஒன்றும்
வற்றி விடுவதில்லை
தேகத்தில் உதிரமும்
அவ்வாறே ஊற்றெடுக்கும்!

கர்த்தர் சிந்திய
உதிரம் உலக உயிர்களை
இரட்சித்ததைப்போல்
ஆபத்திலிருக்கும்
உயிர்களைக்காப்போம்!
மாந்தரே! நம்மை நாமே
பரிசோதிப்போம்
நம் உதிரம் பரிசுத்தமான
அமிழ்தம் என்பதை
அறிந்து கொடையாய்
வழங்கிடுவோம்!

அன்று கர்ணன்
தன் உடலோடு பிறந்த
கவச குண்டலங்களை
உதிரம் சிந்தக்கழற்றிக்
கொடையாய்க்கொடுத்தான்!

புறாவின் பசியினைப்
பசியினைப் போக்கச்
சிபி சக்கரவர்த்தி தசையை
அரிந்துகொடுத்தான்!



மாந்தராகிய
நாம்
நமக்கு
மிஞ்சிய
உதிரத்தைக்
கொடையாய்க
கொடுத்து
இன்னுயிரைக் காப்போம்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



### காதலெனும் போதினிலே!

காதலெனும் போதினிலே–
கண்மறைக்கும் சாதியெது
கருணை காட்டும்
பெண்ணே உன் கருத்தை
தெளிவாக்கிடு

உயர்ந்த வீட்டு பெண்ணே
– நீ உறவு கொள்ளல்
வேணும் காதல் மலர்ந்த
வாழ்வு நிலைபெற – என்னை
மணமுடிக்க வேணும்

பேதமது மறைந்திடவே
– தினம் பேசி பழக
வேணும் செல்வமே உன்
பேச்செல்லாம்– சாதி
பிணியை போக்க வேணும்

சாதி பேதம் துறந்து –
நாமே சங்கமமாக வேணும்
நீதி நிலைத்து மலர – நம்
நினைப்பும் ஒன்று படனும்


எங்க வீட்டு பெண்ணும்
எழில் அழகு மின்னும் உங்க
வீட்டு இளைஞருக்கும் ஏற்ற
பொருத்தமாகும்

வீணர் வகுத்த சாதியை
விட்டெறிந்தே வரனும்
விருப்பம் உள்ளதென்றால் –
என் வீடு தேடி வரனும்

எவர் எதிர்த்த போதும்
நாம் இணைந்து நிற்க
வேணும் இல்லறத்து
வாழ்வில்
– குழந்தை
சாதி இன்றி
வேண்டும்.



**சந்திரசேகரன்
அமுதா**
தங்கிக்கோட்டை



### இன்னும் புரியவில்லை

" காதலிக்க நேரமில்லை
காரணம் தேடி
அலையவில்லை .... "

உழைப்பு உணவு
உறக்கம் உயர்வு என்று
கண்மூடித்தனமாக
பயணித்த போது ..."

அழகை பார்த்து ரசித்து
கவிதை எழுதி ஒத்திகை
பார்த்து அனுபவிக்க...."

கண் ஈர்ப்பு விரல் ஜாலம்
மௌன இதழ் கால் விரல்
ஓவியம் என
காணவில்லை ...."

காதல் என்ற ஒரு தனி
உலகம் உண்டு அதில்
நீந்தி ரசித்து லயித்து கரை
கண்டவர்களும் உண்டு ..."

கரை காண முடியாமல்
உயிரை இழந்தவர்களும்
நிறைய உண்டு .... "

பெண் என்ற புதையல்
பொக்கிஷம் கையில் சேர்ந்து
விட்டால் புரியாத
வாழ்க்கை ரகசியம் ....."

கூட புரியத்தொடங்கும்
அதுதான் காதல் என்றால்
படகும் துடுப்பும் போல




காதலர்கள்
வலம் வருவது
உண்மை
தான்....."

**ஆர்.சீதாராமன்**
சீர்காழி

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: பாரதியாரின் சுதேச கீதங்கள் உரை பகுதி– I
ஆசிரியர்: ரா. நிரஞ்சன் பாரதி
வெளியீடு: பாரதி பதிப்பகம்
விலை : ₹380/–.(கூரியர் செலவுடன்)
தொடர்புக்கு: 93839 82930




மகாகவி பாரதியார் ஒரு தீர்க்கதரிசி.

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று....

சுதந்திரம் அடையும் முன்பே பாடியவர்.

அவரின் பாடல்கள் உரையின்றியே எல்லோருக்கும் புரியும் என்றாலும், அது எல்லோரையும் சென்றடைய வேண்டும் எனும் பேரவாவுடன், அவரின் 15 சுதேச கீதங்களுக்கு பல அரிய, அறிய வேண்டிய தகவல்களுடன் அவரின் எள்ளுப் பேரனும் என் உடன் பிறவா சகோதரர் திரு. பல்ராம் துரை அவர்களின் மாப்பிள்ளையும் ஆன திரு.நிரஞ்சன் பாரதி உரை எழுதியுள்ளார்.

14. மாதாவின் துவஜம்:

இந்நாட்டின் முதல் தேசியக் கொடியை வடிவமைத்த பெருமை சகோதரி நிவேதிதாவையே சாரும். அவர் வடிவமைத்த கொடி ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும், அடுத்தடுத்து பல வடிவங்களை முயற்சி செய்து பார்க்க அவரது முதல் முயற்சி அடித்தளமாக அமைந்தது என்கிறார்.

தன் குருவாகிய சகோதரி நிவேதிதாவின் இந்த முயற்சியால் ஈர்க்கப்பட்ட பாரதி தானும் ஒரு தேசியக் கொடியை உருவாக்க வேண்டும் என ஆசைப்பட்டார். அந்த ஆசை தான் தாயின் மணிக்கொடி பாரீர் என்ற பாடல்.

மணிக்கொடி என்னும் வார்த்தையைப் பிரசவித்தது கம்பனாக இருந்தாலும் அதைப் பிரபலப்படுத்தி ஒரு படைப்பாளர் பாரம்பரியத்தை உருவாக்கிய பெருமை பாரதியாரையே சாரும்.

1933ம் ஆண்டு ஸ்டாலின் சீனிவாசன், வ.ராமசாமி ஐயங்கார்,டி.எஸ்.சொக்கலிங்கம் ஆகியோர் 'மணிக்கொடி' என்னும் இலக்கிய சிற்றிதழைத் தொடங்கினர். இதில் வ.ரா என இலக்கிய வட்டத்தில் அழைக்கப்பட்ட வ.ராமசாமி ஐயங்கார் பாரதியின் சீடர்களில் ஒருவர், புதுமைப்பித்தன்,ந. பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன்,லா.ச.ராமாமிர்தம், மௌனி, க.நா.சுப்ரமணியம்,தி. ஜானகிராமன், எம். வி.வெங்கட்ராம் உள்ளிட்ட எழுத்தாளர்கள் இந்த இதழில் எழுதியிருக்கின்றனர்.

இவர்கள் பின்னாளில் மணிக்கொடி எழுத்தாளர்கள் என்றே அறியப்பட்டனர்.

வள்ளுவரின் குறள், கம்பர் பாடல்களை மேற்கோளாக காட்டியதுடன், மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறை சிவபெருமான் மீது பாடிய திருப்பள்ளியெழுச்சியை முன்மாதிரியாகக் கொண்டு பாரதமாதா திருப்பள்ளியெழுச்சியை பாரதி பாடியுள்ளதாக நிரஞ்சன் பாரதி குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் இஸ்ரோ சந்திரயான் 3 ஐ விண்ணில் நிலைநிறுத்தியபோது பாரதி பாடிய "சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்" பேசு பொருளானதையும் சுட்டியுள்ளார்.

வாழ்த்துகள் நிரஞ்சன் பாரதி

**ஸ்ரீகாந்த் திருச்சி**

### ஹைக் கூ

காலம் பொன் போன்றது
பாதுகாக்கா விட்டால்
சேதாராமாகி விடும்.
வாழ்க்கை.

2.படகு காரனின்
மனைவியின் மனது
அலைபாய்ந்து
கொண்டிருந்தது
கரை சேராததால்.



3.கண்ணாடித்
தொழில்
நஷ்டமடைந்த
தால்
உடைந்து
போனது
விற்பனை செய்தவர்
மனம்.

**ஜயந்தி சிவக்குமார்.**
திருச்சி.



### புதிய பார்வை

(ச) ரஸ்வதி
(ரி) துவர்மா
(க) விச்சுடர்
(ம) ஞ்சுஷா
(ப) வித்ரா
(த) ங்கச்செல்வி
(நி) ரஞ்சனா
என இப்படியெல்லாம்
உனக்குப் பெயர்
சூட்டுகிறேன் உன் பெயர்
தெரியாத வரையில்!
பெயரா அவசியம்? என்ற
உன் பார்வையின்
கேள்விக்குவேறென்ன
அவசியம்? என்பதை
யெல்லாம் ஒரு புதிய
காதலன் என்னால்
எப்படிச் சொல்லி விட
முடியும்? என்னுள் தயக்கம்
தங்கி ஒரு முத்தமிடவே
யோசிக்கையில்
நீ ஈர்த்ததில் இழுத்ததில்
உன் மடியில்
சாய்ந்திருக்கிறேன் நான்!
நீ வந்து விட்டால்
பகலும்(கூட) இரவாகி
விடுகிறது எனக்கு!
என் காதலின் கொள்கை
அன்பிற்காக அலையாமல்
வேறென்னவாகத்தான்
இருந்து விட முடியும்?!



எத்தனை
முறை நாம்
திரும்பத்
திரும்பப்
பார்த்தாலும்
நம் பார்வை
புதிய பார்வை
தான்!

**முத்து ஆனந்த்** வேலூர்

### திருவோடு

உள் குழிந்த
கிண்ணமொன்றை
கையிலேந்தி நின்றேன்;
கொள்வதின் ஆதாயமோ
இழப்போ குறிக்கோளாய்க்
கொள்ளாமல்... எதையும்
எதிர்நோக்காமல்...

கிண்ணம் வேகமாய்
நிறைந்தது; பாரமுகத்தால்
வக்கரிப்பால் ஆணவத்தால்
எள்ளுதலால் ஐயத்தால்
வஞ்சினத்தால்
வஞ்சகத்தால் அச்சத்தால்
மருட்சியால் புறக்கணிப்பால்
பொய்மையால்...


அறமும் அன்பும்
நெறியும் நேர்மையும்
பண்பும் உண்மையும்
பின்னே நெருக்கித்
தள்ளப்பட;

நான் நின்றேன்;
நாணி தலை குனிந்து;
நானிருந்த சமூக
அவலம் நினைந்து
கண்ணீர் பெருகியது.
கழிவிரக்கத்தால் அல்ல;



ஏற்பது
இகழ்வு;
அறிந்து;
பின்னும்
ஒருமுறை
தெளிந்தேன்.

**சசிகலா
விஸ்வநாதன்**



### காதல்

காத்திருப்பது
கஷ்டமென்றாலும்–
உனக்காக காத்திருப்பது
நிறைவாய் இருக்கிறது,

கவிஞனாய்–எனக்கு
மிகைப்படுத்தல்
பிடிக்காதென்றாலும்–உன்னை
மிகைப்படுத்தல்
உயர்வாய் இருக்கிறது,

முழுப்பாடல்
கேட்டபின்னாலும்
உன் முனுமுனுப்பு
கேட்டால்தான்
திருப்தியாய் இருக்கிறது,

ஆடைக்குறைப்பு செய்து
அரைக்குறையாய்
செல்வோர் மத்தியில்–நீ
முழுசாய் போர்த்தி
முக்காடுபோட்டுபோவதே
அழகாய் இருக்கிறது,

அடா,நான்தான்



ஒன்றும்
தெரியாதஜடம்
உனக்குகூடவா
புரியவில்லை
இந்த
உலரலுக்கெல்லாம்
என்ன
காரணமென்று,?!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

### 'நீர் மீது சர்க்கரைப் படகு"

நீர் மீது சர்க்கரைப் படகு
மிதக்குமென்று பிதற்றும்
கவிதைக்காரன்!

அதையும் "ஆழ்ந்த
தத்துவம்!" எனக்
கை கொட்டும் கூட்டம்!

நீரில் விட்டவுடன்
கரையும் சர்க்கரை
"மனித வாழ்வின்
நிலையற்ற தன்மை"
விளக்கும் கவிஞன்!

ஒரு வரி எழுதுவான்:
"விண்ணின் வெள்ளை
எலும்பில் மழை தன்
நாக்கைத்
தொங்க விட்டது."

அர்த்தம் கேட்டால்?
"உணர வேண்டும்...
புரியக் கூடாது!"

அடடா!

புரியாததே பெரியதா?
மயக்கம் தான் மெருகா?

குளத்திலே கல் போட்டால்
அலை எழும். உன்
கவிதையிலே சொல்
போட்டால் ஓசை கூட
எழவில்லை.

புரியாததைப் புரியாதபடி
வைப்பது புத்திசாலித்தனமா?
அல்லது பொருள்
இல்லாமையை மறைக்க
புளுகிடும் சாதூர்யமா?

சர்க்கரைப் படகு
நீரில் கரையும் அது இயல்பு.

கவிதை கரையக்
கூடாது! ...அது
கரையாமல் கரைய
வைக்கும் கனமான
உணர்வுப் பதார்த்தம்!

நீர் மீது சர்க்கரைப் படகு
மிதக்கலாம்.. ஆனால்
நெஞ்சக் கடலில் பொய்யான
சொற்கள் மிதக்காது.

உண்மை சொல்



கல்வெட்டாய்
விழும்.
காலம்
தாண்டிப்பேசும்!

**முகில்
தினகரன்**
கோயமுத்தூர்

### காதலர்தினம்

விலையுயர்ந்த மாட
மாளிகையில்– கூட இருந்தும்

ஆளில்லா மனிதர்– போல
ஆட்டுவித்து– நமது என

மனதில் பதித்து–அடி எடுத்து
வைக்கும் பொழுது–
ஓரக்கண்ணால் ..நீ ரசிப்பதும்
சரி– நான் ருசிப்பதும் சரி!!!



உன் பாசத்தை
மட்டுமல்ல–
உன்
கோபத்தையும் –
தாபத்தையும்!!!

இனிய
காதலர் தின



வாழ்த்துக்கள்


**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி



### காதலி

ஒரு காதலி
இருந்தால்
நமக்கு
ஆறுதல்
சொல்ல
ஒரு தாங்கு
கிடைக்கும் !
காதலியே
இல்லையென்றால்
நமக்கு
ஆறுதல்
தேவைப்படவும்
செய்யாது !

**எம்.பி.தினேஷ்**
கோவை



### காதல் செய்வோம்!

அறுசீர் மண்டிலம்.


காதலின்றி
அமையாது மனிதம்
காதல்தான்
உலகிலேயே புனிதம்
ஓதிடுவோம் காதல்தான்
நன்று ஒண்மையாக
விளங்கிடலாம் நன்று!
ஏதமின்றி அமைந்திட்டால்
காதல் எந்நாளும் துன்பில்லை
ஓது ஆதலினால் காதலினைச்
செய்வோம் அன்பாலே
கட்டுண்டே உய்வோம்!

தெய்வீகம் தானென்றும்
மாதல் தெவிட்டாத
இன்பந்தான் காதல்
நெய்மணக்கும் குணம்தானே
காதல் நேரவேண்டும்
இயற்கையாக காதல்!
மெய்யோடு மெய்சேர்ந்து
விட்டால் மேன்மையாக
அமைந்திடுமே காதல்
செய்திடுவோம் காதலினைத்
தானே செம்மாந்து
நின்றிடுவோம் தேனாய்!

காதலித்துப் பார்த்தாலே
தெரியும் காதலென்றால்
என்னவென்று புரியும்
நாதமென்னும் இசையாயும்
விளங்கும் நவரசமே காதலிலே
காணும்! வேதமெல்லாம்
விளங்கிடவே பூணும்
வேதனையும் சாதனையும்
பொங்கும் மோதலில்லாக்
காதலெனின் இனிக்கும்
முடிவில்லாக்
காதலாக
மணக்கும்!



**முனைவர்
இராம.
வேதநாயகம்**
திருவண்ணாமலை.



### ஆதலினால் காதல் செய்வீர்.!

ஈ எறும்பு கூட இங்கு
ஒட்டிக்கிட்டேப் பறக்குது!
ஈர மழை பட்டவுடன்
பூக்களெல்லாம் பூக்குது!
ஓரவிழி அசைவினிலே
உலகம் மெய் மறக்குது!
வீரமென்ன வெற்றியென்ன
காதலால் தான் நடக்குது!

ஆதலினால் காதல் செய்வீர்;
ஆதலினால் காதல் செய்வீர்!
பாரதியார் சொன்னது!

மின்சார ஆலை ஒன்று
கண்களுக்குள் இருக்குது!
மெல்ல அதைத்
தொட்டவுடன்..
ஷாக்கன்றோ அடிக்குது!
சம்சார சாகரத்தில்
காதல் அலை அடிக்குது!
சன்யாசியைக் கூட அது
சாய்த்துவிடத் துடிக்குது!

ஆதலினால் காதல் செய்வீர்!
ஆதலினால் காதல் செய்வீர்!
பாரதியார் சொன்னது!

உற்பத்திக்கு மூலத்தனம்
காதலில் தான் இருக்குது..
உள் நுழையும் மூச்சுக்காற்று
காதலாலே இழுக்குது!
கற்பனையும் காலியமும்
கதை கவிதை எழுதுது!



காதலர்களாகி
விட்டால்
காலமெல்லாம்
வாழ்த்துது!

ஆதலினால்
காதல் செய்வீர்!
ஆதலினால் காதல் செய்வீர்!
பாரதியார் சொன்னது!

**வே.கல்யாண்குமார்**




## மண்சட்டி வாக்காளர்கள்

" நம் அடிப்படை தேவையும்
ஆதாரமும் விளையாட்டுப்
பொருளாகி தரம் இல்லாமல்
நம்மை வந்து சேரும் ..."

ஓட்டுக்கு காசும் தேர்தல்
சமயத்தில் செய்யும் செலவும்
அரசியல்வாதிகளின்
தந்திரக்கார வித்தை ..."

தூண்டில் மீன் வாக்காளர்கள்
ஒரு நாள் நன்கொடையில்
நாவையும் வயிற்றையும்...."

நிரப்பி விட்டு ஐந்து வருடம்
துயர்படும் படித்த படிக்காத
கைநாட்டுக்கள் ....."

தேன் கலந்த பேச்சும் வாரி
வாரி விடும் வாக்குறுதியும்
அரிச்சந்திரன் வீட்டு
வாரிசு போலவும் ..."

ஆடும் நாடகம்
ஏற்கும் கதாபாத்திரம்
ஏழையின் மனதை
கரைத்து விடுகிறது .... "

உணவு உடை உறைவிடம்
கல்வி நோய் தீர்க்க
நல்ல மருந்து மருத்துவமனை
பயணிக்க சாலை
குடிக்க நல்ல நீர் ....."



இதைக் கூட
கேட்டுத்தான்
பெற வேண்டிய
அவல
நிலை
ஜனநாயகம்
பண
நாயகத்தின் பிடியில் நசுங்கி
கசிகிறது உதிரம் ...."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## காமதேனு

நிழலும் கனிகளும் தரும்
பழுத்த இலைகளை உதிரும்
பெருக்கிச் சுத்தம் செய்வீர்
கோணல்
புத்தியைப்பெருக்காதீர்

ஓய்வுற்றோர் மூப்பின்
அவதியால் படுக்கையில்
எல்லாம் நிகழும்
சகித்து பணிவிடை புரிவீர்

குடும்ப நலனுக்காக
உழைத்த உத்தமரை
அனுசரித்து வாழ்வீர்



நமக்கும் அந்த
நிலைமை
வராமலிருக்க
வேண்டிடு

**பி. பழனி,**
சென்னை.

இதுதான் உலகமா..
என்னடா உலகமிது..
பொல்லாத உலகம்!
நல்லவனா வாழும்போதே
செய்கிறதே கலகம்!


உள்ளவனோ இல்லாதவனை
புல்லாக மதிக்குறான்..
நல்லவனைப் போல்நடித்து
கள்ளத்தனம் புரியுறான்!

ஏழைகளோ ஏழையாக
இங்கிருந்து மடியுறான்! ஏன்
இந்த நிலமையென
எவன்தான் நினைக்கிறான்?

ஆயுதம் தூக்குறான்..
அடாவடி செய்யுறான்..
ஆமையாய் அடங்கிபோயி
நல்லவனோ தவிக்கிறான்!

புரியாத உலத்திலே
பொய்யிலே மயங்குறான்..
போதையில் தூங்குறான்..
எப்போது விழிக்கிறான்..

**வே.கல்யாணகுமார்**




## கூத்து மேடை

ஆடவந்த மேடையிலே
ஆடுவோம் ஆட்டம் முடிஞ்ச
உடனேயே ஓடுவோம்
ஏறுமாறா வேடங்களைப்
போடுவோம் எதற்கும்
கவலைப்படமலே
பாடுவோம்!

கூடுகின்ற மக்கள்
கை தட்டுவார் கூத்து
முடிஞ்சவுடனே நடை

கட்டுவார் பாடப்பாட
தலைகளையே ஆட்டுவார்
பணம் காசு போதைப்புகழ்
ஊட்டுவார்

அரிதாரம் மேனியில்
மினுமினுக்குமே
ஆசையோடு ஜனம்உன்னை
பார்க்குமே!
நரிவேடம் போட்டாலும்
ரசிக்குமே.. நாடகமே
உலகமாக இருக்குமே!
கூத்துமுடிஞ்ச உடனே
சனம் கலையுமே.. போட்ட



வேடம் அத்தனையும்
முடியுமே பார்த்துரசிச்ச
முகங்களையும்
மறக்குமே.. பாதையிலே
யாருமின்றி நடக்குமே.!

**வே.கல்யாணகுமார்.**



## காதல்

விழி வழி ஊடுருவி
இதயத்தில் இருத்தும்

கற்பனை ஊற்றெடுத்து
கவிதை பிறக்கும்

கனவுகள் நிறைத்து
தூக்கம் தொலைக்கும்

பார்ப்பது மறையும்
மறைந்தது தெரியும்

பெற்றோரும் மற்றோரும்
தூரத் தள்ளி காதல்
மட்டுமே

கண் நிறைக்கும்
போர்க்களத்தில் பூக்கள்
பூக்கும் வியர்வையிலும்
பூக்கள் வாசம்
கேட்கும் ஒலியெல்லாம்
இசையின் நேசம்
இதயத் துடிப்பில்
அன்பின் சுவாசம்

மனம் புரிந்து வலி உணர்ந்து
வாழ்வின் பொருளறியும்

புயலும் தென்றலாகி
உற்சாகம் ஊற்றெடுக்கும்

சாதி மறையும் சக்திபிறக்கும்
உடலில் புது ரத்தம் பாய்ந்து
உணர்வுகள் உறுதியாகும்

கவிதைகள் கிறுக்கி
காகிதம் உயிர் துறக்கும்

இதயத்திற்கு இதமாகும்
காயத்திற்கு மருந்தாகும்



காதல்..... மனங்கள்
பேசும்
அன்பு மொழி
ஆயுட்கால
அடையாளம்.

**தமிழ்நிலா**

## ஞாபகங்கள்

கதைப்பேசி மகிழ்ந்த அந்த
க்குளத்துக்கரை...

கைப்பிடித்து சுற்றித்திரிந்த
அந்தப் பூங்கா...

அடிக்கடி
சினிமாவுக்குப்போன
அந்தத் திரையரங்கம்...

அடம்பிடித்து
முத்தம் பகிர்ந்த
அந்த இடங்கள்...

இப்படி...

எல்லாம் மறந்து
என்னவள் வாழ்கின்றாள்
அந்தசினேகிதனோடு..!

**ஏ.எம்.ஷெரீஃப்,**
புதுக்கோட்டை.



## கல்லிலே கலைவண்ணம்!

கல்லிலே கலைவண்ணம்
காட்சியின் சிலைவண்ணம்
பல்வித ஆற்றல்கள்
பார்க்கிறோம் சிற்பத்தில்!
உள்ளுமே நினைவலைகள்
உள்ளமே கனவலைகள்
வெல்லுமே உலகத்தை
வீறுடன் தமிழாட்சி!

சிற்பமே உன்னதமே
சீருடன் காண்பதுவே
பொற்புடன் திகழ்ந்திடுமே
பொலிவுடன் விளங்கிடுமே!
அற்புதம் படைத்திடுமே
அழகினைக் கொடுத்திடுமே
சிற்பியைப் பாராட்டு
செழிப்புடன் சீராட்டு!

பார்த்ததும் மயக்கிடுமே
பரவசம் விளைத்திடுமே
சேர்த்திடும் நெஞ்சினிலே
செந்தமிழ்ச் சிற்பத்தை!
ஈர்த்திடும் மனத்தினையே



இன்பமும்
பொங்கிடுமே
கூர்மையாம்
நுணுக்கங்கள்
கொஞ்சியே
நின்றிடுமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## ஒழுக்கம்

இயற்கையின் ஒழுக்கம்
புவியாகும் புவியின் ஒழுக்கம்
மலையாகும் மலையின்
ஒழுக்கம் மண்ணாகும்
மண்ணின் ஒழுக்கம்
நிலமாகும் நிலத்தின்
ஒழுக்கம் வயலாகும்
வயலின் ஒழுக்கம் காற்றாகும்
காற்றின் ஒழுக்கம்
தென்றலாகும் மரசெடி
கொடிகளின் ஒழுக்கம்
காடாகும் காட்டோடையின்
ஒழுக்கம் நீர்வீழ்ச்சியாகும்
நீர்வீழ்ச்சியின் ஒழுக்கம்
ஆறாகும் ஆற்றின் ஒழுக்கம்
கடலாகும் கடலின் ஒழுக்கம்
அலையாகும் அலையின்
ஒழுக்கம் நிலையாகும்.
மேகதுளியின் ஒழுக்கம்
மழையாகும் மழையின்
ஒழுக்கம் நீராகும்
நீரின் ஒழுக்கம் நிலையாகும்.
ஒழுக்கம் உயிருக்கு
ஒப்பாகும் கடல் நீர் அதனால்
உப்பாகும் உப்பில்லா
சுவைகள் உலகில்இல்லை
ஒழுக்கம் இல்லா வாழ்க்கை
நிலைப்பதில்லை



இயற்கை
நிலைப்பது
ஒழுக்கத்தாலே
இதை
உணர்ந்து
வாழும் மனிதர்
எல்லாம்
இயற்கைபோலே...!!!

**கவிஞர் பொன் பனகல்**
**பொன்னையா.**



## என் மானம் காத்தப்பூமி

அரசமரத்து உச்சியிலிருந்து
குளத்தில் குதித்து~நீரில்
நீந்தி விளையாடியது,

பாலத்து மதகிலேறி
ஆற்றில் கரணமடித்து
அப்பாவிடம் அடி வாங்கியது,

வீதியில் குழித்தோண்டி
கிட்டிப்பில் விளையாடி
பக்கத்து வீட்டு பாட்டி
மண்டையை உடைத்தது,

சிந்துகின்ற கதிர்சேர்த்து
பாய்வீட்டு கடையில்
கொடுத்து பால்பன்
சுவைத்தது,

வடிக்கால் ஓடையில்
அமர்ந்து சின்னமீனை
தூண்டியில்கோர்த்து
பெரிய மீனை பிடிக்கும்
அறிவாளிதனம்,


இதையெல்லாம்
என் மகனிடம் சொன்னால்
வாப்பா, போகலாம்
நம்ம ஊருக்கு என்கிறான்,

அவனை,அங்கே
கூட்டிச்சென்று எதை, எப்படி,
கற்றுத்தருவது?!
எங்கள் மானம்காத்த
பூமியெல்லாம் வானம் பார்த்த



பூமியாய்
வரண்டு
கிடக்கும்
போது? நான்
அனுபவித்த
சுகமெல்லாம்
என் மகனுக்கு
கதையாகிப்போனது
இம் போடுவதற்கு,,,,

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



உன் சீண்டல் மொழி
எனக்குப் புதிதாய்..
என் தீண்டல் மொழி
எனக்கே புதிதாய்.


பேசாமலிருக்கிறாய்
பல நாட்களாய்.
பேசுகிறாய் இன்று
முன்பு விட்ட இடத்திலிருந்து.

உன்னுடன் மனசுக்குள்



பேசிய
வார்த்தைகள்
எத்தனை
எத்தனை
மூட்டைகளாய்ச்
சுமக்கிறேன்
தினமும்.

**ரிஷபன்**





தினம் தினம்
காதல் தினம்
தான்...
நமக்கு....

காதலர்
களுக்குத்
தான்... ஆண்டிற்கு ஓர்
முறை...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## வள்ளலார்!

(குழந்தைப் பாடல்)

வள்ளலார் நமது வள்ளலார்
மருதூரில் பிறந்த வள்ளலார்
வெள்ளாடை அணிந்த
வள்ளலார்
வேறுபாடு இல்லா வள்ளலார்!

வசிக்கின்ற உயிர்கள்
அனைத்துமே வாடாமல்
இருக்க வேண்டுமே
பசித்தோரின் முகத்தைப்
பார்த்தவர் பசிதன்னை
உடனே போக்கினார்!

சன்மார்க்க சங்கம்
நிறுவினார் சத்தியநல் ஞான
சபையினர் நன்மார்க்கம்
தம்மையே நாடுவோம்
நலங்களையே என்றும்
பாடுவோம்!

கொல்லாமை தம்மை
வேண்டினார் கொண்டஇறை
ஒன்றே பாடினார்
இல்லாமை போக்க நாடினார்
இருந்தமிழில் அருட்பா
பாடினார்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.

## வழிகாட்டி....

உன் இருப்பிடம் சேர...
வழியறியாது .... வலியுடன்...

திரிந்த வண்ணம் உள்ளது...
என் காதல்...


உன் சிரிப்பொலியையாவது...
வழி அனுப்பி வை...

வழிகாட்டட்டும்... என்
மெய்மறந்த... பெருங்
காதலுக்கு....

முகம் பார்க்கத்
தவித்தவனுக்கு...

பாராமுகம் காட்டுகிறாய்...
கொடும் தவிப்பின்...
வேதனைக்கு... பால் சோறு
ஊட்டுகிறாய்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி .



## மாற்றங்கள் ஆயிரம்...

காதல் கடிதங்கள்
எழுத... மறந்து போன...
பேனாக்கள்...

தூது செல்ல மறந்த
ஆரஞ்சு மிட்டாய்...
கால்சட்டைகளும்...

அன்பை விற்றுக் கொண்ட....
மளிகை கடைகளும்...

ஊரின் பார்வையில்..
தப்புவித்த...மாலை நேர
இருட்டும்....

வருகையை முன்னறிவிப்பு...
செய்த... காதலியின்
தோழிகளின்...
கண்சாடைகளும்...

ஏக்கப் பெருமூச்சில்...
தவிக்கின்றன...

காதலர் தினத்தில்..
இணையத்தில் .இறக்கை
முளைத்து... பறக்கும்..
இதயங்கள்... கண்டு...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## திறந்த புத்தகம்... நீ



அன்பே என்னை வழி நடத்தும் வரலாறு...நீ
எனக்கு புகழ் வாங்கி தந்த புத்தகம்...நீ

நான் சுவாசிக்கின்ற காற்றாய்...நீ
பல கலைகளை கற்றுக்கொடுத்தவள்...நீ

நான் மேல் உயர படிக்கல்லாய் இருந்தவள்...நீ
என் மேனியையும் பேனி காத்தவள்....நீ

அழகில் மலருக்கு நிகரானவள்....நீ
அழகில் படைத்த பிரமனுக்கே போதை ஏற்றியவள்....நீ

உன் புன்னகையில் என்னை புழுவாக துடிக்க விட்டவள்...நீ
உன் அழகில் புலவனை பித்தனாக்கியவள்....நீ

எனக்கு உன்னை நினைத்தாலே கவிதை வரும்...
கவிதையாய் நீ இருப்பதாலே....

நான் என்ன கல்வி அறியாதவன் கூட உன்னை கண்டதும்
கவிதை வடிப்பான்....!!

**பொன்.கருணா,** நவி மும்பை

## சோறு..

சோறேதான் வாழ்க்கையடா!
பசித்தவர்க்கே இது..
புரியுமடா! தேடித் தேடியே
அலைந்தே.. குப்பைத்
தொட்டிக்குள் குனிந்தே..
வாழும் மனிதரைப்
பார்த்ததுண்டோ? அவர்
அருகினில் சென்றவர்
யாருமுண்டோ?
(சோறே தான்...)

அன்னையுமில்லை..
தந்தையுமில்லை.. வீதியில்
சிறுவர்கள் திரிவாரே..
விழிகளில் வழியும்..
கண்ணீர் துடைக்க உறவுகள்
இன்றி நடப்பாரே .!
விடுதியில் காசை வீசியே

வாங்கிய உணவோ
குப்பையில் குவியுதடா..
வீதிக்கு வீதி.. பசியுடன்
சோறை தேடுவோர் வாழ்வும்
தொடருதடா! (சோறே தான்..)

படைத்தவன் மறந்தான்!
அடுத்தவன் சிரித்தான்!
பசித்தவன் சோறுத்
தேடுகிறான்.! குவித்தவன்
மறைப்பதும்.. பசித்தவன்
துடிப்பதும்... சோறினால் வந்த
வினைதானே! இருப்பவன்
ஒருபிடி சோறு எடுத்து..
ஏழைக்குக் கொடுத்தால்
தானமடா.. எச்சில் இலையில்
தேடிட வைத்தால் அதுதான்
மாபெரும் பாபமடா!
(சோறே தான்..)

**வே.கல்யாண்குமார்.**



## அம்மா ! ஹைக்கூ !

காணிக்கைக் கேட்காத
கண் கண்ட கடவுள் அம்மா

நடமாடும் தெய்வம் அம்மா
கருவறை உள்ள
கடவுள் அம்மா

உயிர் தந்த உயிர் உயிர்
வளர்த்த உயிர்
அம்மா



மனதில் அழியாத
ஓவியம்
மறக்க முடியாத
காவியம்

அம்மா

ஆடுகளும் மாடுகளும் கூட
உச்சரிக்கும் உயர்ந்த சொல்
அம்மா

வாய் பேசாத ஜீவன்களும்
பேசிடும் ஒரே சொல் அம்மா

மகனின் வாழ்வு ஒளிர்ந்திட
உருகிடும் மெழுகு அம்மா

உச்சங்களின் உச்சம்
உலகின் உச்சம் அம்மா

அன்பின் சின்னம்
அமைதியின் திரு உருவம்
அம்மா

திசைக் காட்டும் கலங்கரை
விளக்கம் அம்மா

கரை சேர்க்கும் தோணி
உயர்த்திடும் ஏணி அம்மா

நேசம் பாசம் மிக்கவள்
வேசம் அறியாதவள் அம்மா !

**கவிஞர் இரா .இரவி !**

மாறிக் கொண்டே
இருப்பது...

ரோஜாக்களும்...
காதலர்களும் தான்...
சர்வ நிச்சயமாக...
காதல்.. அல்ல
ஒற்றை நாளில் கொண்டாடித்
தீர்ப்பது... எப்படி?

யுகம் யுகமாய் மனித
குலத்தை சிறைபிடிக்கும்...
பெருங் காதலை...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## உழப்பின் சோகம் !


நீ எனை விட்டு
அகன்றாலும் உன்
வாசம் என் மனதை
ஆக்கிரமித்துக்
கொண்டிருக்கிறது
உன் கயல் விழிகளில்
காணப்பட்ட காந்த
சக்தி இப்பொழுதும்
எனை ஈர்த்துக்
கொண்டிருக்கிறது
அன்னத்தையும்
தோற்கடிக்கும்
உன் ஒயிலான நடையழகு
இன்னமும் எனது
மனக்கண்ணில் தோன்றி
அலைக்கழிக்கிறது எனை
நெருங்கி இருந்தபொழுது
எனது காதில் ஒலித்த
உன் இதயத்தின்
'லப் டப்' சட்டென
நின்று போனதே
ஏன் இவ்வளவு சீக்கிரம்
உனது விண்ணுலகப் பயணம்
கண்ணே !

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**



அன்பே உனக்காக எதையும்
துறப்பேன்
எதற்காகவும் உன்னை
துறக்கமாட்டேன்.....

**ஸ்ரீகாந்த்** திருச்சி





கூரிய ஆயுத
பார்வையால்
இதயத்தில்
கதிர் வீச்சை
ஏற்படுத்தி
கலங்க
அடித்து
கொண்டிருக்கிறது
உன் கண்களின் காதல்.

**ஜெயந்தி சிவக்குமார்.**
திருச்சி.



இந்து சமய அறநிலையத்துறை

திருவண்ணாமலை மாவட்டம். செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்

## அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்

### ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா

## அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம் !

நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10-ஆம் நாள் (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| மங்கள ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 7-ஆம் நாள் | 19-02-2026 வியாழக்கிழமை | காலை 8.00 மணிக்கு | மங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள் |
| மாசி மாதம் 8-ஆம் நாள் | 20-02-2026 வெள்ளிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம் |
| | | மாலை 5.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம். நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 9-ஆம் நாள் | 21-02-2026 சனிக்கிழமை | காலை 8.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம். மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபகாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 10-ஆம் நாள் | 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 7.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவபிரதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை. |
| | | காலை 10.30 மணிக்கு | கலசங்கள் புறப்பாடு |
| | | காலை 11.00 மணிக்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம் |
| | | காலை 11.15 மணிக்கு | மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம் |
| | | காலை 11.30 மணிக்கு | மஹா அபிஷேகம், அலங்காரம் |
| | | பகல் 12.00 மணிக்கு | சிறப்பு அன்னதானம் |
| | | மாலை 6.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் |
| | | இரவு 8.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும் |
| | | இரவு 10.00 மணிக்கு | நாடகம் நடைபெறும் |

இங்ஙனம்

**திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு**

ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829


**SHANMUGA PRIYA**
TOURS & TRAVELS
Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
**TELE CALLERS**
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
**99412 44226**

அசோக்நகரில் உள்ள
**மாயா நர்சிங் ஹோம்க்கு**
அருகில் வசிக்கும்
**வார்டு பாய் ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**MOUNT HOSPITAL**
@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS

730 530 5231

**ST COURIER**®
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
Full / Part Time ஆட்கள் தேவை.
(ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
(குறிப்பு: பைக் தேவையில்லை)
தகுதி: 10 வது,12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY

MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan | Matrix Plan | Level Plan
Generation Plan | Cryptocurrency MLM
9853719337 / 7436914247

ஆட்கள் தேவை
CNC டர்னிங்
ஆப்பரேட்டர்
பெயிண்டர்
ஹெல்பர்
SAA
நல்ல சம்பளம் வழங்கப்படும்
Southern Heat Exchangers, Coimbatore
99444 40560

Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009

உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com

தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz

Aruvi SUPERMART
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000

PHARMACIST REQUIRED
Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

கேரளாவில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு அனுபவமுள்ள
தோசை மாஸ்டர் & டீ மாஸ்டர் தேவை
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள் ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

ADVERTISE WITH US!







999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
అజంతా
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small
Business
website
E - commerce
Website
Corporate
Website
Enterprise
website
Mobile App
Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA

Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai

Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

Key responsibilities for Marketing Manager

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com

Call: 9337501889

Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt Ltd
International Courier Service
ஆண் / பெண்
வேலைக்கு தேவை
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
பேப்பர்பாய்
8122664699

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARTING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



## மருதாணி வைச்சு கை

மருதாணி வைச்சு கை நல்லா செவந்தா, வீட்டுக்காரரு உன் மேலே ரொம்பப் பாசமா இருக்கார்னு அர்த்தம்டி' - என்கிற பாட்டியின் வார்த்தைகளை நம்பி மருதாணி வைத்துக்கொண்ட பெண்கள் சிலர். அழகுக்காக மருதாணி வைத்துக்கொண்ட பெண்கள் சிலர். ஆனால், மருதாணி வைப்பதால் கிடைக்கிற ஆரோக்கியப் பலன்களைப் பற்றி தெரிந்துகொண்டால், மாதம் ஒருமுறை நாம் அனைவருமே மருதாணியும் கைகளுமாகத்தான் அலைவோம்.அந்தக் காலத்தில் மருதாணி வைத்துக்கொள்வதை அழகியலாகப் பார்த்தார்கள். புதிதாக நகை போட்டுக்கொள்வதைப்போல அதைக் கொண்டாடினார்கள். வீட்டில் விசேஷம் என்றால், அதற்கு முந்தைய நாள் இரவு மருதாணி வைத்தக் கைகளுடன்தான் தூங்கப் போவார்கள். வீட்டுக் கொல்லையில் பறித்த, கெமிக்கல்ஸ் இல்லாத ஹென்னாவுடன் 'மெஹந்தி' கொண்டாடியவர்கள் நம் பாட்டிகளும் அம்மாக்களும். விருந்து, விசேஷங்களின்போது மருதாணி வைப்பதில் அழகியல் மட்டுமல்லாமல், ஆரோக்கியக் காரணமும் இருக்கிறது. ஒரு விருந்தோ, விழாவோ நடக்கும்போது, உறவினர்கள் எல்லாம் ஒன்றுகூடுவார்கள். அப்போது, சில ஈகோ பிரச்னைகள் எழுவதற்கு வாய்ப்பிருக்கிறது. பிரச்னைகளால் வரும் டென்ஷனைக் குறைக்கிற குணம் ஹென்னாவில் இருக்கிறது. மருதாணி வாதங்கள் வராமல் இருக்கவும், அதனால் வருகிற வலியை நீக்கவும் இது உதவும்.



* மாதவிடாய்க்கு முன்னதாகப் பெண்களிடம் ஒருவித எரிச்சலும் சிடுசிடுப்பும் காணப்படும். சிலருக்கு ஒற்றைத் தலைவலி வரும். இவற்றுக்கெல்லாம் காரணம் ஹார்மோன் இம்பேலன்ஸ்தான். இயற்கை வைத்தியம், விரல் முனைகளைத் தலைக்கான பகுதியாகப் பார்க்கிறது. அங்கு ஹென்னா வைப்பதால், ஒற்றைத் தலைவலி போகும். எரிச்சலும் சிடுசிடுப்பும் மட்டுப்படும்.மருதாணி வைக்கப்படுகிற இடங்களான நகங்கள் மற்றும் சருமத்தில் ஃபங்கல் இன்ஃபெக்ஷன் வராது. சருமத்தின் ஹெல்மெட் இது.

* அந்தக் காலத்தில், மருதாணி இலைகளை அரைத்து, சின்னச் சின்ன வறட்டிகளாகக் காய வைத்து, தேங்காய் எண்ணெயில் பொரித்தெடுத்து அந்த எண்ணெயைத் தலையில் தேய்க்கப் பயன்படுத்தினார்கள். இந்த எண்ணெய் இளநரையை வரவிடாமல் தடுக்கும். வந்துவிட்டாலும் மறைக்கும். இதைத்தான் இந்தக் காலத்தில் 'ஹென்னா பேக்' என்று தலையில் போடுகிறார்கள். இதில் அம்மோனியா சேர்த்து ஹேர் கலரிங்காக முடியில் தடவினால், அலர்ஜி உள்ளிட்ட பிரச்னைகள் வரும்.

* மருதாணிக்கும் சரி, அதன் பூவுக்கும் சரி, நம்மை ஆழ்ந்து தூங்க வைக்கிற சக்தி இருக்கிறது. நம் தாத்தாக்கள், இரவுகளில் மருதாணி செடிக்கருகில் ஈசி சேரில் சாய்ந்துகொண்டிருந்ததற்கான காரணம் இதுதான். தூக்கமின்மை பிரச்னையிருப்பவர்கள், மருதாணிப் பூங்கொத்தைத் தலையில் வைத்துக்கொள்ளலாம்.

கவிஞர் **பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்







## மறந்து போன விளையாட்டு 'தாயம் பாஸ்'


சிறியவர்களாகவே இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றும் அளவிற்கு விளையாடிய விளையாட்டுக்கள்தான் எத்தனை! எத்தனை!

இந்த தாயம் விளையாட்டும் ஒன்று. சதுர வடிவில் கட்டம் போட்டு, அதன் உள்ளே ஏழு ஏழு அல்லது ஒன்பது ஒன்பது என்று இரண்டு பக்கமும் கோடுகள் போட்டு அதில் வெளிப்பக்கம் மத்தியிலும், உள்பக்கம் மூலையிலும் பெருக்கல் குறி போல் போட்டு விட்டால் அது மலை ஆகும்.


இப்போது விளையாட்டுக்கு வருவோம். நான்கு பேர் அல்லது இரண்டு பேர் ஆடவேண்டும். தலா ஆறு காய்ன் (புளியங்கொட்டை, சிறு கற்கள், பாசி மணிகள், பெரிய வகை தானியங்கள்) என்று ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக வைத்துக்கொள்வார்கள்.

தாயக்கட்டை என்று அநேகமாக எல்லோர் வீட்டிலும் இருக்கும். இரண்டு கட்டைகள். மூன்று, இரண்டு, ஒன்று என்று மூன்று பக்கமும் ஒரு பக்கம் வெற்றிடமாகவும் இருக்கும்.

இரண்டையும் சேர்த்து சாமியை வேண்டிக்கொண்டு உருட்டுவார்கள். இரண்டும் சேரும்போது ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு என்று காண்பிக்கும்.







இரண்டும் வெற்றிடம் என்றால் பன்னிரண்டு எனப்படும். ஒன்று விழுந்தால் மட்டும் ஒவ்வொரு காயாக அவரவர் அமர்ந்திருக்கும் பக்கம் ஆட்டம் ஆரம்பிக்கும்.

இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாக விழும் எண்ணிற்கு தகுந்தாற்போல் காயை நகர்த்த வேண்டும்.

மலையில் இருந்தால் வெட்டு கிடையாது. ஆனால் மற்ற இடத்தில் இரண்டு பேரும் காய் வைக்க முடியாது. இரண்டாவதாக வருபவர் முதல் நபரின் காயை வெளியே எடுத்து விடுவார்கள்.

ஒரு ரவுண்டு முடிந்தாலும் உள்பக்கம் போவதற்கு அடுத்தவர் காயை வெட்டி வெளியில் எடுத்திருக்க வேண்டும்.

சாமி பேரை சொல்லி இரண்டு வேணும், ஐந்து வேணும் என்று கேட்டு கேட்டு ஆடுவார்கள். அடுத்தவரை துரத்தி துரத்தி வெளியில் தள்ளி மீண்டும் தாயம் (ஒன்று) விழும்போது உள்ளே வந்து என கண்ணிற்கும் மனதிற்கும் சுறுசுறுப்பை தரும்.

அடிக்கடி ஆடுபவர்களுக்கு எந்த நம்பர் விழுந்தால் காய் எங்கு வருமென்று தெரியும். சிரிப்பும் பரபரப்புமாய் த்ரில்லிங்காக இருக்கும் ஒரு அருமையான விளொயாட்டு. மூளைக்கும் அதிக சுறுசுறுப்பை தரும்.

இரண்டு விதமாக விளையாடுவர். சதுர வடிவிலும், கூட்டல் வடிவிலும் கட்டங்கள் போட்டு விளையாடுவார்கள். விடுமுறைக்கு அத்தை மாமா வீட்டிற்கு சென்று விளையாடும் விளையாட்டுகளில் 'தாயம் பாஸ்' ஒரு அற்புத விளையாட்டு. தரையில் சாக் பீஸ் கொண்டு வரைந்தும் விளையாடுவார்கள். நீங்களும் முயற்சிக்கலாமே!


**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

## விடுகதை



| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |

## ஜோக்ஸ்



"ஒன்னுமே தெரியாத ஸ்டூடண்ட் (students ) கிட்ட கொஸ்டின் பேப்பர் (questions papers ) கொடுக்குறாங்க..."

"எல்லாம் தெரிஞ்ச வாத்தியார் கிட்ட ஆன்சர் பேப்பர்(answer papers ) கொடுக்குறாங்க..."

"என்ன கொடும சார் இது?...."

===========================================


"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான்!"

===========================================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"



===========================================

"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"

"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"

===========================================

"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம்!"

===========================================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"

===========================================

ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?"


மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"



# பன்முகம்



## சூரிய ஒளியில் வைட்டமின் டி கிடைக்கும் நேரம் எது?



காலையில் சில நிமிடங்கள் சூரிய ஒளியில் நேரத்தை செலவிடுவது உடலுக்கும், மன ஆரோக்கியத்துக்கும் நன்மை பயக்கும். எலும்பு ஆரோக்கியத்துக்கும் வித்திடும். உடலின் உள் கடிகாரமான சர்க்காடியன் தாளத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இரவில் தூக்கத்தை மேம்படுத்தும். செரிமானம் மற்றும் ஊட்டச்சத்து உறிஞ்சுதலுக்கும் வழி வகுக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் செய்யும். அதேவேளையில் உடலில் வைட்டமின் டி அளவை அதிகரிக்க எந்த நேரத்தில் சூரிய ஒளியில் நேரம் செலவிடுவது சிறந்தது என்ற குழப்பம் பலருக்கும் எழுவதுண்டு.

உடலில் வைட்டமின் டி அளவை அதிகரிக்க வேண்டுமானால் காலை 10 மணிக்குள் சூரிய ஒளியில் நேரத்தை செலவிட்டால் மட்டும் போதுமானதல்ல. ஏனெனில் வைட்டமின் டி-க்கு தேவையான புறஊதாக்கதிர்கள் பெரும்பாலும் காலை 7 மணிக்கு முன்பு பூமியை அடைவதில்லை. இதனால் அதிகாலை சூரிய ஒளி வைட்டமின் டி உற்பத்திக்கு பயன்படுவதில்லை. அந்த சமயத்தில் சூரிய ஒளியின் வீரியம் அதிகமாகவோ ஊதாக்கதிர்கள் வலுவாகவோ இருக்காது.

காலை நேரத்தை பொறுத்தவரை சூரிய ஒளி சர்க்காடியன் தாளங்களை ஒழுங்குபடுத்த உதவும் என்றாலும், வைட்டமின் டி உற்பத்திக்கு தேவையான புற ஊதாக்கதிர்களின் தீவிரம் இதில் இருப்பதில்லை. வைட்டமின் டி உற்பத்திக்கான சிறந்த நேரம் எது தெரியுமா? காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை. இந்த நேரத்தில் புற ஊதாக்கதிர்கள் அதிகமாகவும், நிழல்கள் குறைவாகவும் இருக்கும்.

அந்த சமயத்தில் கைகள், கால்கள் மற்றும் முகம் என உடல் பாகங்கள் மீது சூரிய ஒளி சுமார் 15 நிமிடங்கள் படரும்படி நேரத்தை செலவிடலாம். வாரத்திற்கு 4 அல்லது 5 முறை இவ்வாறு செய்தால் போதுமானது. அதே நேரம் 15 நிமிடங்களுக்கு அதிகமாக சூரிய ஒளி உடலில் படுவது நல்லதல்ல.

ஏனெனில் காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை சூரிய ஒளியின் தாக்கமும், வெப்பமும் அதிகமாக இருக்கும் என்பதால் வெயிலில் சருமம் சேதம் அடையக்கூடும். அதனை தடுக்க அதிகபட்சமாக 15 நிமிடங்கள் சூரிய ஒளியில் நேரத்தை செலவிடுவது போதுமானது. குளிர் காலத்தில் புற ஊதாக்கதிர்களின் வீரியம் அதிகரிக்க காலதாமதாகும் என்பதால் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரைக்குள் சூரிய ஒளியில் நேரத்தை செலவிடலாம். ஆனால் 15 நிமிடங்களை தாண்டக்கூடாது.

## பயனுள்ள சமையல் டிப்ஸ் உங்களுக்காக...



* பால் பாயாசம் சுவையாக இருக்க பாதாம் பருப்பை தோல் நீக்கி அரைத்து சேர்க்க வேண்டும்.

* பச்சை மிளகாய், சிவப்பு மிளகாய் போன்றவற்றை வெந்நீரில் போட்டு சிறிது நேரம் ஊறவைத்து, சமைத்தால் காரத்தன்மை குறையும்.

* அப்பளத்தின் மீது லேசாக நெய் தடவி, சிறிது மிளகுத் தூள் தூவி சுட்டெடுத்தால் சுவை நன்றாக இருக்கும்.

* ஓட்ஸை கஞ்சியாக குடிப்பதை விட இட்லி மாவு, தோசை மாவில் சேர்த்து கலந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

* வடை மாவு நீர்த்து விட்டால், அதன் மீது சிறிது பச்சரிசி மாவு, கைப்பிடி ரவை சேர்த்தால் அதிகப்படியான நீரை அது உறிஞ்சி விடும்.

* பூண்டுவை கொதிக்கும் தண்ணீரில் போட்டு பின்பு குளிர்ந்த நீரில் லேசாக ஊறவைத்தால் சுலபமாக உரிக்கலாம்.

* சூடான எண்ணெய்யில் சிறிது மைதா மாவு தூவினால் அந்த எண்ணெய்யில் எதை பொரித்தாலும் சட்டென்று ஒட்டாது.

* தக்காளி கெடாமல் இருக்க காற்றோட்டமான இடத்தில் வைக்க வேண்டும்.

* தேங்காயை மேல் நோக்கியவாறு வைத்தால் நீண்ட நாட்கள் அழுகாமல் இருக்கும்.

* அரிசி, ரவா, கோதுமை டப்பாவில் பூச்சி வராமல் இருக்க ஒரு சிறு துண்டு வசம்பை துணியில் கட்டி டப்பாவில் போட வேண்டும்.

* இட்லி மாவு அரைக்கும் போது சிறிது வெண்டைக்காய் சேர்த்து அரைத்தால் இட்லி மென்மையாக வரும்.

* தயிரில் ஒரு துண்டு தேங்காயை போட்டு வைத்தால் தயிர் எளிதில் புளிக்காது.

* பாகற்காயை உப்பு, மஞ்சள், வெல்லம், எலுமிச்சை சாறு கலந்த தண்ணீரில் 30 நிமிடங்கள் ஊற வைத்தால் கசக்காது.

## அம்பிகையால் உருவான சிவராத்திரி வழிபாடு



பிரளய காலத்தின் போது பிரம்மனும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் பரம்பொருளுக்குள் அடங்கின. இதையடுத்து அன்றைய இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்துப் பூஜை செய்தார். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தார்.

பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி, அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை, தேவர்களும் மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே - அதாவது ‘சிவராத்திரி’ என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினார். சிவராத்திரி அன்று, சூரியன் மறைந்தது முதல் மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை, சிவனைப் பூஜிப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லா விதமான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தையும் அளிக்க வேண்டும் என்று அன்னையானவள் வேண்டிக் கொண்டாள்.



சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள் புரிந்தார். அந்த இரவே சிவராத்திரி என வழங்கப்பட்டு, அனைவராலும் கொண்டாடப்படுகிறது. பகல் பொழுது பரமேஸ்வரனுக்கும், இரவுப்பொழுது அம்பிகையான உமாதேவிக்கும் உரியது. ஆனால் சிவராத்திரி என்பது அம்பாளின் வேண்டுதலின்படி கொண்டாடப்படுவதால் அது சிவனுக்கு உரியதானது.

## வாழ்வில் வளம் பெறுவது எப்படி?



நம் நாட்டில், பெரும்பாலானோர் உழைப்பதில் வேறுபாடில்லை. ஒவ்வொருவரும் தத்தமது குடும்பத்துக்காக தம்மால் இயன்ற வரை கடுமையாகத்தான் உழைக்கிறார்கள்.

ஆனால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் மட்டுமே, வாழ்வில் வசதியாக, வளமாக இருக்கிறார்கள்.

இதன் காரணம் பெரும்பாலானோருக்குப் புரிவதில்லை. அந்த பின்னணி ரகசியத்தை நிதி ஆலோசனை நிபுணர்கள் விளக்குகிறார்கள்.

அந்த விவரம்...

பணம்தான் நமக்கு பணத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அதேபோல, புதிதாக வேலைக்குச் செல்பவர்கள், பெரிய நிறுவனங்களில் வேலைக்குச் சேர முயல வேண்டும். அந்த நிறுவனப் பணிகள் ‘கோல்டு ஸ்டாண்டர்டு ஜாப்ஸ்’ என்று அழைக்கப்படுகின்றன.

பெரிய நிறுவனங்களில் பணிபுரிவது உங்கள் திறமையை மட்டுமல்ல, உங்களது ‘புரொபைலையே’ வளர்ந்துவிடும். பெரிய நிறுவனத்தில் நீங்கள் பணிபுரிந்து விலக நேர்ந்தால், உடனே அதைப் போன்ற மற்றொரு பெரிய நிறுவனத்தில் வேலை கிடைத்துவிடும்.

ஆனால் நடுத்தர, சிறு நிறுவனத்தில் இருந்து விலகினால் அப்படி அமையாது. நீங்கள் வேலைக்குச் சேரும் நிறுவனத்தின் ‘பிராண்ட் வேல்யூ’ மிக முக்கியமானது. மதிப்புமிக்க நிறுவனங்களில்தான் உங்களால் குறுகிய காலத்திலேயே பெரிய சம்பளத்துக்குச் செல்ல முடியும்.

ஆனால் இவ்வாறு வேலைக்குச் சென்று நல்ல சம்பளம் பெறும் பெரும்பாலானவர்கள் செய்யக்கூடிய தவறு, வருமானத்தை தவறான வழிகளில் முதலீடு செய்வது.

பாதுகாப்பானது என்ற கருத்தில், பிக்சட் டெபாசிட்களில் நாம் பணத்தைப் போடுவோம். ஆனால் அந்த தொகை வளர்ந்து இருக்கும்போது, பணவீக்கம் காரணமாக அந்தப் பணம் போதுமானதாக இருக்காது. எனவே நாம் தொடர்ந்து நெருக்கடி நிலையிலேயே இருப்போம்.

அதேநேரம், கண்ணை மூடிக்கொண்டு ஏதோ ஒரு ‘இன்புளுயன்சர்’ சொல்கிறார் என்பதற்காக நாம் எந்த திட்டங்களிலும் முதலீடு செய்யக் கூடாது.

பாரம்பரியமான பிக்சட் டெபாசிட், ரியல் எஸ்டேட் முதலீடு போன்றவற்றை அளவோடு, விவேகத்தோடு செய்ய வேண்டும்.

இளம் பருவத்தினர், இந்த வயதில்தான் ‘ரிஸ்க்’ எடுக்க முடியும் என்பதால் ஈக்விட்டி முதலீடுகள் குறித்து தெரிந்துகொள்ளவும், அவற்றில் ஈடுபடவும் நிதி ஆலோசகர்கள் வலியுறுத்துகின்றனர்.

நிதி ஆலோசகர்கள் இன்னொரு விஷயத்தையும் சுட்டிக் காட்டுகிறார்கள். அதாவது, பணக்காரர்களுக்கும் நடுத்தரவர்க்க மக்களுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசம், பணக்காரர்கள் அதிக வருமானம் ஈட்டுவார்கள், அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியை சரியாகத் திட்டமிட்டு குறைப்பார்கள். ஆனால் நடுத்தர மக்களோ, எவ்வளவு வரி வருகிறதோ அதைச் செலுத்துவார்கள். மாறாக, திட்டமிட்டு முதலீட்டையும் சேமிப்பையும் செய்தால் வரியையும் குறைவாக செலுத்தலாம். உங்களுடைய செல்வத்தையும் பெருக்கலாம் என்கின்றனர்.

பெரும் பணக்காரர்கள் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வேலை செய்வதெல்லாம் கிடையாது. அவர்கள் பணத்தைக் கொண்டுதான் பணத்தைப் பெருக்குகிறார்கள். எனவே உங்களுடைய பணத்தை சரியாக முதலீடு செய்யுங்கள் என்பதுதான் நிதி நிபுணர்களின் முக்கியமான அறிவுரையாகும்.

## 8000mAh பேட்டரி, 45W சார்ஜிங்... மிட் ரேஞ்சில் மிரட்டும் புது ஸ்மார்ட்போன்



டெக்னோ பிராண்டின் முற்றிலும் புதிய POVA Curve 2 5ஜி ஸ்மார்ட்போன் இந்திய சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டது. புதிய ஸ்மார்ட்போனில் 6.78 இன்ச் 1.5K 3D Curved AMO-LED ஸ்கிரீன், மீடியாடெக் டிமென்சிட்டி 7100 பிராசஸர், அதிகபட்சம் 8 ஜிபி ரேம், 8 ஜிபி வரை விர்ச்சுவல் ரேம் வழங்கப்பட்டு இருக்கிறது.

இந்த ஸ்மார்ட்போன் ஆண்ட்ராய்டு 16 சார்ந்த ஹைஒஎஸ் 16 மூலம் இயங்குகிறது. இந்த ஸ்மார்ட்போன் ஆங்கிலம் மட்டுமின்றி இந்தி, பெங்காலி, தமிழ், குஜராத்தி மற்றும் மராத்தி மொழிகளிலும் பயன்படுத்த முடியும். இந்தியாவில் முதல் முறையாக இந்த பிரிவில் ஏஐ நாய்ஸ் ரிடக்ஷன் வசதியுடன் இந்த ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது ஸ்மார்ட்போனை சாதாரண அழைப்புகள், வாட்ஸ்அப் சாட், ஜூம் மீட்டிங் அல்லது கேமிங் என அனைத்து வகை பயன்பாடுகளின் போதும் பயனரின் குரல் தெளிவாக கேட்பதை உறுதி செய்யும்.

ஸ்டார்ஷிப் சார்ந்த டிசைன் கொண்டிருக்கும் புதிய டெக்னோ ஸ்மார்ட்போன் அசத்தலான தோற்றம் கொண்டிருக்கிறது. இந்த ஸ்மார்ட்போனில் IP64 தர டஸ்ட், ஸ்பிலாஷ் ரெசிஸ்டண்ட் வசதி வழங்கப்பட்டுள்ளது. புதிய POVA Curve 2 5ஜி ஸ்மார்ட்போன் 8000mah பேட்டரி மூலம் சக்தியூட்டப்படுகிறது. இத்துடன் 45 வாட் ஃபாஸ்ட் சார்ஜிங் வசதி வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஸ்மார்ட்போன் 7.42 மில்லிமீட்டர் அளவில் வெறும் 195 கிராம் எடை கொண்டிருக்கிறது.

டெக்னோ POVA Curve 2 5ஜி ஸ்மார்ட்போன் மிஸ்டிக் பர்ப்பில், ஸ்டார்ம் டைட்டானியம் மற்றும் மெல்டிங் சில்வர் என மூன்றுவித நிறங்களில் கிடைக்கிறது. இதன் 8 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி மாடல் விலை ரூ. 27,999 என்றும் 8 ஜிபி ரேம், 256 ஜிபி மெமரி மாடல் விலை ரூ. 29,999 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஸ்மார்ட்போனின் விற்பனை ப்ளிப்கார்ட் மற்றும் முன்னணி ரீடெயில் ஸ்டோர்களில் வருகிற 20ஆம் தேதி தொடங்குகிறது. இந்த ஸ்மார்ட்போனிற்கான முன்பதிவுகள் ஏற்கனவே தொடங்கி நடைபெற்று வருகிறது. அறிமுக சலுகையாக இந்த ஸ்மார்ட்போன் வாங்கும் போது ரூ. 1500 உடனடி தள்ளுபடி மற்றும் 3/6 மாதங்கள் வரை வட்டியில்லா மாத தவணை சலுகையில் ரூ. 3000 கேஷ்பேக் வழங்கப்படுகிறது.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

## 504 அடுக்குமாடி குடியிருப்புகளில் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை சபாநாயகர் அப்பாவு வழங்கினார்



வள்ளியூர் பேரூராட்சியில், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் ரூ.52 கோடியில் கட்டப்பட்டுள்ள 504 அடுக்குமாடி குடியிருப்புகளில் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை சபாநாயகர் அப்பாவு வழங்கினார்.

## தேர்தல் வாக்குறுதி தெருமுனை பிரசாரம்



மேலநீலிதநல்லூர் ஒன்றியம் மலையங்குளத்தில் நடந்த அதிமுக தேர்தல் வாக்குறுதி தெருமுனை பிரசாரத்தில் முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி பங்கேற்றார்.

## அதிமுக இலக்கிய அணி புதிய அலுவலகம்



கரூர் மாவட்ட அதிமுக இலக்கிய அணி புதிய அலுவலகத்தை, முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, எம்ஆர் விஜயபாஸ்கர் திறந்து வைத்தனர்.

## ஆல்இந்தியா பீப்பிள் டெவலப்மெட் கட்சி ஆதரவு



அதிமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவிப்பதாக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம் ஆல்இந்தியா பீப்பிள் டெவலப்மெட் கட்சியின் தலைவர் மாரிச் செல்வம் கடிதம் அளித்தார்.

## கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பரிசு



ராணிப்பேட்டையில் நடந்த மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு ரூ.25ஆயிரம் பரிசை மாவட்ட அதிமுக செயலாளர் சுகுமார் வழங்கினார்.

## ரவுசு மணி

பணம்
கொடுத்தாலும்
வாங்கினாலும்
பிரச்சினைதான்....

கொடுத்தால்
உறவு தெரியும்...

வாங்கினால்
மரியாதை
தேயும்



V.முத்து ராமகிருஷ்ணன்

## 1,330 மாணவர்கள் உருவாக்கிய திருவள்ளுவர் உருவம்




விருதுநகர் நோபிள் மெட்ரிக் பள்ளி வளாகத்தில், உலக சாதனை நிகழ்வாக 1,330 மாணவர்கள் ஒன்று சேர்ந்து நின்று உருவாக்கிய திருவள்ளுவர் உருவம்.

## சிவலிங்கத்துக்கு பக்தர்கள் பாலாபிஷேகம்



மகா சிவராத்திரியை முன்னிட்டு, சென்னை புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயிலில் சிவலிங்கத்துக்கு பக்தர்கள் பாலாபிஷேகம் செய்து வழிபட்டனர்.

## கோலப்போட்டியில் வெற்றி பெற்ற பெண்களுக்கு பரிசு



வேளச்சேரி ஜெகன்நாதபுரத்தில் பாஜக இளைஞரணி சார்பில் நடந்த மகாசிவராத்திரி கோலப்போட்டியில் வெற்றி பெற்ற பெண்களுக்கு இளைஞரணித் தலைவர் சூர்யா பரிசு வழங்கினார்.

## ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை



அம்பை தொகுதியில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகளை இசக்கி சுப்பையா எம்எல்ஏ வழங்கினார்.

## வன சேவை அதிகாரி பாஜகவில் சேர்ந்தார்



வன சேவை அதிகாரியாக பணிபுரிந்த காளி துரை நேற்று பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன், மேலிட பொறுப்பாளர் அரவிந்த் மேனன் முன்னிலையில் பாஜகவில் சேர்ந்தார்.

## விஜயகாந்த் நினைவிடத்தில் பூஜை



சென்னை விஜயகாந்த் நினைவிடத்தில் நேற்று பூஜை செய்து வழிபட்ட தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் சிவசங்கர், மெய்யநாதன் வழங்கினர்.

## திருச்சி புத்தக திருவிழா கண்காட்சி



திருச்சிராப்பள்ளி செயிண்ட் ஜான்ஸ் வெஸ்டிரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் திருச்சி புத்தக திருவிழா கண்காட்சியை அமைச்சர்கள் நேரு, அன்பில்மகேஷ் துவக்கி வைத்தனர்.

## புதிய மேம்பாலத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை அடையாறு மத்திய கைலாஷ் பகுதியில் ரூ.60.68 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய மேம்பாலத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அமைச்சர்கள் எம்ஆர்கே பன்னீர்செல்வம், எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், தென்சென்னை எம்.பி., தமிழச்சி உள்ளனர்.

## புதிய நியாய விலை கடை திறப்பு



ஆவடி மாநகராட்சி வார்டு எண் 6ல் புதிய நியாய விலை கடையை அமைச்சர் நாசர் திறந்து வைத்தார்.

## நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு



கோயம்புத்தூர் மாநகராட்சி - வடவள்ளியில் ரூ 1.48 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

## பல்நோக்கு மருத்துவ முகாம்



ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி - தொப்பம்பட்டி ஊராட்சியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" பல்நோக்கு மருத்துவ முகாமில் அமைச்சர் சக்கரபாணி, நலத்திட்ட உதவி வழங்கினார்.

## பெண்கள் மஞ்சள் பால்குடம் ஊர்வலம்



மகா சிவராத்திரியை முன்னிட்டு கோவில்பட்டி அங்காள ஈஸ்வரி கோவிலுக்கு பெண்கள் ஊர்வலமாக மஞ்சள் பால்குடம் ஏந்தி வந்தனர்.

## நாட்டியாஞ்சலி



அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயிலில் மகாசிவராத்திரி விழாவில் நாட்டியாஞ்சலி நடந்தது.

## அண்ணா, கருணாநிதி உருவ சிலை



பட்டுக்கோட்டை ஆலடிக்குமளை பகுதியில் பேரறிஞர் அண்ணா, கருணாநிதி உருவ சிலைகளை துணை முதல்வர் உதயநிதி நேற்று திறந்து வைத்தார். அமைச்சர்கள், நேரு, அன்பில்மகேஷ், டிஆர்பி ராஜா, ரகுபதி, கோவி செழியன், மெய்யநாதன் உடன் உள்ளனர்.

## பாலவாக்கத்தில் பல்வேறு புதிய பணிகள் மற்றும் கட்டிடங்க் திறப்பு



சோழிங்கநல்லூர் தொகுதி பாலவாக்கத்தில் பல்வேறு புதிய பணிகள் மற்றும் கட்டிடங்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். உடன் தமிழச்சி எம்.பி., மற்றும் திமுகவினர் உடன்உள்ளனர்.

## சமூக ஜனநாயக கையேடு வெளியிட்டு விழா



தூத்துக்குடி வ.உ.சி கல்வியில் கல்லூரி - பொது பள்ளிக்கான மாநில மேடை இணைந்து நடத்திய சமூக ஜனநாயக கையேடு வெளியிட்டு விழாவில் அமைச்சர்கீதாஜீவன், கையேடுகளை வழங்கினார்.

## கபாலீஸ்வரர் கோவிலில் தரிசனம்



மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் நேற்று பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தரிசனம் செய்தார்.

## அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம்



சேலம் மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டத்தில் பாமக எம்எல்ஏ அருள் ராமதாஸ் எம்எல்ஏ ஆதரவு தெரிவித்தார்.

## பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி




கோவை குனியமுத்தூர், மைல்கல் பகுதியில் நடந்த அதிமுக முப்பெரும் விழாவில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் வேலுமணி வழங்கினார்.

# சுற்றுலா: திருநெல்வேலியில் ரசிக்க வேண்டிய 5 இடங்கள்!

திருநெல்வேலி என்றவுடன் நம் நினைவிற்கு வருவது அல்வா மட்டும்தான். புகழ்பெற்ற நெல்லையப்பர் கோவில் என திருநெல்வேலியை சுற்றிலும் நிறைய நாம் ரசிக்க வேண்டிய பார்க்க வேண்டிய இடங்கள் உள்ளன. அவைகளில் முக்கியமான ஐந்து இடங்கள் பற்றி இப்பதிவில் பார்ப்போம்.




1. களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகம்

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் என்பது தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குறுங்குடியில் இருந்து கடையம் வரை 895 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இது இந்தியாவின் 17ஆவது புலிகள் காப்பகமாகும். 1988ம் ஆண்டு களக்காடு புலிகள் சரணாலயமும், முண்டந்துறை புலிகள் சரணாலயமும் ஒருங்கிணைக்கப்பட்டு இந்த காப்பகம் உருவாக்கப்பட்டது.

2. அரியகுளம் பறவைகள் சரணாலயம்

பறவை ஆர்வலர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடம் அரியகுளம். இங்கு மார்ச் முதல் ஜூன் மாதம் வரை பலவகையான வெளிநாட்டு பறவைகள் மற்றும் உள்நாட்டு பறவைகள் இனப்பெருக்கம் செய்வதற்காக கூட்டமாக வருகின்றன. அவற்றுள் ஸ்பாட் டவ், க்ரீன் சாண்ட்பைப்பர், பிளாக் விங்கிடு ஸ்டில்ட் மற்றும் காமன் கூட் ஆகிய பறவைகள் காண்பதற்கு அரிதானவை. இந்த சரணாலயம் திருநெல்வேலியில் இருந்து தூத்துக்குடி செல்லும் சாலையில் அமையப்பெற்றுள்ளது.



3. மாஞ்சோலை

திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி பகுதியில் உள்ள களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அமையப்பெற்றுள்ள ஒரு அழகிய மலைவாசஸ்தலம்தான் மாஞ்சோலை. இங்கு கண்ணை கவரும் பசுமையான தேயிலை தோட்டங்கள் மற்றும் எஸ்டேட்டுகள் அமையப் பெற்றுள்ளன. மாஞ்சோலையில் விளையும் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அளவுக்கு மிகவும் பிரபலமானது. மாஞ்சோலையில் உள்ள குதிரைவெட்டி, காக்காச்சி, ஊத்து, கோதையாறு ஆகிய இடங்கள் சுற்றுலா செல்வோரின் உள்ளத்தை கொள்ளை கொள்ளும்.



4. அகத்தியர் அருவி

மேற்குத் தொடர்ச்சி மலை பகுதியில் வற்றாது வளம் கொழிக்கும் தாமிரபரணி ஆறு பாயும் வழித்தடத்தில் அமையப்பெற்றுள்ளது அகத்தியர் அருவி. இங்கு வருடத்தின் அனைத்து நாட்களிலும் வற்றாமல் தண்ணீர் விழுவதால் சுற்றுலா பயணிகள் கூட்டம் நிரம்பி காணப்படும். இந்த அருவிக்கு அருகில்தான் பாபநாசம் சிவன் கோவில் மற்றும் சொரிமுத்து அய்யனார் திருக்கோவில் அமையப்பெற்றுள்ளது.

5. கூந்தங்குளம் பறவைகள் சரணாலயம்: தென்னிந்தியாவில் நீர்ப்பறவைகள் இனப்பெருக்கம் செய்வதற்கான சிறந்த இடமாக திகழ்கிறது கூந்தங்குளம். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரி தாலுகாவில் உள்ள இந்த சரணாலயம் பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இங்கு விதவிதமான உள்நாட்டு பறவைகள், வெளிநாட்டு பறவைகள் மற்றும் காண்பதற்கு அரிதான பலவகை பறவைகள் சீசன் காலத்தில் அணிவகுத்து வரும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ஆன்லைன் பகுதி நேர வேலைவாய்ப்பு மோசடி: தூத்துக்குடி மாவட்ட காவல்துறை எச்சரிக்கை

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சமீப நாட்களாக தூத்துக்குடி மாவட்டத்தில் online scams நடைபெற்று வருகிறது. குறிப்பாக வாட்ஸ்அப், டெலிகிராம், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் (Facebook) போன்ற சமூக வலைதளங்களில் பரப்பப்படும் போலி பகுதி நேர வேலைவாய்ப்பு மூலம் பொதுமக்கள் குறிவைக்கப்படுகின்றனர். இவ்வகை மோசடியில் Google Maps-ல் hotels மற்றும் products-க்கு like அல்லது review செய்வது, profiles அல்லது cars-க்கு review போடுவது, mobile apps அல்லது websites-ல் வழங்கப்படும் books மற்றும் novels வாசிப்பது போன்ற எளிய செயல்களை செய்தால், எளிதில் வருமானம் கிடைக்கும் என மோசடியாளர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் அறிமுகமில்லாத நபர்களால் டெலிகிராம் அல்லது வாட்ஸ்அப் மூலம் வழிநடத்தப்படுகின்றனர். அவர்கள் போலியான மொபைல் செயலிகளை பதிவிறக்கம் செய்யவோ அல்லது போலியான இணையதளங்களை பயன்படுத்தவோ அறிவுறுத்துகின்றனர். ஆரம்பத்தில் நம்பிக்கை ஏற்படுத்த சிறிய தொகை லாபமாக கொடுக்கப்பட்டு பின்னர் பெரிய முதலீடு செய்தால் பெரிய வருமானம் கிடைக்கும் என ஆசை வார்த்தை கூறியும் மேலும் மற்றவர்களையும் இதில் இணைத்தால் (referral) முதலீடு செய்த தொகை ஒரு வாரத்திற்குள் திரும்ப கொடுக்கப்படும் என பொய்யான வாக்குறுதிகளை மோசடியாளர்கள் வழங்குகின்றனர். இதனை நம்பி பெரிய முதலீடு செய்ததும் மோசடியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்பை துண்டித்து விடுகின்றனர்.

எனவே பொதுமக்கள் குறைந்த முயற்சியில் அதிக லாபம் தருவதாக கூறப்படும் பகுதி நேர வேலைவாய்ப்பு அல்லது முதலீடு தொடர்பான திட்டங்களை நம்ப வேண்டாம் எனவும் மேலும் சமூக வலைதளங்களில் வரும் செய்தி அதில் உள்ள லிங்க் அல்லது மொபைல் செயலிக்கான லிங்க் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்ய வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் சந்தேகத்திற்கிடமாக முதலீட்டு சலுகைகள் கிடைத்தாலோ அல்லது இதுபோன்ற சைபர் மோசடிகளில் பாதிக்கப்பட்டாலோ உடனடியாக சைபர் குற்ற உதவி எண் 1930 அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்திலோ புகார் பதிவு செய்யுமாறு பொதுமக்கள் நலன் கருதி தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

## மன்சூர் அலிகான் மகன் துக்ளக் கார் மரத்தில் மோதி விபத்து

**சென்னை, பிப்.16:**

நடிகர் மன்சூர் அலிகானின் மகன் துக்ளக் சென்ற கார் மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

சென்னை ஹாடோஸ் சாலையில் இருந்து உத்தமர் காந்தி சாலை நோக்கி நேற்று நள்ளிரவு அதிவேகமாக சென்ற கார் ஒன்று திடீரென ட்டுப்பாட்டை இழந்து சாலையோரத்தில் இருந்த மரத்தில் மோதியது. இதனால் கார் தலைகீழாக கவிழ்ந்து கடுமையான சேதத்துக்கு உள்ளானது. இந்த காரை நடிகர் மன்சூர் அலிகானின் மகன் துக்ளக் ஓட்டி வந்துள்ளார். விபத்தில் அதிர்ஷ்டவசமாக அவர் உயிர்தப்பினார். காயம் அடைந்த அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு உடனடியான மருத்துவனைக்கு அனுப்பி வைத்தனர். போலீசார் இந்த விபத்து குறித்து விசாரித்து வருகின்றனர். அதிவேகம் முக்கிய காரணமாக இருந்தாலும், விபத்து நேரத்தில் துக்ளக் மது அருந்தியிருந்தாரா என்பது குறித்து போதை சோதனை உள்ளிட்ட ஆய்வுகள் நடைபெறுகின்றன. விபத்து நடந்த இடத்தில் கார் மிகுந்த சேதமடைந்த நிலையில், சாலைப் பாதுகாப்பு விதிகளை மீறியதால் இது நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஊட்டியில் படகு சவாரியை நிறுத்தினால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைவார்கள்: தமிழக அரசு

**சென்னை, பிப். 16:**

ஊட்டி பைகாரா ஏரியில் படகு சவாரிக்கு, பெட்ரோல் மோட்டார் படகுகளுக்கு பதிலாக, மின் மோட்டார் படகுகள் பயன்படுத்தப்படும் என தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளது. வனம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் என் சதீஷ்குமார் மற்றும் டி பரத சக்கரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வில், ஊட்டியில் பைக்காரா ஏரியில் படகு சவாரிக்கு, பெட்ரோல் மோட்டார் படகுகளை பயன்படுத்துவதால் ஒலி மாசு ஏற்பட்டு, விலங்குகள் பாதிக்கப்படுவதுடன், பெட்ரோல் கசிவு காரணமாக, ஏரி நீர் மாசடைகிறது என, நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் தெரிவித்திருந்தனர். இந்த வழக்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிகழகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், படகு சவாரிக்காக பெட்ரோல் மோட்டார் படகுகளை பயன்படுத்தப்படுவதாகவும், டீசல் மோட்டார் படகுகளை பயன்படுத்துவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அடர்ந்த வனப் பகுதிக்குள் படகு சவாரி நடத்தப்படுவது இல்லை என்றும், பெட்ரோல் படகுகளால் ஏரி மாசுபடுவதை தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் படிப்படியாக பெட்ரோல் மோட்டார் படகு பயன்பாடு குறைக்கப்பட்டு, மின் மோட்டார் படகுகள் பயன்படுத்தப்படும் என்றும் அறிக்கையில் உறுதி தெரிவித்துள்ளது. திடீரென படகு சவாரியை நிறுத்தினால், சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைவார்கள் என்றும் வருவாய் பாதிப்பு ஏற்படும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்தனர்.

## ஆவடி, மதுரவாயல் உட்பட 8 சட்டமன்ற தொகுதிகளில் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம்

**செங்கல்பட்டு, பிப்.16:**

வரும் 21ந் தேதி முதல் 26ந் தேதி வரை ஆவடி, மதுரவாயல், அம்பத்தூர், மாதவரம் உட்பட 8 சட்டமன்ற தொகுதிகளில் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் செய்கிறார்.

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களைக்காப்போம்;தமிழகத்தை மீட்போம்' என்ற உன்னத நோக்கத்தை லட்சியமாகக் கொண்டு, தமிழகம் முழுவதும் சட்டமன்றத் தொகுதி வாரியாக 'புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணம்' என்ற பிரச்சார சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இதுவரை 181 சட்டமன்ற தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டு மக்களின் ஆதரவை திரட்டி உள்ளார். அவர் பேசிய பொதுக்கூட்டங்களில எல்லாம் மக்கள் வெள்ளமென திரண்டு வந்து அவரது பேசைகேகட்டு ஆதரவு தெரிவித்தனர்.

பிரச்சாரத்தின் தொடர்ச்சியாக, 21ந் தேதி முதல் 26ந் தேதி வரை, கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பிரச்சார சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.



21ந் தேதி (சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு ஆவடி, அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிகளில் அம்பத்தூரில் பிரச்சாரம் செய்கிறார்.

22ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு மாதவரத்திலும், மாலை 5 மணிக்கு பொன்னேரியிலும் பிரச்சாரம் செய்கிறார்.

25ந் தேதி (புதன்கிழமை) திருவள்ளூர் மத்திய மாவட்டம் மதுரவாயல், பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிகளில் மாலை 5 மணிக்கு மதுரவாயல் - ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டப வளாகத்திலும்,

26ந் தேதி வியாழக்கிழமை செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம், பல்லாவரம் தொகுதியில் மாலை 4.30 மணிக்கு பல்லாவரம் - துரைப்பாக்கம் ரேடியல் சாலையிலும் பொதுக்கூட்டங்களில் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் செய்கிறார்.

புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணத்திற்கான ஏற்பாடுகளை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

'புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணத்தின்' போது, சம்பந்தப்பட்ட கழக மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்; கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்பு களும், பொது மக்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அ.தி.மு.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அதிகாரப் பகிர்வு அவசியம்; நாங்கள் கேட்பது தி.மு.க. தோல்வியடைந்த இடங்களைத்தான்: மாணிக்கம் தாகூர்

**சென்னை, பிப்.16:**

அதிகார பகிர்வு அவசியம். கடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. போட்டியிட்டு தோல்வியடைந்த இடங்களைத்தான் நாங்கள் கேட்கிறோம் என்று காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் இன்னும் 2 மாதத்தில் நடைபெற இருக்கிறது. தி.மு.க. - காங்கிரஸ் இடையேயான கூட்டணியில் தொகுதிப் பங்கீடு மற்றும் ஆட்சியில் பங்கு போன்றவை இழுப்பறியாக உள்ளது. இந்த நிலையில், தமிழக அமைச்சர் ராஜகண்ணப்பன் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் வரும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. 160 170 தொகுதிகளில் போட்டியிட்டு, 160 தொகுதிகள் வரை வெற்றி பெறும் என்று பேசியிருந்தார். இந்த பேச்சை மேற்கோள்காட்டி, காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் இன்று ஒரு எக்ஸ் பதிவை வெளியிட்டு கூறியிருப்பதாவது: 2021 -ல் 173-ல் போட்டியிட்டு 133 தொகுதிகளில் வெற்றி.நாங்கள் கேட்பது நீங்கள் தோல்வி அடைந்த இடங்களை தான்.அதிகார பகிர்வு அவசியம். ஆட்சி பங்கு எங்கள் உரிமை. மக்கள் தீர்மானிப்பார்கள் என்று பதிவிட்டுள்ளார்.

இந்த வாரம் தொடக்கம் முதலே இந்த ஆட்சியில் பங்குக்கான கோரல்களும் மறுப்புகளும் அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கின்றன. சென்னையில் ஒருசில நாள்களுக்கு முன்பு நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய முதல்வர் ஸ்டாலின்,

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி ஒத்துவராது. காங்கிரஸ் கட்சியுடனான கூட்டணி தொடரும் என்று பேசியிருந்தார். இது ஆட்சியில் பங்கு என்று காங்கிரஸ் தலைவர்களின் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல அமைந்திருந்தது. ஆனால், கூட்டணி ஆட்சி குறித்து தமிழக முதல்வர் பேசிய செய்தி வெளியான சிறிது நேரத்திலேயே அவரது கருத்துக்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர், தன்னுடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் "மக்கள் முடிவு செய்வார்கள். கூட்டணி ஆட்சியா அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை.

2006-ல் மக்கள் தீர்ப்பை செயல்படுத்தாதது நம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தவறு" என்று பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.3 கோடி கஞ்சா பறிமுதல்

**சென்னை, பிப்.16:**

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்காக்கில் இருந்து விமானம் வந்தது. வடமாநிலத்தை சேர்ந்த 30 வயது வாலிபர், சுற்றுலா விசாவில் தாய்லாந்துக்கு சென்றுவிட்டு திரும்பி வந்திருந்தார். அவர் மீது சந்தேகம் அடைந்த சுங்க இலாகா நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள், அவரிடம் இருந்த உடைமைகளை சோதனை செய்தனர்.

அவரது சூட்கேசுக்குள் செல்பி முறையில் வீடியோ எடுக்கக்கூடிய தானியங்கி புகைப்பட கருவி இருந்தது. மேலும் 8 பதப்படுத்தப்பட்ட உணவு பாக்கெட்டுகள் இருந்தது. அவற்றை பிரித்து பார்த்தபோது ஹைட்ரோ போனிக் என்ற பதப்படுத்தப்பட்ட உயர்ரக கஞ்சா 3 கிலோ மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர்.

இதன் மதிப்பு சுமார் ரூ.3 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. சுங்க இலாகா அதிகாரிகள் கஞ்சாவை கடத்தி வந்த வாலிபரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## 17ந் தேதி முதல் காலவரையற்ற கடையடைப்பு போராட்டம்: டாஸ்மாக் ஊழியர்கள் அறிவிப்பு

**சென்னை, பிப்.16:**

17ந் தேதி முதல் டாஸ்மாக் ஊழியர்கள் காலவரையற்ற கடையடைப்பு போராட்டம் நடத்த உள்ளதாக கூறப்படுகிறது.

டாஸ்மாக் ஊழியர்கள் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 1-ந்தேதி முதல் காத்திருப்பு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இந்தப் போராட்டத்தை சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.சி. பாட்டாளி, விடுதலை சிறுத்தை உள்ளிட்ட முக்கிய தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து நடத்துகின்றன. டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டத்திற்கு அரசியல் கட்சி தலைவர்களும் சிலர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் போராட்டத்தை தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளனர். அரசு இதுவரையில் அழைத்து பேசாததால் அடுத்த கட்டமாக 17-ந்தேதி முதல் காலவரையற்ற கடை அடைப்பு போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளனர். போராட்டம் குறித்த நோட்டீஸ் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுநாள் (16-ந்தேதி) இரவு 10 மணிக்கு டாஸ்மாக் கடைகளை மூடி சாவியை நிர்வாகத்திடம் கொடுத்து விடுவதாகவும் 17-ந்தேதியில் இருந்து பணிக்கு செல்ல மாட்டோம் என்றும் கூட்டமைப்பு சார்பில் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இது குறித்து தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் கூறியதாவது:- தமிழ்நாட்டில் 4,749 டாஸ்மாக் கடைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இதில் 23 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். மிகவும் குறைந்த சம்பளத்தில் 23 ஆண்டுகளாக பணியாற்றி வரும் இவர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்பது முக்கியமான கோரிக்கையாகும். 14 நாட்கள் தொடர்ந்து போராடிவரும் நிலையில் எங்களை இதுவரையில் அரசு அழைத்துப் பேசவில்லை. அதனால் பணி புறக்கணிப்பு போராட்டத்தை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறோம். மேலும் அனைத்து மாவட்டங்களிலும் காலிபாட்டில் ஸ்டிக்கர்களை ஒப்படைக்கவும் முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.


இந்த போராட்டத்தில் டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், உதவியாளர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதால் பாதிப்பு ஏற்படக்கூடும். ஆளுங்கட்சி தொழிற்சங்கமான தொ.மு.ச. தொழிலாளர்கள் இதில் பங்கேற்பார்களா என்று தெரியவில்லை.

# கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம்; ஸ்டாலின் திறந்தார்; நொய்யல், நாவாய் அருங்காட்சியகத்துக்கு அடிக்கல்

**சென்னை, பிப்.16:**

சிவகங்கை மாவட்டத்தில் ரூ.24.30 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம், தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.2.75 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மனோரா நினைவுச் சின்னத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புதுபொலிவுடன் கூடிய கட்டட முகப்பு விளக்குகளின் செயல்பாடுகள் ஆகியவற்றை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் நடந்தது நிகழ்ச்சி. சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவில், 65,380 சதுர அடியில் இரண்டு காட்சிகூடங்களுடன் 24 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில்



அமைக்கப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம்.

தஞ்சாவூர் மாவட்டம், சரபேந்திர ராஜபட்டினம் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள மனோரா நினைவுச் சின்னத்தில் 2.75 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புதுபொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள கட்டட முகப்பு விளக்குகள்,

மேலும், ஈரோடு மாவட்டம், கருமாண்டி செல்லிபாளையத்தில் 33.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நொய்யல் அருங்காட்சியகம், ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் 34.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நாவாய் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு 15 லட்சம் ஆண்டுகள் மனிதகுல வரலாற்றுத்தொன்மை கொண்ட நிலப்பரப்பாகும். தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வுகளில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு மேற்கொண்ட அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வு முடிவுகள் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றில் புதிய வெளிச்சம் ஏற்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வு, தொல்லியலாளர்கள் இடையே மட்டுமின்றி உலகத் தமிழர்கள் இடையேயும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது. தமிழ்ச் சமூகமானது, கி.மு. ஆறாம் நூற்றாண்டில் படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கரிமப் பகுப்பாய்வுகளின் முடிவுகள் வாயிலாக உறுதிபடுத்தப்பட்டுள்ளது. பொருநை ஆற்றங்கரை நாகரிகம், 3200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதை சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற நெல் உமியினை பகுப்பாய்வு செய்ததன் வாயிலாக உறுதி செய்ய முடிகிறது. மேலும், சிவகளை அகழாய்வில் கிடைத்த அறிவியல் காலக்கணக்கீடுகள் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தொழில்நுட்பம் தமிழ் நிலப் பரப்பில் அறிமுகமாகியுள்ளது என்பதை உறுதிசெய்தன.

2017 முதல் 2025 வரை ஏழு பருவங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு 13,000-க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. 2026-ஆம் ஆண்டுக்கான பதினொன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

## க்ரைம் கார்னர்

### முதல்வர் குறித்து யூடியூப்பில் அவதூறு கருத்து: அதிமுக ஐடி விங்க் நிர்வாகி கைது

**கரூர், பிப்.16:**

கரூர் மாவட்டம் வேலாயுதம் பாளையத்தை சேர்ந்தவர் பசுபதி செந்தில் (50). இவர் அதிமுக ஈரோடு மண்டல சமூக வலைதள பிரிவு துணை தலைவராக உள்ளார். இவர் முதல்வர் ஸ்டாலின் மற்றும் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி குறித்து யூடியூப்பில் அவதூறாக கருத்து தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து வேலாயுதம் பாளையம் போலீஸார் பிப்.11ம் தேதி பசுபதி செந்தில் மீது வழக்கு பதிவு செய்து நேற்று அவரை கைது செய்து கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பசுபதி செந்திலை பிப்.27ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டதை அடுத்து அவரை கரூர் கிளை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும், பசுபதி செந்தில் பேசியதை ஒளிப்பரப்பு செய்த யூடியூப் ஐபி முகவரிக்கு சொந்தமானவரை போலீஸார் தேடி வருகின்றனர்.

### திருவள்ளூர்: சென்சஸ் எடுப்பதாக கூறி செயின் பறிப்பில் ஈடுபட்ட பெண் கைது

**சென்னை, பிப்.16:**

புட்லூர் ஏவிஎம் நகர் பகுதியில் சியாமளா (55) என்பவர் வசித்து வருகிறார். இவரது கணவர் ராமு ஓட்டுநராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் ராமு வேலைக்கு சென்ற போது வீட்டில் தனியாக இருந்த சியாமளாவிடம் இளம்பெண் ஒருவர் சென்சஸ் எடுப்பதாக கூறி வந்துள்ளார். அந்த பெண்ணை சியாமளா வீட்டுக்குள் அழைத்து அவரிடம் பேசி கொண்டிருந்த போது திடீரென அந்த பெண் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சியாமளாவை தாக்கியுள்ளார். மேலும் கத்தியை காட்டி மிரட்டி அவர் கழுத்தில் அணிந்திருந்த தங்க சங்கிலியை பறிக்க முயன்றுள்ளார்.

இந்நிலையில் சியாமளா உடனடியாக வீட்டை விட்டு வெளியேறி, கதவை வெளிப் பக்கமாக பூட்டிவிட்டு கத்தி கூச் சலிட்டுள்ளார். இதையடுத்து அருகில் இருந்தவர்கள் உடனடியாக செவ்வாப்பேட்டை காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் அந்த பெண்ணை கைது செய்தனர். விசாரணையில் அந்த பெண் புட்லூர் எம்ஜிஆர் நகர் பகுதியை சேர்ந்த பவித்ரா என்பதும், கடன் பிரச்சினையை தீர்க்க இதுபோன்று செய்ததாகவும் தெரிந்தது. சியாமளர திருவள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### சென்னை தி.நகரில் உரிய ஆவணங்கள் இன்றி காரில் கொண்டு வந்த ரூ.23.50 லட்சம் பறிமுதல்

**சென்னை, பிப்.16:**

ஆவணங்கள் இன்றி காரில் கொண்டு வந்த ரூ.23.50 லட்சத்தை பறிமுதல் செய்த போலீஸார், இதுதொடர்பாக, ஆந்திராவை சேர்ந்த 6 பேரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை தி.நகர் திருமலைப்பிள்ளை சாலையில் நேற்று முன்தினம் இரவு பாண்டிபஜார் போலீஸார் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக நம்பர் பிளேட் இல்லாத கருப்பு நிற ஸ்கார்பியோ கார் ஒன்று வந்தது. சந்தேகத்தின் பேரில் அந்த காரை நிறுத்தி, அதில் இருந்தவர்களிடம் போலீஸார் விசாரணை நடத்தினர். அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதால் காரை சோதனை செய்தபோது, உள்ளே கட்டுக்கட்டாகப் பணம் மறைத்து வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

காரில் இருந்த ரூ.23.50 லட்சத்துக்கு உரிய ஆவணங்கள் அவர்களிடம் இல்லை. இதையடுத்து, காரையும், பணத்தையும் பறிமுதல் செய்த போலீஸார், காரில் இருந்த 6 பேரையும் காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர். அதில், அவர்கள் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த, நிதி நிறுவன உரிமையாளர் வெங்கடநாகா, கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி தொழிலதிபர் பத்ம சுப்பையா, ஊழியர்கள் அஸ்வின் குமார், கணேஷ், கண்ணா மகேஷ் மற்றும் சந்தீப் வர்மா என்பது தெரியவந்தது.

## விளையாட்டு செய்திகள்

### 2-ஆவது முறையாக பெலிண்டா கிளார்க் விருது வென்ற சதர்லேண்ட்..! மற்ற விருதாளர்கள் விவரங்கள்!

**சிட்னி, பிப்.16:**

ஆல்ரவுண்டரான அன்னாபெல் சதர்லேண்ட் இந்த விருதுடன் ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீராங்கனை விருதும் வென்று அசத்தியுள்ளார். பெலிண்டா கிளார்க் விருதை தொடர்ச்சியாக வெல்லும் ஐந்தாவது வீராங்கனையாக அன்னாபெல் சதர்லேண்ட் சாதனை படைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் சிறந்த கிரிக்கெட் வீராங்கனைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பெலிண்டா கிளார்க் என்ற இந்த விருது வழங்கப்படுகிறது. பெத் மூனியை விட 3 வாக்குகள் வித்தியாசத்தில் அன்னாபெல் சதர்லேண்ட் இந்த விருதை வென்று அசத்தினார்.

ஒருநாள் விருதிலும் தவறவிட்ட பெத் மூனி, சிறந்த டி20 வீராங்கனைக்கான விருதை வென்றார்.

பெலிண்டா கிளார்க் விருதுக்கான வாக்குகள்

வெற்றியாளர் - அன்னாபெல் சதர்லேண்ட் - 77 வாக்குகள்

2-ஆவது இடம் - பெத் மூனி - 74 வாக்குகள்

3-ஆவது இடம் - அலானா கிங் - 55 வாக்குகள்

4-ஆவது இடம் - ஆஷ்லே கார்ட்னர் - 54 வாக்குகள்

5-ஆவது இடம் - ஃபோப் லிட்ச்ஃபீல்டு - 42 வாக்குகள்

மற்ற விருதுகள் விவரங்கள்

பெலிண்டா கிளார்க் விருது: அன்னாபெல் சதர்லேண்ட்

சிறந்த ஒருநாள் வீராங்கனை: அன்னாபெல் சதர்லேண்ட்

சிறந்த டி20 வீராங்கனை: பெத் மூனி

சிறந்த உள்ளூர் வீராங்கனை: நிகோலா கேரி

பெட்டி வில்சன் (இளம் வீராங்கனை விருது): கவோம்ஹே பிரே

சமூகத்தின் தாக்கத்திற்கான விருது: ஜோஸி டூலி.

### சூப்பர் 8 சுற்று: முதல் அணியாகத் தேர்வான மேற்கிந்தியத் தீவுகள்!

**புதுடெல்லி, பிப்.16:**

சூப்பர் 8 சுற்றுக்குத் தேர்வான முதல் அணியாக மேற்கிந்தியத் தீவுகள் அசத்தியுள்ளது.

இந்தப் போட்டியின் தோல்வியுற்றதால் நேபாளம் அணி, அடுத்த சுற்றுக்கு தேர்வாகாமல் உலகக் கோப்பையில் இருந்து வெளியேறுகிறது.

மும்பை வாக்னடேவில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் டாஸ் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கேப்டன் ஷாய் ஹோப் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

நேபாளம் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ரன்கள் எடுக்க, மே.இ.தீ. அணி 15.2 ஓவர்களில் 134/1 ரன்கள் எடுத்து வென்றது.

பந்து வீச்சில் அசத்திய ஜேசன் ஹோல்டர் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

இந்த வெற்றியின் மூலமாக மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் அணியாக சூப்பர் 8 சுற்றுக்குத் தேர்வாகியுள்ளது. 3 போட்டிகளிலும் தொல்வியுற்ற நேபாளம் அணி வெளியேறியது.

# தேர்தல் அறக்கட்டளைகள் திட்டத்தில் கட்சிகளுக்கு ரூ.3,826 கோடி நன்கொடை! பாஜகவுக்கு 82%, காங்கிரஸுக்கு 7%!

**திருப்பதி, பிப்.16:**

தேர்தல் அறக்கட்டளைகள் (எலக்டோரல் டிரஸ்ட்) திட்டத்தில் 2024-25 நிதியாண்டில் அரசியல் கட்சிகளுக்கு ரூ.3,826.35 கோடி நன்கொடை வழங்கப்பட்டுள்ளதாக ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏடிஆர்) வெள்ளிக்கிழமை தெரிவித்தது. இதில் அதிகபட்சமாக ரூ.3,157.65 கோடி (82.5 சதவீதம்) பாஜகவுக்கு நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது.



அரசியல் கட்சிகள் பெறும் நன்கொடைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய தேர்தல் அறக்கட்டளைகள் திட்டம், 2013-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் அறக்கட்டளைகள் நிறுவனங்களிடம் இருந்து நன்கொடை வசூலித்து அதை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்குகின்றன. இதுபோன்ற அறக்கட்டளைகளை நிறுவனங்கள் அமைக்க மத்திய நேரடி வரிகள் வாரியத்திடம் (சிபிடிடி) ஒப்புதல் பெறுவது கட்டாயம்.

கட்சிகள் பெற்ற நிதி: இந்தத் திட்டத்தின்கீழ் தோதல் அறக்கட்டளைகள் பெற்ற நன்கொடை, அரசியல் கட்சிகளுக்கு மேற்கொண்ட விநியோகம் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஏடிஆர வெளியிட்டது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது: 2024-25 நிதியாண்டில் தோதல் அறக்கட்டளைகளுக்கு நிறுவனங்கள் ரூ.3,826.34 கோடி நன்கொடை வழங்கியுள்ளன. கடந்த நிதியாண்டில் இருந்த உபரித் தொகையையும் சோத்து ரூ.3,826.35 கோடி நிதியை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு தோதல் அறக்கட்டளைகள் விநியோகித்துள்ளன.

அதிகபட்சமாக ரூ.3,157.65 கோடி (82.5 சதவீதம்) நிதியை பாஜக பெற்றுள்ளது. காங்கிரஸ் ரூ.298.77 கோடி (7.81 சதவீதம்), திரிணமூல் காங்கிரஸ் ரூ.102 கோடி (2.67 சதவீதம்) மற்றும் 19 கட்சிகள் ரூ.267.91 கோடியை பெற்றன.

நிறுவனங்களின் பங்களிப்பு: அறக்கட்டளைகளைப் பொறுத்தவரை ப்ரூடெண்ட் அறக்கட்டளை 15 கட்சிகளுக்கு ரூ.2,668.46 கோடியை விநியோகித்துள்ளது. ப்ரொகிரெஸிவ் அறக்கட்டளை 10 கட்சிகளுக்கு ரூ.914.9 கோடியை விநியோகித்துள்ளது.

# பிரம்மபுத்திரா நதியின் கீழ் இரட்டை சுரங்கப்பாதை: ரூ.18,662 கோடி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புதுடெல்லி, பிப்.16:**

அசாம் மாநிலம் கோஹ்பூரில் இருந்து நுமலிகர் வரை பிரம்மபுத்திரா நதியின் கீழ் 32 மீட்டர் ஆழத்தில் இரட்டை சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட உள்ளன. இவை 33.7 கி.மீ. நீளம் கொண்டதாகவும் 4 வழிப் பாதையாகவும் இருக்கும்.

திட்டத்தின் மதிப்பீடு ரூ.18,662 கோடி. கோஹ்பூர் முதல் நுமலிகர் வரையிலான சுரங்கப் பாதையில் ஆங்கேங்கே செயற்கை தீவுகளும் உருவாக்கப்பட உள்ளன. பிரம்மபுத்திரா சுரங்கப் பாதை திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதுதொடர்பாக அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:



கடந்த 2021-ம் ஆண்டில் பிரம்மபுத்திரா சுரங்கப் பாதை திட்டம் தயாரிக்கப்பட்டது. இதற்கு மத்திய அமைச்சரவை தற்போது ஒப்புதல் வழங்கி உள்ளது. இதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு அசாம் மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

கோஹ்பூரில் இருந்து நுமலிகர் வரை 240 கி.மீ. தொலைவை சாலை மார்க்கமாக கடந்து செல்ல 6 மணி நேரமாகிறது. பிரம்மபுத்திரா நதியின் அடியில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டால் 20 நிமிடங்களில் கோஹ்பூரில் இருந்து நுமலிகர் சென்றடைய முடியும்.

அசாமில் பிரம்ம புத்திரா நதியின் மேலே ஏற்கெனவே 3 ரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட்டு உள்ளன. முதல் முறையாக ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தால் அசாம் மட்டுமன்றி ஒட்டுமொத்த வடகிழக்கும் பலன் அடையும். வர்த்தகம், சுற்றுலா மேம்படும். சரக்கு, பயணிகள் போக்குவரத்து செலவு கணிசமாக குறையும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 1962-ம் ஆண்டு போரின் போது பிரம்மபுத்திரா நதியின் வழியாகவே சீன ராணுவம் இந்திய பகுதிகளுக்குள் ஊடுருவியது. பாதுகாப்பு ரீதியாக இந்த நதி மிகவும் முக்கியமானது. தற்போது அசாம், அருணாச்சல பிரதேசத்தில் பிரம்மபுத்திரா நதியின் மீது 5 மேம்பாலங்கள் உள்ளன. போர் மூண்டால் மேம்பாலங்கள் தகர்க்கப்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே பிரம்மபுத்திரா நதியின் கீழே சுரங்கப் பாதை அமைக்கப் படுகிறது.

## வணிகச் செய்திகள்

### அமேசான் பிரைம்: அதிவேக டெலிவரியில் சாதனை!

**சென்னை, பிப்.16:**




இந்தியாவில் 2025-ஆம் ஆண்டில் அமேசான் பிரைம் வாடிக்கையாளர்களுக்கு மிக வேகமான முறையில் பொருள்களை விநியோகம் செய்து, அமேசான் நிறுவனம் சாதனை படைத்துள்ளது.

சுமார் 55 கோடிக்கும் அதிகமான தயாரிப்புகள், ஆர்டர் செய்த ஒரே நாளில் அல்லது அடுத்த நாளிலேயே பிரைம் வாடிக்கையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட 40 சதவீத வளர்ச்சியாகும்.

சாதாரண வாடிக்கையாளர்களுடன் ஒப்பிடும்போது, பிரைம் வாடிக்கையாளர்கள் 5 மடங்கு அதிகமாக பொருள்களை வாங்குகின்றனர்.

அதேபோல, அவர்கள் தங்களின் வருடாந்திர சந்தா கட்டணத்தை விட, இரண்டு மடங்கு கூடுதல் தொகையை தள்ளுபடிகள் மற்றும் சலுகைகள் மூலம் சேமித்துள்ளனர்.

தற்போது அமேசான் பிரைமில் புதிதாக இணைபவர்களில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் சிறு நகரங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது என நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீண்ட தூர ரயில்களில் தொடர் தூய்மைப் பணிக்கு புதிய திட்டம்: அஸ்வினி வைஷ்ணவ்!

**புதுடெல்லி, பிப்.16:**

டில்லியில் நடைபெற்ற செய்தியாளா சந்திப்பில் அவா மேலும் கூறியதாவது: பயணிகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப ரயில் பெட்டிகளை தூய்மையாக பராமரிக்கக் கூடிய வகையில் நிபுணத்துவம் பெற்ற, சுய ஒழுக்கமும் முனைப்புடனும் செயல்படக்கூடிய ஊழியாகளைக் கொண்டு இச் சேவையை வழங்கும் நிறுவனங்கள் இந்த தூய்மைப் பணியில் பணியமாத்தப்படும்.



தற்போது நடைமுறையில் உள்ள ரயில் தூய்மை திட்டத்தின் கீழ், அதன் வழித்தடத்தில் உள்ள நிா்ணயிக்கப்பட்ட ரயில் நிலையத்தில் ரயில் பெட்டிகள் தூய்மை செய்யப்படும். ஆனால், புதிய திட்டத்தின்படி, ரயில் பயணம் முழுவதும் குறிப்பிட்ட நேர இடைவெளியில் அல்லது தேவைப்படும்போதெல்லாம் ரயில்களில் பணியில் இருக்கும் பணியாளா்கள் தூய்மைப் பணியை மேற்கொள்வா. பொதுப் பெட்டி உள்பட அனைத்துப் பெட்டிகளிலும் தூய்மைப் பணியை அவா்கள் மேற்கொள்வா். பயணிகள் பெட்டிகள், கழிவறைகள், கைகழுவும் தொட்டி, குப்பைகள் சேகரிப்பு, சிறு கோளாறுகளை சரிசெய்தல், ரயில்களில் தண்ணீா் நிரப்புதல் உள்ளிட்ட பணிகளை இந்தப் பணியாளா்கள் மேற்கொள்வா்.

இந்தத் தூய்மைப் பணி கண்காணிப்பு, கருத்து கேட்பு மற்றும் பயணியாளா்களின் செயல்பாடுகள் மேலாண்மை உள்ளிட்டவை தொழில்நுட்ப உதவியுடன் நிகழ்நேர அடிப்படையில் மேற்கொள்ளப்படும். முதல்கட்டமாக இத் திட்டத்தை செயல்படுத்த 80 நீண்ட தூர ரயில்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் பெறப்படும் அனுபவத்தின் அடிப்படையில், மற்ற நீண்ட தூர ரயில்களிலும் இத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றாா்.

மேலும், சரக்குகள் கையாளுதலை மேம்படுத்தும் வகையில், ரயில்வேக்கு சொந்தமான நிலங்களில் சரக்கு கிடங்குகள், பதப்படுத்துதல் வசதிகள் மேம்படுத்தப்படும். பயன்பாட்டில் இல்லாத கிடங்குகளும், உத்வேக சரக்கு முனையங்களாக மேம்படுத்தப்படும் என்றும் அவா் கூறினாா்.

# புத்தாக்க தொழில் தொடங்க மத்திய, மாநில அரசுகள் உதவி: மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங்




**புதுடெல்லி, பிப்.16:**

புத்தாக்க தொழில் நிறுவனங்களை (ஸ்டார்ட் அப்) தொடங்க முன்வருவோருக்கு மத்திய, மாநில அரசுகள் தேவையான உதவிகளைச் செய்யும் என்றார் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங்.

இந்திய தொழிலக ஆராய்ச்சி கவுன்சில் (சிஎஸ்ஐஆர்) சார்பில் தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தும் பொருட்டு, ஆராய்ச்சி-தொழில்-புதுயுகத் தொழில்முனைவு இரு நாள் மாநாட்டை சென்னை வாத்தக மையத்தில் மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் சனிக்கிழமை தொடங்கி வைத்துப் பேசியதாவது: மத்திய அரசு தொழில் துறையில் வளர்ச்சி அடையும் நோக்கில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு இந்த பட்ஜெட்டில் ரூ.10,000 கோடி வளர்ச்சி நிதி ஒதுக்கியுள்ளது. அது மட்டுமல்லாது புத்தாக்க தொழில் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் புதிய விஷயங்களை தெரிந்துகொள்ள வேண்டும். புதிதாக புத்தாக்க தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு தொழில் துறையைச் சேர்ந்த முன்னணி தலைவர்கள் உதவி செய்யத் தயாராக உள்ளனர். இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தியாவில் இதுவரை 2 லட்சம் புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 21 லட்சம் பேர் வேலைவாய்ப்பைபெற்றுள்ளனர். தமிழகத்தில் சென்னை, கோவை மாவட்டங்களில் மட்டுமே புத்தாக்க தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் புத்தாக்க தொழில் நிறுவனங்கள் தொடங்க வேண்டும். இதற்கான உதவிகளை மத்திய, மாநில அரசுகள் உதவி செய்யும். நிகழாண்டு இஸ்ரோ மூலம் 18 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்படவுள்ளன என்றார் அவர். முன்னதாக, கல்வி நிறுவனங்கள்- சிஎஸ்ஐஆர் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் மத்திய புவி அறிவியல் துறைச் செயலர் எம். ரவிச்சந்திரன், சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் கே. ஜே. ஸ்ரீராம், சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி இயக்குநர் என். ஆனந்தவல்லி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ரூ.3.32 லட்சம் கோடியில் ஆந்திர பட்ஜெட் தாக்கல்



**அமராவதி, பிப்.16:**

ஆந்திர மாநில நிதி அமைச்சர் வி.கிஷோர் நேற்று சட்டப்பேரவையில் ரூ.3 ,32,205 கோடியில் 2026-27 ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

இதில், ரூ.6 ஆயிரம் கோடி அமராவதி தலைநகர பணிகளுக் காகவும், மின்வாரியத்திற்கு ரூ.13,934 கோடியும், சாலை, துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் அமைக்க ரூ.13,546 கோடியும், தொழிற்சாலை பணிகளுக்கு ரூ.3,161 கோடியும், விசாகப்பட்டினம் வளர்ச்சி பணிகளுக்கு ரூ.28,000 கோடியும், ராயலசீமா குளோபல் தோட்டக்கலை கிளப்புக்கு ரூ.30,000 கோடியும், வேளாண்மை மற்றும் அதன் துணை துறைகளுக்கு ரூ. 13,598 கோடியும், போலவரம் அணைக் கட்ட ரூ.6,105 கோடியும், உள்துறைக்கு ரூ.9,165 கோடியும், மதிய உணவு திட்டத்திற்கு ரூ.2,161 கோடியும், பள்ளிகல்வித் துறைக்கு ரூ.32,308 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. டிஜிட்டல் கைதுகள், ஆன்லைன் மோசடிகளை முழுமையாக ஒழிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சைபர் கிரைம் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என பட்ஜெட் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

பெண்கள் பாதுகாப்புக்கு ‘சக்தி’ மொபைல் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புகார் செய்த 7 நிமிடங்களில் போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்துவர் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

# மேற்கு வங்கம்: வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாதோரின் அடையாளப் பதிவு நிறைவு!

**புதுடெல்லி, பிப்.16:**

மேற்கு வங்கத்தில் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத வர்களை நேரில் வரவழைத்து, அவர்களின் அடை யாளத்தைப் பதிவு செய்யும் நடை முறை சனிக்கிழமை நிறைவடைந்தது. பிப்.28-இல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரில் வெளியிடப்பட்ட மேற்கு வங்க வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து இறந்தவர்கள், போலி வாக்காளர்கள், வீடு மாறியவர்கள் என சுமார் 58 லட்சம் பேர் நீக்கப்பட்டனர். பட்டியலில் இடம்பெறாத வர்கள் நேரில் சென்று தேர்தல் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கும் அடையாள ஆவணங்கள் மூலம், அவர்கள் தகுதி வாய்ந்த வாக்காளர்களா என்பதை சரிபார்த்தல், அவர்களின் பெயரில் உள்ள எழுத்துப் பிழைகளால் ஏற்பட்ட குளறுபடிகளை சரிசெய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்றரை மாதங்களாக நடைபெற்று வந்த இந்தப் பணி சனிக்கிழமை நிறைவடைந்தது. அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் பிப்.21 வரை பரிசீலனை செய்யப்படும் என்று தேர்தல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முன்னதாக மாநிலத்தில் பிப்.14-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதை பிப்.28-ஆம் தேதிக்கு தேர்தல் ஆணையம் மாற்றியது.

# நிசார் செயற்கைக்கோள் மூலம் 12 நாள்களுக்கு ஒருமுறை மண் ஈரப்பத தரவுகள்: இஸ்ரோ



**புதுடெல்லி, பிப்.16:**

இந்திய நிலப்பரப்பில் மண்ணின் ஈரப்பதத்தை ஆய்வு செய்து 12 நாள்களுக்கு ஒருமுறை நிசார் செயற்கைக்கோள் தரவுகளை வெளியிடவுள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சனிக்கிழமை தெரிவித்தது.

இஸ்ரோ-நாசா கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான நிசார் கடந்த ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது.

புவியின் மேற்பரப்பு மாற்றங்கள், பருவநிலை மாற்றங்கள் உள்ளிட்டவை குறித்து இந்த செயற்கைக்கோள் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இதன் செயல்பாடுகள் குறித்து இஸ்ரோ சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘எஸ் பேண்ட் மற்று எல் பேண்ட் ஆகிய இரு அலைவரிசைகளையும் பயன்படுத்தி இந்திய நிலப்பரப்பை துல்லியமாக அளவிட்டு 100 மீட்டர் வரை மண்ணின் ஈரப்பதம் குறித்து 12 நாள்களுக்கு ஒருமுறை இரு தரவுகளை நிசார் வெளியிடவுள்ளது.

வேளாண்மை, நீர் பராமரிப்பு, பயிர்கள் மற்றும் வறட்சி பாதிப்புகளைக் கண்டறிவதில் மண்ணின் ஈரப்பதம் முக்கியக் காரணியாக விளங்குகிறது.

நிசார் வெளியிடும் தரவுகள் மூலம் நீர்ப்பாசன சமவெளிகள் முதல் வட-பாலைவன மற்றும் அதிக மழைப்பொழிவு மண்டலங்கள் எனஇந்திய வேளாண்-பருவமண்டலங்களை துல்லியமாக மதிப்பிட முடியும்.

இது வேளாண் திட்டமிடல் மற்றும் விவசாயிகளுக்குப் பயன்படுவதோடு வறட்சியை எதிர்கொள்வதற்கான செயல்திட்டத்தை தீட்டவும் பயன்படவுள்ளது. இதற்கான தொழில்நுட்பம் இஸ்ரோவின் விண்வெளி செயல்பாடுகள் மையத்தில் வடிவமைக்கப்பட்டன’ எனத் தெரிவிக்கப்பட்டது.

# அந்நியச் செலாவணி கையிருப்பு 71,706.4 கோடி டாலராக சரிவு!



**புதுடெல்லி, பிப்.16:**

இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு பிப். 6-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 71,706.4 கோடி டாலராக குறைந்துள்ளது.

இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிப்பதாவது:

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த 6-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 671.1 கோடி டாலர் சரிந்து, 71,706.4 கோடி டாலராக உள்ளது.

இதற்கு முந்தைய வாரத்தில், அது 1,436.1 கோடி டாலர் அதிகரித்து 72,377.4 கோடி டாலர் என்ற புதிய உச்சத்தை எட்டியிருந்தது.

பிப். 6-ஆம் தேதியுடன் நிறைவடைந்த மதிப்பீட்டு வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத்துகள் 766.1 கோடி டாலர் அதிகரித்து, 57,005.3 கோடி டாலராக உள்ளது.

டாலர் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகளாகும். மதிப்பீட்டு வாரத்தில் இந்தியாவின் தங்கம் கையிருப்பு 1,420.8 கோடி டாலர் சரிந்து, 12,347.6 கோடி டாலராக உள்ளது.

சிறப்பு வரைவு உரிமைகள் (எஸ்டிஆர்) 13.2 கோடி டாலர் சரிந்து 1,882.1 கோடி டாலராக உள்ளது. சர்வதேச நிதியத்தில் (ஐஎம்எஃப்) இந்தியாவின் கையிருப்பு மதிப்பீட்டு வாரத்தில் 3.2 கோடி டாலர் சரிந்து 471.5 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

# மாநில கிரிக்கெட் சங்கங்கள் சீர்திருத்தங்களை முன்மொழிவது அவசியம்: உச்சநீதிமன்றம்!



**புதுடெல்லி பிப்.16:**

மாவட்ட கிரிக்கெட் சங்க உறுப்பினர்களின் வாக்குரிமை தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் திருச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கம் மேல்முறையீடு செய்தது.

இந்த மனுவை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா மற்றும் அலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வு வெள்ளிக்கிழமை விசாரித்தது.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது: விளையாட்டின் முக்கியத்துவம் கருதி மாவட்ட கிரிக்கெட் சங்கங்களில் முறையாக செயல்பாடு, வெளிப்படையான நிர்வாகம் இருப்பதை உறுதிசெய்ய மாநில கிரிக்கெட் சங்கங்கள் சீர்திருத்தங்களை முன்மொழிவது அவசியம். சிறந்த நிர்வாகம், மேலாண்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் உட்பூசல்களை களைந்து ஒன்றிணைந்து பணியாற்ற மாவட்ட சங்கங்களும் தாமாகவே சில சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

விளையாட்டு என்பது சமூகம், மொழி மற்றும் கலாசார பின்னணிகளை கடந்து சகோதரத்துவ மனப்பான்மையை வளர்க்கும் தன்மையுடையது. களத்தில் விளையாடும்போது தங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை புறந்தள்ளி ஒருமித்த சிந்தனையை விதைக்கும் வலிமை விளையாட்டுக்கு உள்ளது. இனம், ஜாதி, மதம், பாலினம் அல்லது பொருளாதார நிலை என அனைத்தையும் தாண்டி விளையாட்டு அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கக்கூடியது. விளையாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் விளையாட்டுகளை கற்றுத் தருவதோடு மட்டுமல்லாமல் நிர்வாக அணுகலையும் எளிமையாக்க வேண்டும்.

விளையாட்டுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் நகரங்களில் வசிக்கும் வசதி படைத்த சிலருக்கு மட்டுமே கிடைப்பதாக இருக்கக்கூடாது. விளையாட்டு போட்டிகளில் கிடைக்கும் வருவாய், அறிவுசார் சொத்துரிமை மற்றும் ஊடக உரிமைகள் ஆகியவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

மனுதாக்கல் செய்துள்ள சங்கத்தின் உறுப்பினர்கள் சேர்க்கை தொடர்பான விவகாரம் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அதற்கு விரைவில் தீர்வுகாண அறிவுறுத்துகிறோம் என்றனர்.

# ஜம்முவில் குடிநீர் வரி செலுத்தாத அரசு ஊழியருக்கு சம்பளம் ‘கட்’!

**ஜம்மு, பிப்.16:**

ஜம்மு பகுதியில் குடிநீர் வரி செலுத்தாத அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஜம்மு காஷ்மீரில் சுமார் 15.64 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. அதாவது 81.22 சதவீத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலானோர் முறையாக குடிநீர் வரியை செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது. குறிப்பாக அரசு ஊழியர்களும் வரியை செலுத்தவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. இந்த சூழலில் ஜம்மு பிராந்திய அரசு நிர்வாகம் அண்மையில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டு உள்ளது. இதன்படி, “குடிநீர் வரி நிலுவை இல்லை” என்று ஜல் சக்தி துறையிடம் இருந்து அரசு ஊழியர்கள் தடையில்லா சான்றை பெற்று அவர்கள் சார்ந்த துறையிடம் சமர்ப்பிக்க வேண்டும். அப்போதுதான் சம்பளம் வழங்கப்படும். இல்லையென்றால் சம்பளம் வழங்கப்படாது என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# எம்பிபிஎஸ் சீட் கிடைக்காததால் வாதாடிய மாணவன்: 7 நாளில் இடம் ஒதுக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**ஜபல்பூர், பிப்.16:**

மத்திய பிரதேசம் ஜபல்பூரைச் சேர்ந்தவர் அதர்வா சதுர்வேதி (19), நீட் தேர்வில் 530 மதிப்பெண் பெற்றார். பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரான (இடபிள்யூஎஸ்) அவருக்கு, அந்த பிரிவில் மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்படவில்லை. ம.பி.யில் இடபிள்யூஎஸ் பிரிவில் தனியார் மருத்துவக் கல்லூரியில் நீட் அடிப்படையில் மாணவர் சேர்க்கை தொடர்பான அரசாணை வெளியிடப்படாததே இதற்குக் காரணம். இதனால் அதர்வா, தனது தந்தை வழக்கறிஞர் மனோஜ் சதுர்வேதியின் துணையுடன் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுவை (Special Leave Petition SLP) ஆன்-லைனில் தாக்கல் செய்தார். சிறப்பு அனுமதி மனு என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 136-ன் கீழ், கீழ் நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களின் உத்தரவுகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அனுமதி கோரும் ஒரு சட்ட நடவடிக்கையாகும். இந்த மனு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தான் வாதிட 10 நிமிட அவகாசத்தை மட்டுமே கோரினார் அதர்வா. இடபிள்யூஎஸ் பிரிவில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அமல்படுத்த நீதிமன்றம் உத்தரவிடுவதற்கான காரணங்களை அதர்வா அடுக்கினார். அவரது கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இதையடுத்து அரசியலமைப்பு சட்டத்தில் 142-வது பிரிவின் கீழ் தனக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதர்வாவுக்கு அடுத்த 7 நாட்களுக்குள் எம்பிபிஎஸ் சேர்க்கை வழங்குமாறு தேசிய மருத்துவ ஆணையத்துக்கும், மத்திய பிரதேச அரசுக்கும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பிரிட்டன் வீரர்களுக்கு இந்திய விமானப் படை பயிற்சி


**புதுடெல்லி,பிப்.16:**

வரலாற்றில் முதன்முறையாக இந்திய விமானப் படை அதிகாரிகள் பிரிட்டனில் உள்ள ராயல் ஏர் ஃபோர்ஸ் (ஆர்ஏஎஃப்) வேலி தளத்தில் அந்நாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளனர்.

இதுகுறித்து பிரிட்டன் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்திய விமானப்படையைச் சேர்ந்த 3 தகுதிவாய்ந்த விமானப் பயிற்றுநர்கள் பிரிட்டனின் ஆர்ஏஎப் வேலி தளத்திற்கு அனுப் பப்பட உள் ளனர். இது பிரிட்டனின் அதிவேக ஜெட் விமானிகளுக்கான முதன்மைப் பயிற்சி தளமாகும். தொடக்கத்தில் இரண்டு ஆண்டு காலத்திற்கு இந்திய அதிகாரிகள் அங்கு பணியமர்த்தப்படுவார்கள்.

அவர்கள் “பிஏஇ ஹாக் டி2’ அல்லது ‘டெக்சன் டி1’ ரக விமானங்களில் பயிற்சி அளிப்பார்கள். இந்தப் பணியின் போது, இந்திய அதிகாரிகள் பிரிட்டன் தளபதிகளின் கீழ் பணியாற்றினாலும், அவர்கள் இந்திய விமானப்படையின் கட்டுப்பாட்டிலேயே இருப்பார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போலீஸாரின் வீடுகளை மட்டுமே குறி வைத்த திருடன்



**போபால், பிப்.16:**

ம.பி.யின் காண்டவா நகரின் போலீஸ் லைன் பகுதியில் காவல் துறையினரின் வீடுகள் உள்ளன. இங்கு கடந்த ஜனவரி 20-ம் தேதி இரவு இரு காவலர்களின் வீடுகளில் பல லட்சம் மதிப்புள்ள நகைகள் மற்றும் பணம் திருடுபோனது. இது தொடர்பாக சிசிடிவி பதிவுகளின் அடிப்படையில் அலிராஜ்பூர் மாவட்டத்தை சேர்ந்த தீபேஷ் என்பவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது: சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் அலிராஜ்பூரில் போலீஸ்காரர் ஒருவரால் தீபேஷ் தாக்கப்பட்டார். அப்போது முதல் அவர் போலீஸாரின் வீடுகளை மட்டுமே குறிவைத்து திருடி வந்துள்ளார். திருடுவதற்கு முன் தெரு வியாபாரி போல் காட்டிக்கொண்டு உளவு பார்ப்பதை இவர் வழக்கமாக கொண்டிருந்தார். ஜாபுவா, அலிராஜ்பூர், தார் என பல மாவட்டங்களில் அவர் இந்த குற்றத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். தலைமறைவான தீபேஷின் கூட்டாளிகளான ரமேஷ், புராலியாவை தேடி வருகிறோம். இவ்வாறு போலீஸார் கூறினர்.

## உக்ரைனுக்கு விரைவில் நல்ல செய்தி! ஸெலென்ஸ்கி - அமெரிக்க அமைச்சர் சந்திப்பின் பின்னணி

**முனிச், பிப்.16:**

ஜெர்மனியில் நடைபெறும் முனிச் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்றுள்ள உக்ரைன் அதிபர் வோலோதிமீர் ஸெலென்ஸ்கியும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவும் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பு குறித்து தமது எக்ஸ் தளப் பக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை(பிப். 15) பதிவிட்டுள்ள ரூபியோ, உக்ரைனின் தேசப் பாதுகாப்பு குறித்தும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு துறைகளில் பங்களிப்பை வலுப்படுத்துவது குறித்தும் Uக்ரைன் அதிபருடன் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். ரத்தம் சிந்தப்படுவது தடுத்துநிறுத்தப்படுவதற்கு ஒரு தீர்வு ஏற்படுத்துவதில் அதிபர் டிரம்ப் முனைப்புடன் இருக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார். உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமெரிக்கா முன்னெடுத்துள்ள மத்தியஸ்த பேச்சுவார்த்தை ஜெனீவாவில் பிப். 17 - 18 நடைபெற உள்ளது. அதில், உக்ரைன், ரஷியா மற்றும் அமெரிக்கா பங்கேற்கும். இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையின் முடிவில், உக்ரைன் விவகாரத்தில் முக்கிய முடிவுகள் வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

## ‘உக்ரைன் மட்டுமே விட்டுக்கொடுக்க வேண்டுமா?’ - அதிபர் ஸெலென்ஸ்கி

**மாஸ்கோ, பிப்.16:**

‘ரஷியாவுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில், உக்ரைன் மட்டுமே தொடர்ந்து சமரசம் செய்துகொள்ள வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுக்கிறது’ என உக்ரைன் அதிபர் வொலோதிமிர் ஸெலென்ஸ்கி தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற அவர் இது குறித்து பேசியதாவது: ஜெனீவாவில் வரும் செவ்வாய் மற்றும் புதன்கிழமை நடைபெறவுள்ள அடுத்தகட்ட முத்தரப்பு அமைதிப் பேச்சுவார்த்தை மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அமைதிக்கான வாய்ப்பை நழுவவிட வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் என்பதே உக்ரைனின் விருப்பம். அதேநேரம், இந்த விவகாரத்தில் அமெரிக்கா தரப்பில் இருந்து உக்ரைனுக்குச் சற்றே அழுத்தம் கொடுக்கப்படுவதை மறுக்க முடியாது.

அமைதிக்காகச் சமரசம் செய்வது குறித்து பேச்சு எழும்போதெல்லாம், அது உக்ரைனை மட்டுமே நோக்கியதாக இருக்கிறது. ரஷியா என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி யாரும் பேசுவதில்லை. ரஷியாவின் பிடிவாதத்தைப் பற்றி விவாதிக்காமல், உக்ரைனை மட்டும் குறிவைப்பது சரியான முறையல்ல. தற்போது இந்தப் பிரச்னையில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஐரோப்பிய நாடுகள், வரும் காலங்களில் முக்கியப் பங்காற்ற வேண்டும். அதேபோல் அமெரிக்காவும் தொடர்ந்து இதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்றார்.

## தொழில்நுட்ப பாதுகாப்புக்கு சர்வதேச கூட்டணி: 15 நிறுவனங்கள் ஒப்பந்தம்

**வாஷிங்டன், பிப்.16:**

தொலைத்தொடர்பு, செமிகண்டக்டர் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) போன்ற நவீன தொழில்நுட்பத் துறைகளில், நம்பகமான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பை உருவாக்குவதற்காக ‘டிரஸ்டட் டெக் அலையன்ஸ்’ எனும் புதிய சர்வதேச கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசாப்ட், கூகுள் கிளவுட், எரிக்சன், நோக்கியா, ஆன்த்ரோபிக் உள்ளிட்ட உலகின் முன்னணி 15 நிறுவனங்கள் இணைந்துள்ள இந்தக் கூட்டமைப்பில், இந்தியாவின் ஜியோ பிளாட்ஃபார்ம்ஸ் நிறுவனமும் ஓர் அங்கமாகியுள்ளது. வெளிப்படைத்தன்மை, தனிநபர் தரவு பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்ய 5 அடிப்படை விதிகளைப் பின்பற்ற, இந்தக் கூட்டமைப்பில் இனைந்த நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன. அதாவது இந்தப் புதிய ஒத்துழைப்பு, கிளவுட் சேவைகள் முதல் மென்பொருள்கள் வரை அனைத்திலும் பயனர்களின் நம்பிக்கையைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக அளவில் எண்ம பொருளாதாரத்தை பாதுகாப்பான முறையில் வளர்க்க ஊக்குவிக்கிறது. இது தொடர்பாக ஜியோ பிளாட்ஃபார்ம்ஸ் தலைமை செயல் அதிகாரி கிரண் தாமஸ் மேலும் கூறுகையில், ‘உலகளாவிய எண்ம வளர்ச்சி அனைவரையும் சென்றடைய வேண்டுமானால், பாதுகாப்பான தொழில்நுட்பம் மிகவும் அவசியம். அடுத்த தலைமுறை இணைய வசதி மற்றும் ஏஐ தொழில்நுட்பங்களில் மக்களின் நம்பிக்கையை நிலைநாட்டவும், புதிய எண்ம வாய்ப்புகளை உருவாக்கவும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதில் ஜியோ பெருமிதம் கொள்கிறது’ என்றார்.

## இந்தியா உடனான உறவை மீட்டெடுக்க வங்கதேசம் விரும்புகிறது: தாரிக் ரஹ்மான் ஆலோசகர்

**டாக்கா, பிப்.16:**

இந்தியா உடனான உறவை மீட்டெடுக்க வங்கதேசம் விரும்புகிறது என்றும், ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்றும் தாரிக் ரஹ்மானின் ஆலோசகர் ஹுமாயூன் கபீர் தெரிவித்துள்ளார்.



வங்கதேசத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வங்கதேச தேசியவாத கட்சி(பிஎன்பி) மூன்றில் இரண்டு பங்குக்கும் மேலான இடங்களில் வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மான் வரும் 17ம் தேதி வங்கதேச பிரதமராக பதவியேற்க இருக்கிறார்.

இந்நிலையில், தாரிக் ரஹ்மானின் ஆலோசகர் ஹுமாயூன் கபீர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், இந்திய - வங்கதேச உறவை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார். இவ்விஷயத்தில், வங்கதேசத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அவர் தனது பேட்டியில், பிஎன்பியின் மகத்தான தேர்தல் வெற்றியை அடுத்து வங்கதேசத்தில் மாறி இருக்கும் அரசியல் யதார்த்தத்தை அங்கீகரிக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது. இந்த மாற்றம் இந்தியாவின் மனநிலையிலிருந்து வர வேண்டும். இன்றைய வங்கதேசத்தில் ஷேக் ஹசீனாவும் அவாமி லீக்கும் இனி இல்லை. மக்கள் வங்கதேச தேசியவாதக் கட்சிக்கு ஆதரவாக தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளனர். வங்கதேசத்தில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதற்கு காரணமான “பயங்கரவாதி” ஷேக் ஹசீனா. வங்கதேசத்தின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும் வகையில் ஹசீனாவோ அல்லது அவாமி லீக் பிரமுகர்களோ தங்கள் மண்ணை பயன்படுத்தாமல் இருப்பதை இந்தியா உறுதி செய்ய வேண்டும். வங்கதேசத்தின் இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையிலும் இந்தியா உடந்தையாகக் கருதப்படக்கூடாது. இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன், வழக்கமான ராஜதந்திர ஒத்துழைப்பு மீண்டும் தொடங்கலாம். நாம் அண்டை நாடுகள், பரஸ்பர நன்மைக்காக ஒன்றாகச் செயல்பட வேண்டும். பிரதமர் நரேந்திர மோடிக்கும் தாரிக் ரஹ்மானுக்கும் இடையே சமீபத்தில் அன்பான தொலைபேசி உரையாடல் நிகழ்ந்தது. அப்போது, ஒரு வசதியான நேரத்தில் இந்தியாவுக்கு வருகை தருமாறு பிரதமர் மோடி, ரஹ்மானுக்கு அழைப்பு விடுத்தார்.

## அமெரிக்காவில் காணாமல் போன பெங்களூரு மாணவர் சடலமாக மீட்பு

**வாஷிங்டன், பிப்.16:**

சான் பிரான்சிஸ்கோவில் ஆறு நாட்களுக்கு முன்பு காணாமல் போன கர்நாடக மாணவர் சாகேத் ஸ்ரீனிவாசய்யா(22) உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.



இதுகுறித்து சான் பிரான்சிஸ்கோவில் உள்ள இந்திய துணைத்தூதரகம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘காணாமல் போன இந்திய மாணவர் சாகேத் ஸ்ரீனிவாசய்யாவின் உடல் மீட்கப்பட்டதை உள்ளூர் காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் தூதரகம் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது. இந்த கடினமான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும், அன்புக்குரியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் தூதரக அதிகாரிகள் உயிரிழந்தவரின் குடும்பத்தினருடன் நேரடி தொடர்பில் உள்ளனர். மேலும் அவர்களுக்குத் தேவையான அனைத்து நடைமுறைகள் மற்றும் சேவைகளில் அதிகாரிகள் உதவி செய்வார்கள்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், மாணவர் மரணத்திற்கான காரணம் மற்றும் சூழல் குறித்து தூதரகம் தனது அறிக்கையில் கருத்து தெரிவிக்கவில்லை.

சாகேத்தின் நண்பர் ஒருவர், பெர்க்லி ஹில்ஸ் அருகே உள்ள அன்சா ஏரியில் அவர் இறந்து கிடந்ததாக லிங்க்ட்இனில் குறிப்பிட்டுள்ளார்.

சாகேத், பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தார், அவர் இப்பல்கலைக்கழகத்தில் ஆகஸ்ட் 2025 முதல் அறிவியல் முதுகலை படித்து வருகிறார்.

சாகேத் பிப்ரவரி 9 முதல் காணாமல் போனார். அவரது பாஸ்போர்ட் மற்றும் மடிக்கணினி அடங்கிய பை, பார்க் ஹில்ஸ் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. சாகேத் கடைசியாக டுவைட் வேயின் 1700 தொகுதியில் உள்ள அன்சா ஏரியின் அருகே நடமாடியதாக காவல்துறை தெரிவித்திருந்தது. சாகேத் சென்னை ஐஐடியில் வேதியியல் பொறியியலில் இளங்கலைப் பட்டம் பெற்றவர். “ஹைப்பர்லூப்பிற்கான மைக்ரோசேனல் கூலிங் சிஸ்டம்” கண்டுபிடிப்பதற்கான காப்புரிமையை அவர் வைத்திருக்கிறார். 2025ல் ஐஐடியில் பட்டம் பெற்ற அவர், சில மாதங்களுக்குப் முன்பிலிருந்து கலிபோர்னியாவில் வசித்து வருகிறார்.

## துபாயில் 25 வருட காத்திருப்புக்கு பிறகு லாட்டரியில் ரூ.9 கோடி வென்ற இந்தியர்

**அபுதாபி, பிப்.16:**

துபாயைச் சேர்ந்த இந்திய தொழிலதிபரும் திரைப்படத் தயாரிப்பாளருமான ராஜன் லால் (79) சுமார் 25 வருட காத்திருப்புக்குப் பிறகு லாட்டரியில் ரூ.9 கோடி வென்றுள்ளார்.



நீண்ட காலமாக துபாயில் வசிக்கும் ராஜன் லால், கடந்த ஜனவரி 30-ம் தேதி வரிப் பிடித்தம் இல்லாத மில்லினியம் மில்லியனர் குலுக்கலுக்கான லாட்டரி சீட்டு வாங்கினார். குலுக்கலில் 3099 என்ற எண் கொண்ட அந்த லாட்டரி சீட்டுக்கு 10 லட்சம் டாலர் (ரூ.9 கோடி) பரிசுத் தொகை வென்றுள்ளார். ராஜன் லால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்தவர். மேலும் 3 முறை மாரடைப்பு மற்றும் இதய செயலிழப்பால் பாதிக்கப்பட்டவர். இந்நிலையில் தனது 79-வது பிறந்த நாளை கொண்டாடிய சில நாட்களில் அவர் இந்தப் பரிசை வென்றுள்ளார். இதுகுறித்து ராஜன் லால் கூறுகையில், “நான் கற்பனை செய்து பார்க்காத மிகச் சிறந்த பிறந்த நாள் பரிசு இது” என்றார்.

பரிசுத் தொகையை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்து அவர் முடிவு செய்யவில்லை. மாறாக வரவிருக்கும் இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறார். பல வருட விடாமுயற்சிக்குப் பிறகு ராஜன் லாலுக்கு இந்த பரிசு கிடைத்துள்ளது.

“கடந்த 25 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் ஒரு டிக்கெட் வாங்கி வருகிறேன். இது வரை பரிசு வென்றதில்லை. திரைப்படத் துறை நண்பர்களை சந்திக்க மும்பைக்கு பயணித்த போது இந்த டிக்கெட்டை வாங்கினேன். சவுதி அரேபியாவில் இருந்த போது இந்த பரிசுத் தொகை குறித்து எனக்கு தெரிவிக்கப்பட்டது. அந்த தருணம் நம்ப முடியாததாக இருந்தது” என்றார்.

## அனுமதியின்றி ‘ஏஐ’ அமைச்சராக சித்தரிப்பு! அல்பேனியா அரசு மீது நடிகை வழக்கு!!

**வாஷிங்டன், பிப்.16:**

கடந்த செப்டம்பர் மாதம், பிரதமர் ஏதி ராமா தனது 4-ஆவது பதவிக்காலத்தைத் தொடங்கியபோது, அரசு ஒப்பந்தங்களில் நடைபெறும் ஊழல்களைத் தடுப்பதற்காக, சூரியன் என பொருள்படும் ‘டியெல்லா’ என்ற பெயரில் ஒரு மெய்நிகர் அமைச்சரை அறிமுகம் செய்தார். இந்த ‘டியெல்லா’ அமைச்சரின் தோற்றமும், பேசும் குரலும் அப்படியே நடிகை அனிலா பிஷாவைப் போலவே இருப்பது இப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அனிலா பிஷா, ‘முதலில் இதை ஒரு வேடிக்கையான விஷயமாகவே பார்த்தேன். ஆனால், இப்போது மக்கள் என்னை நேரில் பார்த்தால்கூட டியெல்லா என்றே அழைக்கிறார்கள்.

அரசு வலைதளத்தில் பொதுமக்களுக்கு உதவி செய்யும் ஒரு மெய்நிகர் உதவியாளராக மட்டுமே எனது உருவத்தைப் பயன்படுத்த நான் அனுமதியளித்தேன். ஆனால், என்னை ஒரு அரசியல்வாதியாகச் சித்தரித்து, அமைச்சரவையில் இடம்பெறச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

பிரதமரின் கொள்கைகளில் அதிருப்தி கொண்டவர்கள் இப்போது என்னையும் சேர்த்து வெறுக்கிறார்கள். இதனால் எனக்கு இணையவழியாகப் பல மிரட்டல்கள் வருகின்றன; மன உளைச்சலும் ஏற்படுகிறது’ என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்விவகாரத்தில் தனது தனிமனித உரிமையை மீறியதற்காகவும், நற்பெயருக்குக் களங்கம் விளைவித்ததற்காகவும் அல்பேனியா அரசிடம் இருந்து அனிலா பிஷா 10 லட்சம் யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.10.7 கோடி) இழப்பீடு கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இருப்பினும், இந்தக் குற்றச்சாட்டுகளை அல்பேனியா அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது தேவையற்ற ஒரு வழக்கு என்றும், இதை நீதிமன்றத்தில் சட்டப்படி எதிர்கொள்வோம் என்றும் அரசு செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். இந்த வழக்கில் நீதிமன்றம் திங்கள்கிழமை தீர்ப்பளிக்கவுள்ளது.

## உக்ரைனுக்கு விரைவில் நல்ல செய்தி! ஸெலென்ஸ்கி அமெரிக்க அமைச்சர் சந்திப்பின் பின்னணி

**முனிச், பிப்.16:**

ஜெர்மனியில் நடைபெறும் முனிச் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்றுள்ள உக்ரைன் அதிபர் வோலோதிமீர் ஸெலென்ஸ்கியும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவும் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பு குறித்து தமது எக்ஸ் தளப் பக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை(பிப். 15) பதிவிட்டுள்ள ரூபியோ, உக்ரைனின் தேசப் பாதுகாப்பு குறித்தும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு துறைகளில் பங்களிப்பை வலுப்படுத்துவது குறித்தும் Uக்ரைன் அதிபருடன் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். ரத்தம் சிந்தப்படுவது தடுத்து நிறுத்தப்படுவதற்கு ஒரு தீர்வு ஏற்படுத்துவதில் அதிபர் டிரம்ப் முனைப்புடன் இருக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார். உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமெரிக்கா முன்னெடுத்துள்ள மத்தியஸ்த பேச்சுவார்த்தை ஜெனீவாவில் பிப். 17 - 18 நடைபெற உள்ளது. அதில், உக்ரைன், ரஷியா மற்றும் அமெரிக்கா பங்கேற்கும். இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையின் முடிவில், உக்ரைன் விவகாரத்தில் முக்கிய முடிவுகள் வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

## மடகாஸ்கரை தொடர்ந்து மொசாம்பிக்கில் சூறாவளி தாக்குதல்; 4 பேர் பலி

**மடகாஸ்கரை, பிப்.16:**

மொசாம்பிக்கின் தெற்கு கடலோர மாகாணங்களில் ஒன்றான இன்ஹேம்பன் மாகாணத்தில் கிஜானி என்ற சூறாவளி கடுமையாக தாக்கி வருகிறது. இதற்கு முன் மடகாஸ்கரை இந்த சூறாவளி கடுமையாக தாக்கியதில் 41 பேர் பலியானார்கள்.

கால்நடைகள் உயிரிழந்து உள்ளதுடன், பயிர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. மரங்கள், மின் கம்பங்கள் அடியோடு சாய்ந்ததுடன், வீடுகளில் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

இந்நிலையில், மொசாம்பிக்கில் இன்ஹேம்பன் மாகாணத்தில் மணிக்கு 215 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது. மரங்கள் வேருடன் சாய்ந்துள்ளன. மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு உள்ளன.

1 லட்சம் பேர் வசிக்க கூடிய இந்த மாகாணத்தில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு மின் விநியோக இணைப்பு துண்டிக்கப்பட்டு உள்ளது என அந்நாட்டு தேசிய மின்சார நிறுவனம் தெரிவித்து உள்ளது. இதேபோன்று மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களில் குடிநீர் விநியோகமும் பாதிக்கப்பட்டு உள்ளது.

## ‘AI உச்சி மாநாட்டை நடத்த இந்தியாவே சரியான இடம்’ - ஐ.நா பொதுச் செயலாளர்

**நியூயார்க், பிப்.16:**

பிப்ரவரி 16 முதல் பிப்ரவரி 20 வரை நடைபெறும் இந்தியா-ஏஐ தாக்க உச்சி மாநாடு, உலகத் தெற்கில் நடத்தப்படும் முதல் AI உச்சி மாநாடாகும். இது ‘மக்கள், உலகம் மற்றும் முன்னேற்றம்’ என்ற மூன்று வழிகாட்டும் கொள்கைகளுடன் நடத்தப்படுகிறது.

ஏஐ தாக்க உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்னதாக ஐ.நா. தலைமையகத்தில் பேசிய குட்டரெஸ், “இந்த உச்சிமாநாட்டை ஏற்பாடு செய்ததற்காக இந்தியாவை நான் மனதார வாழ்த்துகிறேன். அனைவருக்கும், எல்லா இடங்களிலும் நன்மை பயக்கும் வகையில் ஏஐ தன்னை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியம். மேலும் உலகளாவிய தெற்கில் உள்ள நாடுகள் ஏஐ- இன் நன்மைகளைப் பெறுவதில் ஒரு பகுதியாக இருப்பதும் மிகவும் அவசியம். ஏஐ மிகவும் வளர்ந்த நாடுகளின் ஒரு சலுகையாகவோ அல்லது இரண்டு வல்லரசுகளுக்கு இடையிலான பிரிவாகவோ இருப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது” என்று தெரிவித்தார். இது அமெரிக்கா மற்றும் சீனாவைக் குறித்து அவர் பேசிய கருத்தாக உள்ளது. மேலும், “ஏஐ மனிதகுலத்தின் நலனுக்காக ஒரு உலகளாவிய கருவியாக மாறுவது முற்றிலும் அவசியம். உலகப் பொருளாதாரத்தில்



மட்டுமல்ல, உலக விவகாரங்களிலும், அதன் செல்வாக்கிலும் பெரிய பங்களிப்பைக்கொண்ட மிகவும் வெற்றிகரமான வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளது. எனவே, இந்த உச்சிமாநாட்டை நடத்துவதற்கும், ஏஐ-யின் மகத்தான ஆற்றல் மற்றும் அதன் அனைத்து ஆபத்துகள் குறித்து ஆழமாக விவாதிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், ஏஐ முழு உலகிற்கும் என்பதை உறுதி செய்வதற்கும் இந்தியா சரியான இடம். உலகில் நாம் தவிர்க்க வேண்டிய இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒரே ஒரு சக்தி அல்லது உலகம் இரண்டு வல்லரசுகளுக்கு இடையில் பிரிக்கப்பட்ட ஒரு அமைப்பின் முழுமையான மேலாதிக்கத்தை நாம் தவிர்க்க வேண்டும். உலகின் பன்முகத்தன்மைக்கு, வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் உயர்ந்த பங்கைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான சமீபத்திய வர்த்தக ஒப்பந்தம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. உலகம் முழுவதும், அனைத்து வளர்ந்த நாடுகளும், வளர்ந்து வரும் பொருளாதாரங்களும் எந்த மேலாதிக்கமும் இல்லாமல் உண்மையான பன்முகத்தன்மையை உருவாக்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலால் முடிவுகளை எடுக்க முடியாமல் போகும்போது எனக்கு ஏற்படும் விரக்தியை நீங்கள் கற்பனை செய்துகொள்ளலாம். மேலும், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இன்று உலகைப் பிரதிநிதித்துவப்படுத்த, பாதுகாப்பு கவுன்சிலின் அடிப்படை சீர்திருத்தம் நமக்குத் தேவை என்பது தெளிவாகிறது என்றார்.